யார் : கர்த்தர்
யாரிடம் : கிதியோனிடம்

4, a. 'இதோ மனாசேயில் என் குடும்பம் மிகவும் எளியது'.
b. 'என் தகப்பன் வீட்டில் நான் எல்லாரிலும் சிறியவன்'. (நியா 6:15)
யார் : கிதியோன்
யாரிடம் : கர்த்தரிடம்

5, 'ஒரே மனுஷனை முறிய அடிப்பதுபோல நீ மீதியானியரை முறிய அடிப்பாய்'. (நியா 6:16)
யார் : கர்த்தர்
யாரிடம் : கிதியோனிடம்

6, 'நான் இன்னும் ஒரே விசை சோதனை பண்ணட்டும்'. (நியா 6:39)
யார் : கிதியோன்
யாரிடம் : தேவனிடம்

7, 'உன்னோடே கூட வரலாம் என்று நான் யாரைக் குறிக்கிறேனோ, அவன் உன்னோடே கூட வரக்கடவன்'. (நியா 7:4)
யார் : கர்த்தர்
யாரிடம் : கிதியோனிடம்

8, 'நான் செய்வதைப் பார்த்து, அப்படியே நீங்களும் செய்யுங்கள்'. (நியா 7:17)
யார் : கிதியோன்
யாரிடம் : இஸ்ரவே- ன் முந்நூறு பேரிடம்

## VI. *ஓரிரு வாக்கியங்களில் விடையளி*:

1, கிதியோன் யார்?

இஸ்ரவேலரை நியாயம் விசாரிக்கும்படியாகவும், அவர்களுடைய சத்துருக்களினின்று அவர்களை விடுதலையாக்கும் படியாகவும் தேவனால் எழுப்பப்பட்ட நியாயாதிபதிகளில் கிதியோனும் ஒருவன். கிதியோன் இஸ்ரவேலரை நாற்பது வருடம் நியாயம் விசாரித்தான். (நியா 8:28)

2, இஸ்ரவேல் புத்திரரை ஏன் மீதியானியர் யையில் ஒப்புக் கொடுத்தார்? எத்தனை வருஷம் ஒப்புக் கொடுத்தார்?

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தார்கள். ஆகையால் கர்த்தர் அவர்களை ஏழுவருஷம் மீதியானியரின் கையில் ஒப்புக்கொடுத்தார். (நியா 6:1)

3, கர்த்தருடைய தூதனானவர் கிதியோனை சந்திக்கும்படியாய் எங்கேவந்துஉட்கார்ந்திருந்தார்? அப்பொழுது கிதியோன் என்ன செய்து கொண்டிருந்தான்?

கர்த்தருடைய தூதனானவர் அபியேஸ்ரியனான யோவாசின் ஊராகிய ஒப்ராவி- ருக்கும் ஒரு கர்வா- மரத்தின் கீழ் உட்கார்ந்திருந்தார்.

கிதியோன் கோதுமையை மீதியானியரின் கைக்குத் தப்புவிக்கிறதற்காக, ஆலைக்குச் சமீபமாய் அதைப் போரடித்துக் கொண்டிருந்தான். (நியா 6:11)

4, கிதியோன். “கர்த்தர் எங்களை கைவிட்டு மீதியானியர் கையில் ஒப்புக் கொடுத்தாரே” என்று சொன்னபோது கர்த்தர் கொடுத்த பதில் என்ன?

கர்த்தர் கிதியோனிடம், ‘‘உனக்கு இருக்கிற இந்தப் பலத்தோடே போ; நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பாய், உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா’’ என்றார். (நியா6:14)

5, கிதியோன் கொண்டுவந்த ஆகாரத்தை கர்த்தருடைய தூதரானவர் தமது கையி- ருந்த கோ- ன் நுனியினால் தொட்ட போது சம்பவித்தது என்ன?

கர்த்தருடைய தூதன் தமது கையி- ருக்கிற கோ- ன் நுனியை நீட்டி, இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பங்களையும் தொட்டார். அப்பொழுது அக்கினி கற்பாறையி- ருந்து எழும்பி, இறைச்சியையும் புளிப்பில்லாத அப்பங்களையும் பட்சித்தது. கர்த்தரின் தூதனோவென்றால், அவன் கண்களுக்கு மறைந்து போனார். (நியா6:21)

6, தன்னோடு பேசினவர் கர்த்தருடைய தூதன் என்று கிதியோன் அறிந்தபோது, அவன் பயந்து சொன்னது என்ன? அவனை தைரியப்படுத்தி கர்த்தருடைய தூதன் சொன்னது என்ன?

கிதியோன் பயந்து, ‘‘ஐயோ, கர்த்தரான ஆண்டவரே, நான் கர்த்தருடைய தூதனை முகமுகமாய் கண்டேனே’’என்றான். அதற்கு கர்த்தர், ‘‘உனக்குச் சமாதானம்; பயப்படாதே, நீ சாவதில்லை’’ என்று சொன்னார். (நியா6:22,23)

7, கிதியோன் தான் கட்டின ப- பீடத்திற்கு என்ன பெயரிட்டான்? அதின் அர்த்தம் யாது?

கிதியோன் கர்த்தருக்கு ஒரு ப- பீடத்தைக் கட்டி, அதற்கு ‘யெகோவா ஷாலோம்’ என்று பேரிட்டான். அதற்கு, ‘கர்த்தர் என் சமாதானம்’ என்று அர்த்தமாகும். (நியா 6:24)

8, கிதியோனுக்கு ஜெயத்தை கொடுக்கும்படியாக, கர்த்தர் யுத்தத்தில் என்ன செய்தார்?

கர்த்தர் பாளயமெங்கும் ஒருவர் பட்டயத்தை ஒருவருக்கு விரோதமாய் ஓங்கப்பண்ணினார். ஆகையால் மீதியானியரின் சேனையானது ஓடிப்போயிற்று. (நியா 7:22)

9, இஸ்ரவேலர் ஓரேப்பையும், சேப்பையும் எங்கே கொன்று போட்டார்கள்? அவர்களுடைய தலையை யாரிடம் கொண்டு வந்தார்கள்?

ஓரேபை ஓரேப் என்னப்பட்ட கன்மலையிலும், சேபை சேப் என்னப்பட்ட ஆலையிலும் கொன்று, அவர்களுடைய தலையை கிதியோனிடம் கொண்டு வந்தார்கள். (நியா 7:25)

## VII. *சுருக்கமான விடையளி*: (5 Marks)

1, கோதுமையை மீதியானியரின் கைக்குத் தப்புவிக்கிறதற்காக ஆலைக்குச் சமீபமாய் அதைப் போரடித்துக்கொண்டிருந்த கிதியோனிடம் கர்த்தருடைய தூதன் கூறியது என்ன? அதற்கு மறுமொழியாக கிதியோன் கூறியது என்ன?

கர்த்தருடைய தூதனானவர், கிதியோனுக்கு தரிசனமாகி, ‘பராக்கிரமசா- யே கர்த்தர் உன்னோடே இருக்கிறார்’என்றார்.

அப்பொழுது கிதியோன் அவரை நோக்கி, ‘‘ஆ என் ஆண்டவனே, கர்த்தர் எங்களோடே இருந்தால், இவையெல்லாம் எங்களுக்கு நேரிடுவானேன்? கர்த்தர் எங்களை எகிப்தி- ருந்து கொண்டுவரவில்லையா என்று எங்கள் பிதாக்கள் எங்களுக்கு விவரித்துச் சொன்ன அவருடைய அற்புதங்களெல்லாம் எங்கே? இப்பொழுது கர்த்தர் எங்களைக் கைவிட்டு, மீதியானியர் கையில் எங்களை ஒப்புக்கொடுத்தாரே’’ என்றான். (நியா 6:12-13)

2, “தன்னோடு பேசுகிறவர் தேவன்தான்” என்பதை அறியும்படிக்கு கிதியோன் கர்த்தருடைய தூதனிடம் கேட்ட அடையாளம் என்ன? கர்த்தருடைய தூதன் கொடுத்த மறு உத்தரவு என்ன?

கிதியோன் கர்த்தருடைய தூதனை நோக்கி ‘‘என்னோடே பேசுகிறவர் தேவரீர்தான் என்று எனக்கு ஒரு அடையாளத்தைக் காட்டவேண்டும். நான் உம்மிடத்திற்கு என் காணிக்கையைக் கொண்டு வந்து, உமக்கு முன்பாக வைக்குமளவும், இவ்விடம் விட்டுப் போகாதிருப்பீராக” என்றான்.

அதற்கு அவர் “நீ திரும்பிவரும் மட்டும் நான் இருப்பேன்” என்றார். (நியா 6:17,18)

3, இஸ்ரவேலரை தன் கையினால் தேவன் இரட்சிப்பார் என்பதற்கு அடையாளமாக கிதியோன் கேட்ட இரண்டு அடையாளங்கள் யாவை?

முதலாவதாக, கிதியோன் தேவனை நோக்கி, “நான் மயிருள்ள ஒரு தோலை களத்திலே போடுகிறேன். பனி தோ- ன் மேல் மாத்திரம் பெய்து, பூமி எல்லாம் காய்ந்திருக்க வேண்டும்” என்றும்,

இரண்டாவதாக, “தோல் மாத்திரம் காய்ந்திருக்கவும், பூமியெங்கும் பனி பெய்திருக்கவும் கட்டளையிடும்”என்றும் கேட்டான். (நியா 6:37-39)

4, மீதியானியருடன் யுத்தத்திற்கு செல்ல வேண்டிய ஜனங்களை தெரிந்தெடுப்பதற்காக கர்த்தர் கிதியோனுக்கு கொடுத்த ஆலோசனை என்ன?

மீதியானியரோடு யுத்தத்திற்கு செல்லும்படியாய், முப்பத்திரண்டாயிரம் பேர் புறப்பட்டார்கள். அப்பொழுது கர்த்தர் கிதியோனிடம், “ஜனங்கள் மிகுதியாயிருக்கிறார்கள். என் கை என்னை ரட்சித்தது என்று இஸ்ரவேல் வீம்பு பேசாதபடிக்கு, பயமும் திகிலும் உள்ளவர்களை போகும்படி பிரசித்தப்படுத்தச் சொன்னார். கிதியோன் பிரசித்தப்படுத்தினபோது இருபத்திரண்டாயிரம் பேர் போய் விட்டார்கள். மீதியாக இருந்த பத்தாயிரம் பேரை தண்ணீரண்டைக்கு இறங்கிப்போகப்பண்ணினார், “அவர்களில் தண்ணீர் ஒரு நாய் நக்கும் பிரகாரமாக தன் கையால் அள்ளி, தங்கள் வாய்க்கெடுத்து, நக்கிக்கொண்ட முந்நூறு பேரோடு யுத்தத்திற்கு போகும்படியாக” ஆலோசனை கூறினார். (நியா 7:1-7)

**VIII**. <u>*போதனை*</u>: (2 ½ Marks)

தேவன் தமக்கு முற்றிலுமாய்த் தங்களை ஒப்புக்கொடுத்து, தம்முடைய ஆலோசனைக்குக் கீழப்படிகிற தம்முடைய ஜனங்கள் கொஞ்சம் பேராயிருந்தாலும், அவர்களுக்குப் பெரிய ஜெயத்தைக் கட்டளையிடுவார்.

************

வகுப்பு : 5

பாடம்-5



# சிம்சோன்

(நியா, அதி 13 ; 15:20)

**I.** ***மனப்பாட வசனம்***: (2 ½ Marks)

நீதிமொழிகள் 8 : 32, 33

ஆதலால் பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள் என் வழிகளைக் காத்து நடக்கிறவர்கள் பாக்கியவான்கள்.

நீங்கள் புத்தியைக் கேட்டு ஞானமடையுங்கள் அதை விட்டு விலாகாதிருங்கள்.

**II.** ***பொருத்துக***: (1 Mark)

| | | | |
|---|---|---|---|
| 1. மனோவா | - | சோரா ஊர் | (நியா 13:2) |
| 2. சிம்சோன் | - | தாண் கோத்திரம் | (நியா 13:2) |
| 3. சிம்சோன் | - | சவரகன் கத்தி | (நியா 13:5) |
| 4. சிம்சோன் | - | தேவனுக்கென்று நசரேயன் | (நியா 13:5) |
| 5. கர்த்தருடைய தூதனின் நாமம் | - | அதிசயம் | (நியா 13:18) |
| 6. கர்த்தருடைய தூதன் | - | அக்கினி ஜுவாலை | (நியா 13:20) |

**III.** ***கோடிட்ட இடத்தை நிரப்புக***: (1 Mark)

1. மனோவா ______________வம்சத்தான்.
2. அந்தப்பிள்ளை பிறந்தது முதல் தன் மரணநாள் மட்டும் தேவனுக்கென்று ______________ இருப்பான்
3. மனோவா வெள்ளாட்டுக்குட்டியையும் ______________ கர்த்தருக்குச் செலுத்தும்போது கர்த்தருடைய தூதனானவர் ப- பீடத்தின் ______________ ஏறிப்போனார்.
4. கர்த்தருடைய தூதன் மனோவாவிடம், தன் நாமம் ______________என்றான்.
5. மனோவாவின் மனைவி ஒரு குமாரனைப் பெற்று அவனுக்கு ______________ என்று பேரிட்டாள்.

<u>விடைகள்</u>

1. தாண் (நியா 13:2)
2. நசரேயனாய் (நியா 13:7)
3. போஜன ப- யையும், ஜுவாலையிலே ( நியா 13:20 )
4. அதிசயம் (நியா 13:18)
5. சிம்சோன் (நியா 13:24)

**IV.** ***ஒரே வார்த்தையில் விடை எழுது:*** (2 Mark)

1, கர்த்தர் இஸ்ரவேலரை பெ- ஸ்தரின் கையில் எத்தனை வருடம் ஒப்புக்கொடுத்தார்?

40 வருடம் (நியா 13:1)

2, தாண் வம்சத்தானாகிய மனோவா எந்த ஊரான்?

சோரா (நியா 13:2)

3, சிம்சோன் எந்த கோத்திரத்தைச் சேர்ந்தவன்?
தாண் (நியா 13:2)

4, ஒரு குமாரனைப் பெறுமளவும். “நீ திராட்சரசமும் மதுபானமும் குடியாதபடிக்கும். தீட்டானது ஒன்றும் புசியாதபடிக்கும் எச்சரிக்கையாயிரு” என்று கர்த்தருடைய தூதனானவர் யாருடைய மனைவியடம் கூறினார்?
மனோவாவின் மனைவிடம் (நியா 13:5)

5, மனோவாவின் மனைவி ஒரு ஆண்பிள்ளையைப் பெற்று அதற்கு என்ன பேரிட்டாள்?
சிம்சோன் (நியா 13:24)

6, சிம்சோன் எந்த பாளயத்தில் இருக்கையில் கர்த்தருடைய ஆவியானவர் அவனை ஏவத்துவக்கினார்?
தாண் (நியா 13:25)

7, சிம்சோன் இஸ்ரவேலரை எத்தனை வருடம் நியாயம் விசாரித்தான்?
இருபது (நியா 15:20)

**V. *<u>யார், யாரிடம் கூறியது</u>*:** (3 Marks)

1, a. ‘இதோ பிள்ளைபெறாத மலடியான நீ கர்ப்பந்தரித்து. ஒரு குமாரனைப் பெறுவாய்’. (நியா 13:3)

b. ‘அவன் தலையின்மேல் சவரகன் கத்தி படலாகாது’. (நியா 13:5)

c. ‘அவன் இஸ்ரவேலைப் பெ- ஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிக்கத் தொடங்குவான்’. (நியா 13:5)

யார் : கர்த்தருடைய தூதனானவர்
யாரிடம் : மனோவாவின் மனைவியிடம்

2, ‘தேவனுடைய மனுஷன் ஒருவர் என்னிடத்தில் வந்தார்’. (நியா 13:6)
யார் : மனோவாவின் மனைவி
யாரிடம் : மனோவாவிடம்

3, a. ‘நீ திராட்சரசமும் மதுபானமும் குடியாமலும். தீட்டானது ஒன்றும் புசியாமலும் இரு’.

b. ‘அந்தப் பிள்ளை பிறந்தது முதல் தன் மரணநாள் மட்டும் தேவனுக்கென்று நசரேயனாயிருப்பான்’. (நியா 13:7)

யார் : மனோவாவின் மனைவி தேவனுடைய மனுஷன் ஒருவர் தன்னிடம் கூறியதாக சொன்னது
யாரிடம் : மனோவாவிடம்

4, ‘அந்தப் பிள்ளையை எப்படி வளர்க்க வேண்டும். அதை எப்படி நடத்த வேண்டும்’. (நியா 13:12)
யார் : மனோவா
யாரிடம் : கர்த்தருடைய தூதனிடம்

5, ‘நீ சர்வாங்க தகனப- இடவேண்டுமானால். அதை நீ கர்த்தருக்குச் செலுத்துவாயாக’. (நியா 13:16)
யார் : கர்த்தருடைய தூதன்
யாரிடம் : மனோவாவிடம்

6, ‘நீர் சொன்ன காரியம் நிறைவேறும் போது நாங்கள் உம்மைக் கனம்பண்ணும்படி.

உம்முடைய நாமம் என்ன?'. (நியா 13:17)

யார் : மனோவா

யாரிடம் : கர்த்தருடைய தூதனிடம்

## VI. *ஓரிரு வாக்கியங்களில் விடையளி*:

1, சிம்சோன் பிறப்பதற்கு முன்பு இஸ்ரவேலர் எப்படிப்பட்டவர்களாயிருந்தார்கள்? கர்த்தர் அவர்களை யாருடைய கையில் எத்தனை வருடம் ஒப்புக்கொடுத்திருந்தார்?

இஸ்ரவேல் புத்திரர் கர்த்தரின் பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்து கொண்டிருந்தார்கள். ஆகையால் கர்த்தர் அவர்களை நாற்பது வருஷம் பெ- ஸ்தர் கையில் ஒப்புக்கொடுத்திருந்தார். (நியா 13:1)

2, சிம்சோனின் தகப்பனின் பெயர் என்ன? அவன் எந்த கோத்திரத்தை சேர்ந்தவன்?

சிம்சோனின் தகப்பன் பெயர் மனோவா. அவன் தாண் கோத்திரத்தை சேர்ந்தவன். ( நியா 13:2 )

3, தேவனுடைய மனுஷன் தன்னை சந்தித்ததைப் பற்றி மனோவாவின் மனைவி அவனிடம் கூறியபோது. மனோவா கர்த்தரை நோக்கி எவ்வாறு விண்ணப்பம் பண்ணினான்?

மனோவா கர்த்தரை நோக்கி, "ஆ என் ஆண்டவரே, நீர் அனுப்பின தேவனுடைய மனுஷன் மறுபடியும் ஒரு விசை எங்களிடத்தில் வந்து, பிறக்கப்போகிற பிள்ளைக்காக நாங்கள் செய்ய வேண்டியதை எங்களுக்குக் கற்பிப்பாராக", என்று விண்ணப்பம் பண்ணினான். (நியா 13:8)

4, மனோவா கர்த்தருடைய தூதனானவரை போஜனம் பண்ணும்படி அழைத்த போது தூதன் கொடுத்த பதில் என்ன?

கர்த்தருடைய தூதனானவர் மனோவாவை நோக்கி, "நீ என்னை இருக்கச்சொன்னாலும் நான் உன் உணவைப் புசியேன்; நீ சர்வாங்க தகனப- இடவேண்டுமானால், அதை நீ கர்த்தருக்குச் செலுத்துவாயாக," என்றார். (நியா 13:16)

5, சிம்சோன் கைக்கொள்ள வேண்டிய பிரதிஷ்டைகளைப் பற்றி கர்த்தருடைய தூதன் கூறியது என்ன?

சிம்சோன் பிறந்தது முதல் தன் மரணநாள் மட்டும் தேவனுக்கென்று நசரேனாயிருக்க வேண்டும்.அவன் தலையின்மேல் சவரகன் கத்தி படலாகாது என்று அவன் கைக்கொள்ளவேண்டிய பிரதிஷ்டைகளைப்பற்றி கர்த்தருடைய தூதன் கூறினார்.(நியா 13:5,7)

## VII. *சுருக்கமான விடையளி*: (5 Marks)

1, மனோவாவின் மனைவி தன் குமாரனாகிய சிம்சோனைப் பெறுமளவும் கைக்கொள்ள வேண்டிய பிரதிஷ்டைகளைப் பற்றி கர்த்தருடைய தூதன் அவளிடம் கூறியது என்ன?

மனோவாவின் மனைவி தன் குமாரனாகிய சிம்சோனைப் பெறுமளவும், திராட்சச் செடியிலே உண்டாகிறதொன்றும் சாப்பிடாமலும், திராட்சரசமும் மதுபானமும் குடியாமலும், தீட்டானதொன்றும் புசியாமலும் எச்சரிக்கையாயிருக்க வேண்டும் என்று கர்த்தருடைய தூதன் அவளிடம் கூறினார். (நியா 13:14)

**VIII** ***விரிவான விடையளி***:

**1.** மனோவா தேவ தூதனை எவ்வாறு உபசரித்தான்?

i. கர்த்தருடைய தூதன் மனோவாவிடம் பிள்ளையை எவ்வாறு வளர்க்கவேண்டும் என்று ஆலோசனை கூறினான். அதன் பின்பு, மனோவா கர்த்தருடைய தூதனை நோக்கி, "நாங்கள் ஒரு வெள்ளாட்டுக்குட்டியை உமக்காகச் சமைத்துக்கொண்டு வருமட்டும் தரித்திரும்" என்றான். அவர் கர்த்தருடைய தூதன் என்று மனோவா அறியாதிருந்தான்.

ii. அப்பொழுது கர்த்தருடைய தூதனானவர் மனோவாவை நோக்கி, "நீ என்னை இருக்கச்சொன்னாலும் நான் உன் உணவைப்புசியேன். நீ சர்வாங்க தகனப- இடவேண்டுமானால், அதை நீ கர்த்தருக்குச் செலுத்துவாயாக'' என்றார்.

iii. உடனே மனோவா போய், வெள்ளாட்டுக்குட்டியையும், போஜனப- யையும் கொண்டுவந்து, அதைக் கன்மலையின் மேல் கர்த்தருக்குச் செலுத்தினான். அக்கினி ஜுவலை ப- பீடத்தி- ருந்து வானத்திற்கு நேராக எழும்பினது. கர்த்தருடைய தூதனானவர் ப- பீடத்தின் ஜுவாலையிலே ஏறிப்போனார். அப்பொழுது அவர் கர்த்தருடைய தூதன் என்று மனோவா அறிந்து கொண்டான். இவ்வாறாக மனோவா கர்த்தருடைய தூதனை உபசரித்தான். (நியா 13:15-21)

**IX** ***போதனை***: (2 1/2 Marks)

தேவனுடைய பிள்ளைகள் ஒவ்வொருவரையும் குறித்து தேவனுக்குப் பெரிதான ஒரு திட்டம் உண்டு. நம்முடைய ஜீவியத்தைக் குறித்த தேவனுடைய திட்டம் நிறைவேற்றப்படும்படியாக நாம் ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

**************

வகுப்பு : 5

பாடம்-6

# மோவாபில் ரூத்

(ரூத் 1:1-18 ;4 : 9, 10, 17)

**I.** ***மனப்பாட வசனம்:*** (2 ½ Marks)

பி- ப்பியர் 1:29.30

ஏனெனில் கிறிஸ்துவினிடத்தில் விசுவாசிக்கிறதற்குமாத்திரமல்ல, அவர் நிமித்தமாகப் பாடுபடுகிறதற்கும் உங்களுக்கு அருளப்பட்டிருக்கிறது.

நீங்கள் என்னிடத்திலே கண்டதும் எனக்கு உண்டென்று இப்பொழுது கேள்விப்படுகிறதுமான போராட்டமே உங்களுக்கும் உண்டு.

**II.** ***பொருத்துக:*** (1 Mark)

| | | | | |
|---|---|---|---|---|
| 1. | எ- மெலேக்கின் மனைவி | - | நகோமி | (ரூத் 1:2) |
| 2. | எ- மெலேக்கின் குமாரன் | - | மக்லோன் | (ரூத் 1:2) |
| 3. | எ- மெலேக்கின் குமாரன் | - | கி- யோன் | (ரூத் 1:2) |
| 4. | மக்லோனின் மனைவி | - | ரூத் | (ரூத் 4:10) |
| 5. | கி- யோனின் மனைவி | - | ஓர்பாள் | (ரூத் 1:4) |
| 6. | ரூத் | - | மனஉறுதி | (ரூத் 1:18) |
| 7. | ரூத் | - | மோவாபிய பெண் | (ரூத் 1:4) |
| 8. | ஓர்பாள் | - | மோவாபிய பெண் | (ரூத் 1:4) |
| 9. | போவாஸ் | - | மிகுந்த ஆஸ்திக்காரன் | (பாடத்திட்டம்) |
| 10. | ரூத்தின் குமாரன் | - | ஓபேத் | (ரூத் 4:17) |
| 11. | ஈசாயின் தகப்பன் | - | ஓபேத் | (ரூத் 4:17) |
| 12. | தாவீதின் தகப்பன் | - | ஈசாய் | (ரூத் 4:17) |

**III.** ***கோடிட்ட இடத்தை நிரப்புக:*** (1 Mark)

1. யூதா தேசத்திலே பஞ்சம் உண்டான போது, எ- மெலேக்கு தன் மனைவியோடும் இரண்டு குமாரரோடுங்கூட ________________ தேசத்திலே போய்ச் சஞ்சரித்தான்.
2. எ- மெலேக்கு ________________ ஊரான்.
3. கர்த்தர் தம்முடைய ஜனங்களைச் சந்தித்து, அவர்களுக்கு ________________ அருளினார் என்று நகோமி கேள்விப்பட்டாள்.
4. நகோமி தன் இரண்டு மருமக்களோடுங்கூட________________ தேசத்தை விட்டு, ________________ தேசத்திற்கு போகப்புறப்பட்டாள்.
5. நகோமி , __________________ , ______________ தங்கள் தாய்வீட்டுக்குக் திரும்பிப் போகும்படி கூறினாள்.
6. ________________தன் மாமியாகிய நகோமியை முத்தமிட்டுப் போய்விட்டாள்.
7. ________________ நகோமியை விடாமல் பற்றிக்கொண்டாள்.
8. ருத் கானானில் மிகுந்த ஆஸ்திக்காரனாயிருந்த ________________ விவாகம் செய்து கொண்டாள்.

விடைகள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | மோவாப் | (ரூத் 1:1) | 5. | ரூத்தையும், ஓர்பாளையும் | (ரூத் 1:8) |
| 2. | பெத்லகேம் | (ரூத் 1:2) | 6. | ஓர்பாள் | (ரூத் 1:14) |
| 3. | ஆகாரம் | (ரூத் 1:6) | 7. | ரூத் | (ரூத் 1:14) |
| 4. | மோவாப், யூதா | (ரூத் 1:7) | 8. | போவாஸை | (ருத் 4 : 10) |

**IV.** ***ஒரே வார்த்தையில் விடை எழுது:*** (2 Mark)

1, யூதா தேசத்தில் பஞ்சம் உண்டானபோது எ- மெலேக்கு எந்த தேசத்தில் போய்ச் சஞ்சரித்தான்?
மோவாப் (ரூத் 1:1)

2, எ- மெலேக்கின் இரண்டு குமாரர்கள் யார்?
மக்லோன், கிலியோன் (ரூத் 1:2)

3, நகோமியின் இரண்டு மருமக்களின் பெயர் என்ன?
ஓர்பாள், ரூத் (ரூத் 1:4)

4, மோவாப் தேசத்தில் நகோமி எத்தனை வருஷங்கள் வாசம் பண்ணினாள்?
ஏறக்குறைய பத்து வருஷம் (ரூத் 1:4)

5, தன் குமாரர் இருவரையும். தன் புருஷனையும் இழந்து தனித்தவளான ஸ்திரீ யார்?
நகோமி (ரூத் 1:5

6, கர்த்தருடைய கை எனக்கு விரோதமாக இருக்கிறது என்று கூறியது யார்?
நகோமி (ரூத் 1:13)

7, "உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம் உம்முடைய தேவன் என்னுடைய தேவன்" என்று நகோமியிடம் கூறியது யார்?
ரூத் (ரூத் 1:16)

8, "நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப் போவதைக் குறித்து என்னோடே பேச வேண்டாம்" என்று நகோமியிடம் கூறியது யார்?
ரூத் (ரூத் 1:16)

9, "மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மைவிட்டு என்னைப் பிரித்தால். கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்" என்று நகோமியிடம் கூறியது யார்?
ரூத் (ரூத் 1:17)

**V.** ***யார், யாரிடம் கூறியது***: (3 Marks)

1, a. 'நீங்கள் இருவரும் உங்கள் தாய்வீட்டுக்குத் திரும்பிப்போங்கள்'.
b. 'மரித்துப்போனவர்களுக்கும் எனக்கும் நீங்கள் தயைசெய்தது போல. கர்த்தர் உங்களுக்கும் தயை செய்வாராக'. (ரூத் 1:8)
யார் : நகோமி
யாரிடம் : தன் இரண்டு மருமக்களையும் நோக்கிக் கூறியது.

2, 'கர்த்தர் உங்கள் இருவருக்கும் வாய்க்கும் புருஷனுடைய வீட்டிலே நீங்கள் சுகமாய் வாழ்ந்திருக்கச் செய்வாராக'. (ரூத் 1:9)
யார் : நகோமி
யாரிடம் : ஓர்பாள், ரூத் இருவரையும் நோக்கிக் கூறியது

3, 'உம்முடைய ஜனத்தண்டைக்கே உம்முடன்கூட வருவோம்'. (ரூத் 1:10)
யார் : ஓர்பாளும், ரூத்தும்
யாரிடம் : நகோமியிடம்

4, 'என் மக்களே. நீங்கள் திரும்பிப்போங்கள்; என்னோடே ஏன் வருகிறீர்கள்?'. (ரூத் 1:11)
யார் : நகோமி
யாரிடம் : தன் இரண்டு மருமக்களிடம் கூறியது

5, a. 'இதோ. உன் சகோதரி தன் ஜனங்களிடத்துக்கும் தன் தேவர்களிடத்துக்கும் திரும்பிப் போய்விட்டாளே'.
b. 'நீயும் உன் சகோதரியின் பிறகே திரும்பிப்போ'. (ரூத் 1:15)
யார் : நகோமி
யாரிடம் : ரூத்திடம்

6, a. ‘நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப் போவதைக்குறித்து. என்னோடே பேசவேண்டாம்’. (ரூத் 1:16)

b. ‘நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்’. (ரூத் 1:16)

c. ‘உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன்’. (ரூத் 1:16)

d. ‘நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து. அங்கே அடக்கம் பண்ணப்படுவேன்’.

e. ‘மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மைவிட்டு என்னைப் பிரித்தால். கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்’. (ரூத் 1:17)

யார் : ரூத்

யாரிடம் : நகோமியிடம்

## VI. *ஓரிரு வாக்கியங்களில் விடையளி*:

1, எ- மெலேக்கு எங்கிருந்து எங்கு போய்ச் சஞ்சரித்தான்? ஏன்?

பெத்லேகேமில் பஞ்சம் ஏற்பட்டது. ஆகையால் எ- மெலேக்கு பெத்லெகேமி- ருந்து மோவாப் தேசத்திலே போய்ச் சஞ்சரித்தான். (ரூத் 1:1)

2, நகோமியின் மகன்கள். மருமகள்கள் பெயர்களை எழுது,

மூத்த மகன் பெயர் மக்லோன். அவன் மனைவி பெயர் ரூத். (ரூத் 4:10)

இளைய மகன் பெயர் கி- யோன். அவன் மனைவி பெயர் ஓர்பாள். (ரூத் 1:2,4)

3, நகோமியின் குடும்பத்திற்கு மோவாபில் சம்பவித்தது என்ன?

முதலாவதாக அவளுடைய கணவனான எ- மெலேக்கும் பின்பு அவளுடைய இருகுமாரர்களும் இறந்து போனார்கள். நகோமி தன் குமாரர் இருவரையும் தன் புருஷனையும் இழந்து தனித்தவளானாள். (ரூத் 1:3,5)

4, நகோமி ஏன் பெத்லெகேமுக்கு போகப் புறப்பட்டாள்?

நகோமி கர்த்தர் தம்முடைய ஜனங்களைச் சந்தித்து, அவர்களுக்கு ஆகாரம் அருளினார் என்று கேள்விப்பட்டு,தன் மருமக்களோடேகூட மோவாப் தேசத்தைவிட்டு பெத்லெகேமுக்குப் போகப்புறப்பட்டாள். (ரூத் 1:6)

5, நகோமி மோவாப் தேசத்தில் எத்தனை வருடங்கள் வாசம் பண்ணினாள்? அவளுடைய மருமக்கள் எந்த தேசத்தைச் சேர்ந்தவர்கள்?

நகோமி ஏறக்குறையப் பத்துவருஷம் மோவாப் தேசத்தில் வாசம்பண்ணினாள். அவளுடைய மருமக்கள் மோவாப் தேசத்தைச் சேர்ந்தவர்கள். (ரூத் 1:4)

6. கானான் தேசத்திற்கு வந்த ரூத் யாரை விவாகம் செய்து கொண்டாள்? அவளுடைய குமாரன் யார்?

ரூத் கானானில் மிகுந்த ஆஸ்திக்காரனாயிருந்த போவாஸை விவாகம் செய்து கொண்டாள். அவளுடைய குமாரன் ஒபேத் .( ரூத் 4:10,17)

## VII. *சுருக்கமான விடையளி* (5 Marks)

1, நகோமி தன்னோடேகூட பெத்லெகேமுக்குப் புறப்பட்ட தன் இரண்டு மருமக்களையும் நோக்கிச் சொன்னது என்ன? அதற்கு அவர்கள் கூறிய பதில் என்ன?

நகோமி தன் இரண்டு மருமக்களையும் நோக்கி, “நீங்கள் இருவரும் உங்கள் தாய்வீட்டுக்குத் திரும்பிப் போங்கள்; மரித்துப்போனவர்களுக்கும் எனக்கும் நீங்கள்

தயைசெய்ததுபோல, கர்த்தர் உங்களுக்கும் தயைசெய்வாராக"என்றாள். அப்பொழுது அவர்கள் சத்தமிட்டு அழுது, அவளைப் பார்த்து, உம்முடைய ஜனத்தண்டைக்கே உம்முடன் கூட வருவோம் என்றார்கள். அதற்கு நகோமி, என் மக்களே நீங்கள் திரும்பிப்போங்கள். என்னோடே ஏன் வருகிறீர்கள்? உங்களுக்குப் புருஷராகும் படிக்கு, இனிமேல் என் கர்ப்பத்திலே எனக்குப் பிள்ளைகள் உண்டாகுமோ? கர்த்தருடைய கை எனக்கு விரோதமாயிருக்கிறதினால் உங்கள் நிமித்தம் எனக்கு மிகுந்த விசனம் இருக்கிறது என்றாள். அப்பொழுது ஓர்பாள் தன் மாமியை முத்தமிட்டுப் போனாள். ரூத்தோ அவளைவிடாமல் பற்றிக்கொண்டாள். (ரூத் 1:8-14)

2, நகோமி ரூத்தை நோக்கி. "நீயும் உன் சகோதரியின் பிறகே திரும்பிப்போ" என்று சொன்ன போது. ரூத் கூறிய தீர்மானபதில் என்ன?

ரூத் நகோமியிடம், "நான் உம்மைப் பின்பற்றாமல் உம்மைவிட்டுத் திரும்பிப்போவதைக் குறித்து, என்னோடே பேசவேண்டாம். நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன்; நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன்; உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம்; உம்முடைய தேவன் என்னுடைய தேவன். நீர் மரணமடையும் இடத்தில் நானும் மரணமடைந்து, அங்கே அடக்கம் பண்ணப்படுவேன்; மரணமேயல்லாமல் வேறொன்றும் உம்மைவிட்டு என்னைப் பிரித்தால், கர்த்தர் அதற்குச் சரியாகவும் அதற்கு அதிகமாகவும் எனக்குச் செய்யக்கடவர்" என்றாள். (ரூத் 1:16,17)

3. இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின்க் கீழ் அடைக்கலமாய் வந்த மோவாபிய ஸ்திரீயாகிய ரூத்தை கர்த்தர் எவ்வாறு ஆசீர்வதித்தார்?

   1. ரூத் கானானில் மிகுந்த ஆஸ்திக்காரனாயிருந்த போவாஸை விவாகம் செய்துகொண்டாள். (ரூத் 4 : 9, 10)
   2. இஸ்ரவேலின் மிகப்பெரிய ராஜாவாகிய தாவீது அவளுடைய வம்சவழியிலேயே பிறந்தான். (ரூத் 4:,17)

**VIII.** ***<u>போதனை</u>***: (2 ½ Marks)

ரூத் நகோமியைப் பின்பற்றினது போல நாமும் பரிசுத்தவான்களைப் பின்பற்றி, கஷ்ட நஷ்டங்களிலுங் கூட அவர்களுடைய ஐக்கியத்தில் நிலைத்திருக்க வேண்டும்

***********

ஞாயிறு பள்ளி

வகுப்பு : 5

பாடம்-7

# சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான்.

( 1 சாமுவேல் அதி : 1 ; 2 : 18 ; அதி. 3)

**I** *<u>மனப்பாட வசனம் :</u>* (2 ½ Marks)

<u>சங்கீதம் : 85 : 8</u>

கர்த்தராகிய தேவன் விளம்புவதைக் கேட்பேன்; அவர் தம்முடைய ஜனங்களுக்கும் தம்முடைய பரிசுத்தவான்களுக்கும் சமாதானம் கூறுவார்; அவர்களோ மதிகேட்டுக்குத் திரும்பாதிருப்பார்களாக.

**II** *<u>பொருத்துக :</u>* (1 Mark)

| | | |
|---|---|---|
| **1.** எல்க்கானா | - | ராமதாயீம் ஊரான் (1 சாமு 1 : 1) |
| **2.** எல்க்கானா | - | எரோகாமின் புத்திரன (1 சாமு 1 : 1) |
| **3.** பெனின்னாள் | - | எல்க்கானாவின் மனைவி (1 சாமு 1 : 2) |
| **4.** அன்னாள் | - | எல்க்கானாவின் மனைவி (1 சாமு 1 : 2) |
| **5.** அன்னாள் | - | இரட்டிப்பான பங்கு ( 1 சாமு 1 : 6) |
| **6.** அன்னாள் | - | மனக்கிலேசமுள்ள ஸ்தீரி (1 சாமு 1 : 15) |
| **7.** சாமுவேல் | - | சணல் நூல் ஏபோத் (1 சாமு 2 : 18) |
| **8.** சாமுவேல் | - | கர்த்தருடைய பணிவிடைக்காரன் ( 1 சாமு 3 : 1) |
| **9.** சாமுவேல் | - | கர்த்தருடைய தீர்க்கதரிசி ( 1 சாமு 3 : 20) |
| **10.** ஏலி | - | கர்த்தரின் ஆசாரியன் ( 1 சாமு 1 : 3) |
| **11.** ஓப்னி | - | ஏலியின் குமாரன் ( 1 சாமு 1 : 3) |
| **12.** பினெகாஸ் | - | ஏலியின் குமாரன் ( 1 சாமு 1 : 3) |
| **13.** சீலோ | - | கர்த்தருடைய ஆலயம் ( 1 சாமு 1: 24) |

**III** *<u>கோடிட்ட இட□களை நிரப்புக :</u>* (1 Mark)

**1.** ____________________சீலோவிலே சேனைகளின் கர்த்தரைப் பணிந்து கொள்ளவும் அவருக்குப் பலியிடவும் வருஷந்தோறும் போய் வருவான்.

**2.** ____________________மனங்கசந்து மிகவும் அழுது கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான்.

.

**3.** அன்னாள் கர்த்தருடைய சந்நிதியில் தன் ____________________ஊற்றி விட்டாள்.

**4.** அன்னாள் ஒரு குமாரனைப் பெற்று கர்த்தரிடத்தில் அவனைக் கேட்டேன் என்று சொல்லி அவனுக்கு ____________ என்று பேரிட்டாள்.

**5.** __________________ கர்த்தருக்கென்று கேட்கப்பட்டபடியினால் அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் அவனைக் __________________ ஒப்புக் கொடுக்கிறேன் என்று அன்னாள் ஏலியிடம் கூறினாள்.

**6.** ஏலியின் நாட்களில் கர்த்தருடைய __________________ அபூர்வமாயிருந்தது. . பிரத்தியட்சமான __________________ இருந்ததில்லை.

**7.** _________________தன் குமாரர் தங்கள் மேல் சாபத்தை வரப்பண்ணுகிறதை அறிந்திருந்தும், அவர்களை __________________ போனான்.

**8.** ஏலியின் குடும்பத்தார் செய்த அக்கிரமம் ஒரு போதும் ___________________ , ___________________ நிவர்த்தியாவதில்லை என்று கர்த்தர் ஆணையிட்டார்.

**9.** __________________தம்முடைய எல்லா வார்த்தைகளிலும் ஒன்றையாகிலும் தரையிலே விழுந்து போகவில்லை.

10. ________________ கர்த்தருடைய தீர்க்கதரிசி தான் என்று தாண் முதல் பெயர்செபா மட்டுமுள்ள சகல இஸ்ரவேலருக்கும் விளங்கினது .

**விடைகள்**

| | |
|---|---|
| 1. எல்க்கானா (1 சாமு 1 : 3) | 6. வசனம், தரிசனம் (1 சாமு 3 : 1) |
| 2. அன்னாள் (1 சாமு 1 : 10) | 7. ஏலி, அடக்காமல் (1 சாமு 3 : 13) |
| 3. இருதயத்தை (1 சாமு 1 : 15) | 8. பலியினாலாவது , காணிக்கையினாலாவது (1 சாமு3 : 14) |
| 4. சாமுவேல் (1 சாமு 1 : 20) | 9. கர்த்தர் (1 சாமு 3 : 19) |
| 5. சாமுவேல், கர்த்தருக்கென்று (1சாமு 1 : 28) | 10. சாமுவேல் (1 சாமு 3 : 20) |

**IV** *ஒரே வார்த்தையில் விடை எழுது :* (2 Mark)

1. கர்த்தருடைய ஆலயத்தின் வாசல் நிலையண்டையிலே ஒரு ஆசனத்தின் மேல் உட்கார்ந்திருந்த ஆசாரியன் யார்?
   ஏலி (1 சாமு 1 : 9)

2. கர்த்தர் சாமுவேலை எத்தனை முறை கூப்பிட்டார்?
   நான்கு முறை (பாடத்திட்டம்)

3. கர்த்தர் யாருடைய குடும்பத்திற்கு என்றும் நீங்காத நியாயத்தீர்ப்பு செய்வேன் என்று சாமுவேலிடம் கூறினார்?
   ஏலியின் குடும்பம் (1 சாமு 3 : 13)

4. கர்த்தர் சாமுவேலுக்கு எங்கு தரிசனம் தந்தருளினார்?
   சீலோவில் (1 சாமு 3 : 21)

5. சணல் நூல் ஏபோத்தைத் தரித்தவனாய்க் கர்த்தருக்கு முன்பாகப் பணிவிடை செய்த பிள்ளையாண்டான் யார்?
   சாமுவேல் (1 சாமு 2 : 18)

**V** *யார் யாரிடம் கூறியது :* (3 Marks)

1. "பத்துக் குமாரரைப் பார்க்கிலும் நான் உனக்கு அதிகமல்லவா". (1 சாமு 1 : 8)
   யார் : எல்க்கானா
   யாரிடம் : அன்னாளிடம்

2. "அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக் கொடுப்பேன". (1 சாமு 1 : 11)
   யார் : அன்னாள்
   யாரிடம் : கர்த்தரிடம்

3. **a.** "என் ஆண்டவனே, நான் மனக்கிலேசமுள்ள ஸ்தீரி".
   **b.** "நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன்". (1 சாமு 1 : 15)
   யார் : அன்னாள்
   யாரிடம் : ஏலியிடம்

4. "மிகுதியான விசாரத்தினாலும் கிலேசத்தினாலும் இந்நேரமட்டும் விண்ணப்பம் பண்ணினேன்" . (1 சாமு 1 : 16)
   யார் : அன்னாள்
   யாரிடம் : ஏலியிடம்

5. "கர்த்தர் தம்முடைய வார்த்தையை மாத்திரம் நிறைவேற்றுவாராக". (1 சாமு 1 : 23)
   யார் :எல்க்கானா யாரிடம் :அன்னாளிடம்

6. a.“நான் கர்த்தரிடத்தில் கேட்ட என் விண்ணப்பத்தின் படி எனக்குக் கட்டளையிட்டார் ”. (1 சாமு 1 : 27)

b. “அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கே ஒப்புக் கொடுக்கிறேன்”. (1 சாமு 1 : 28)

யார் : அன்னாள்
யாரிடம் : ஏலியிடம்.

7. “சொல்லும் அடியேன் கேட்கிறேன”. (1 சாமு 3 : 10)

யார் : சாமுவேல்
யாரிடம் : கர்த்தரிடம்.

8. “கர்த்தர் உன்னிடத்தில் சொன்ன காரியம் என்ன? ” (1 சாமு 3 : 17)

யார் : ஏலி
யாரிடம் : சாமுவேலிடம்

9. “அவர் கர்த்தர் ; அவர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக”, (1 சாமு 3 : 18)

யார் : ஏலி
யாரிடம் : சாமுவேலிடம்

VI *சுருக்கமான விடையளி* :

1. எல்க்கானா எந்த ஊரில் தன் குடும்பத்துடன் வசித்து வந்தான்?
எல்க்கானா பாலஸ்தீனாவில் சோப்பீம் எனப்பட்ட ராமதாயீம் ஊரில் தன் குடும்பத்துடன் வசித்து வந்தான். (1 சாமு 1 : 1)

2. எல்க்கானாவுக்கு எத்தனை மனைவிகள் இருந்தார்கள்? அவர்கள் பெயர் என்ன ?
எல்க்கானாவுக்கு இரண்டு மனைவிகள் இருந்தார்கள். அவர்கள் பெயர் அன்னாள், பெனின்னாள். (1 சாமு 1 : 2)

3. எல்க்கானாவின் மனைவிகளில் யாருக்கு பிள்ளைகள் இருந்தது? யாருக்கு பிள்ளைகள் இல்லை?
பெனின்னாளுக்குப் பிள்ளைகள் இருந்தது. அன்னாளுக்கு பிள்ளைகள் இல்லை. (1 சாமு 1 : 2)

4. அன்னாளுக்கு பிள்ளையில்லாதிருந்தபடியால் அவளை மிகவும் விசனப்படுத்தியது யார்? அவளை ஆறுதல்படுத்தியது யார்?
அன்னாளுக்குப் பிள்ளையில்லாதிருந்தபடியால் அவளுடைய சக்காளத்தியாகிய பெனின்னாள் அவளை மிகவும் விசனப்படுத்தினாள். ஆனால் அவள் புருஷனாகிய ஏல்க்கானா அவளை ஆறுதல்படுத்தினான். (1 சாமு 1 : 6,8)

5. எல்க்கானா யாரை சிநேகித்தான்? சிநேகித்தபடியினால் அவளுக்கு என்ன கொடுத்தான்?
எல்க்கானா அன்னாளை சிநேகித்தான். ஆகையால் பலியிடும் நாளில் அவளுக்கு இரட்டிப்பான பங்கு கொடுத்தான். (1 சாமு 1 : 5)

6. அன்னாளின் மனக்கிலேசத்தை விளங்கிக் கொண்ட ஏலி அவளை எவ்வாறு ஆசீர்வதித்தான்?
அன்னாளின் மனக்கிலேசத்தை விளங்கிக் கொண்ட ஏலி, அன்னாளை நோக்கி, ‘‘சமாதானத்துடனே போ, நீ இஸ்ரவேலின் தேவனிடத்தில் கேட்ட உன் விண்ணப்பத்தின்படி அவர் உனக்குக் கட்டளையிடுவாராக’’ என்றான். (1 சாமு 1 : 17).

7. அன்னாள் எதற்காக காமுவேலை சீலோவில் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டு போய் விட்டாள்?
சாமுவேல் கர்த்தரின் சந்நிதியிலே காணப்படவும், அங்கே எப்பொழுதும் இருக்கவும் தான் பண்ணிய பொருத்தனையின்படி அன்னாள் அவனை சீலோவில் கர்த்தருடைய சந்நிதியில் கொண்டுபோய் விட்டாள். (1 சாமு 1 : 22).

8. சாமுவேல் என்றும் பிள்ளையாண்டான் கர்த்தருடைய வீட்டில் என்ன செய்து கொண்டிருந்தான்?

சாமுவேல் என்னும் பிள்ளையாண்டான் சணல் நூல் ஏபோத்தைத் தரித்தவனாய்த் ஏலிக்கு முன்பாக கர்த்தருக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தான்.(1சாமு 2:18, 3:1).

**9.** சாமுவேல் படுத்துக் கொண்டிருந்த போது அவனை கூப்பிட்டது யார்? அப்பொழுது அவன் என்ன செய்தான்?

கர்த்தர் காமுவேலைக் கூப்பிட்டார். அப்பொழுது சாமுவேல், ஏலி தன்னை கூப்பிடுவதாக நினைத்து, ஏலியினிடத்தில் ஓடி, "இதோ இருக்கிறேன். என்னை கூப்பிட்டிரே" என்று கேட்டான். (1 சாமு 3 : 4, 5)

**10.** ஏலி தன்னை கூப்பிடுவதாக நினைத்து, முதல் இரண்டு முறை அவனிடம் ஓடி வந்த சாமுவேலை நோக்கி ஏலி என்ன கூறினான்?

ஏலி சாமுவேலை நோக்கி, "நான் கூப்பிடவில்லை, திரும்பிப் போய் படுத்துக் கொள்" என்று கூறினான். (1 சாமு 3 : 5, 6).

**11.** கர்த்தர் தன்னை கூப்பிடுகிறார் என சாமுவேல் ஏன் அறியவில்லை?

சாமுவேல் கர்த்தரை இன்னும் அறியாதிருந்தான். கர்த்தருடைய வார்த்தை அவனுக்கு இன்னும் வெளிப்படவில்லை. (1 சாமு 3 : 7)

**12.** கர்த்தர் சாமுவேலை நான்காவது முறையாக கூப்பிட்டபோது அவன் என்ன செய்தான்?

கர்த்தர் வந்து நின்று முன்போல, "சாமுவேலே சாமுவேலே" என்று கூப்பிட்டார். அதற்குச் சாமுவேல் "சொல்லும் அடியேன் கேட்கிறேன்" என்றான்.(1 சாமு 3 : 10).

**13.** கர்த்தர் ஏன் ஏலியின் குடும்பத்துக்கு என்றும் நீங்காத நியாயர்தீர்ப்புச் செய்வேன் என்று சாமுவேலிடம் கூறினார்?

ஏலி தன் குமாரர் தங்கள் மேல் சாபத்தை வரப் பண்ணுகிறதை அறிந்திருந்தும் அவர்களை அடக்காமற்போன பாவத்தினிமித்தம், அவன் குடும்பத்துக்கு என்றும் நீங்காத நியாயத்தீர்புச் செய்வேன் என்று கர்த்தர் சாமுவேலிடம் கூறினார்.(1சாமு3: 13)

**14.** சாமுவேல் ஏலியின் குடும்பத்தின் மேல் வரும் கர்த்தரின் நியாயத் தீர்ப்பைக் கூறியபோது, ஏலி கூறிய மறுமொழி என்ன ?

"அவர் கர்த்தர் அவர் தமது பார்வைக்கு நலமானதைச் செய்வாராக" என்றான். (1 சாமு 3 : 18)

**VII** *<u>விரிவான விடையளி</u>* : (5 Marks)

**1.** அன்னாள் மனங்கசந்து அழுது கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி செய்த பொருத்தனை என்ன?

அன்னாள் கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணி, "சேனைகளின் கர்த்தாவே, தேவரீர் உம்முடைய அடியாளின் சிறுமையைக் கண்ணோக்கிப் பார்த்து, உம்முடைய அடியாளை மறவாமல் நினைத்தருளி, உமது அடியாளுக்கு ஒரு ஆண் பிள்ளையைக் கொடுத்தால், அவன் உயிரோடிருக்கும் சகல நாளும் நான் அவனைக் கர்த்தருக்கு ஒப்புக் கொடுப்பேன. அவன் தலையின் மேல் சவரகன் கத்தி படுவதில்லை" என்று பொருத்தனை பண்ணினாள்.(1 சாமு 1 : 10, 11)

**2.** அன்னாள் வெறித்திருக்கிறாள் என்று ஏலி நினைக்கக் காரணமென்ன?

அன்னாள் கர்த்தருடைய சந்நிதியில் வெகுநேரம் விண்ணப்பம் பண்ணுகிற போது ஏலி அவள் வாயைக் கவனித்துக் கொண்டிருந்தான். அவள் தன் இருதயத்திலே பேசினாள்: அவளுடைய உதடுகள் மாத்திரம் அசைந்தது, அவள் சத்தமோ கேட்கப்படவில்லை. ஆகையால் அவள் வெறித்திருக்கிறாள் என்று ஏலி நினைத்தான். (1 சாமு 1 : 12, 13)

**3.** அன்னாள் கர்த்தரிடம் தன் இருதயத்தை ஊற்றி விண்ணப்பம் பண்ணுகிறதை பிழையாக விளங்கிக் கொண்ட ஏலி, 'நீ எதுவரைக்கும் வெறித்திருப்பாய்' என்று கேட்டபோது, அன்னாள் கூறிய தாழ்மையான மறுமொழி என்ன?

அன்னாள், "அப்படியல்ல என் ஆண்டவனே, நான் மனக்கிலேசமுள்ள ஸ்திரீ. நான் திராட்சரசமாகிலும், மதுவாகிலும் குடிக்கவில்லை: நான் கர்த்தருடைய சந்நிதியில் என் இருதயத்தை ஊற்றிவிட்டேன். உம்முடைய அடியாளைப் பேலியாளன் மகளாக எண்ணாதேயும். மிகுதியான விசாரத்தினாலும் கிலேசத்தினாலும் இந்நேரமட்டும் விண்ணப்பம் பண்ணினேன்" என்றாள். (1 சாமு 1 : 15, 16)

**4.** அன்னாள் சாமுவேலைப் பால் மறக்கப் பண்ணின பின்பு என்ன செய்தாள்?

அன்னாள் சாமுவேலைப் பால் மறக்கப் பண்ணின பின்பு மூன்று காளைகளையும், ஒரு மரக்கால் மாவையும், ஒரு துருத்தி திராட்சரத்தையும் எடுத்துக் கொண்டு, சாமுவேலையும் கூட்டிக் கொண்டு, சீலோவிலிருக்கிற கர்த்தருடைய ஆலயத்துக்குப் போனாள். அங்கு ஒரு காளையை பலியிட்டு பிள்ளையை ஏலியினிடத்தில் கொண்டுவந்து விட்டாள். (1 சாமு 1 : 24,25)

**5.** கர்த்தர் சாமுவேலை மூன்றாம் விசை கூப்பிட்டபோது அவன் என்ன செய்தான்? ஏலி அவனுக்கு கொடுத்த ஆலோசனை என்ன?

கர்த்தர் மூன்றாம் விசை சாமுவேலைக் கூப்பிட்டபோது, அவன் எழுந்திருந்து ஏலியினிடத்தில் போய், ''இதோ இருக்கிறேன். என்னைக் கூப்பிட்டீரே'' என்றான்.

அப்பொழுது கர்த்தர் பிள்ளையாண்டானைக் கூப்பிடுகிறார் என்று ஏலி அறிந்து, சாமுவேலை நோக்கி, ''நீ போய்ப்படுத்துக் கொள்: உன்னைக் கூப்பிட்டால், அப்பொழுது நீ: கர்த்தாவே சொல்லும் அடியேன் கேட்கிறேன்'' என்று சொல் என்று ஆலோசனை கூறினான். (1 சாமு 3 : 8,9)

**6.** கர்த்தர் ஏலியின் குடும்பத்தைக் குறித்து சாமுவேலிடம் கூறியது என்ன?

கர்த்தர் சாமுவேலை நோக்கி, ''இதோ, நான் இஸ்ரவேலில் ஒரு காரியத்தைச் செய்வேன்: அதைக் கேட்கிற ஒவ்வொருவனுடைய இரண்டு காதுகளிலும் அது தொனித்துக்கொண்டிருக்கும். நான் ஏலியின் குடும்பத்திற்கு விரோதமாகச் சொன்ன யாவையும், அவன் மேல் அந்நாளிலே வரப்பண்ணுவேன். அதைத் தொடங்கவும் அதை முடிக்கவும் போகிறேன். அவன் குமாரர் தங்கள் மேல் சாபத்தை வரப்பண்ணுகிறதை அவன் அறிந்திருந்தும், அவர்களை அடக்காமற்போன பாவத்தினிமித்தம், நான் அவன் குடும்பத்துக்கு என்றும் நீங்காத நியாயத்தீர்ப்புச் செய்வேன் என்று அவனுக்கு அறிவித்தேன்.

அதினிமித்தம் ஏலியின் குடும்பத்தார் செய்த அக்கிரமம் ஒருபோதும் பலியினாவது காணிக்கையினாலாவது நிவிர்த்தியாவதில்லை என்று ஏலியின் குடும்பத்தைக் குறித்து ஆணையிட்டிருக்கிறேன்'' என்றார். (1 சாமு 3 : 11 - 14 )

**7.** சாமுவேல் வளர்ந்த போது எவ்வாறு இருந்தான்?

சாமுவேல் வளர்ந்தான். கர்த்தர் அவனுடனே கூட இருந்தார். அவர் தம்முடைய எல்லா வார்த்தைகளிலும் ஒன்றையாகிலும் தரையிலே விழுந்து போகவிடவில்லை. சாமுவேல் கர்த்தருடைய தீர்க்கதரிசி தான் என்று தாண் முதல் பெயெர்செபா மட்டுமுள்ள சகல இஸ்ரவேலருக்கும் விளங்கினது. (1 சாமு 3 : 19,20)

**VIII** *போதனை* : (2 ½ Marks)

தேவன் தம்முடைய பிள்ளைகளுடன் பேச விரும்புகிறார். நாம் கவனமாய்க் கேட்டால் அவருடைய சத்தத்தைக் கேட்கலாம்.

**********

# சாமுவேல் சவுலை இராஜாவாக அபிஷேகம்பண்ணினது.

(1 சாமு அதிகாரம் 8 ; 9: 1 - 21 ; 10 : 1)

**I** *மனப்பாடவசனம் :* (2 ½ Marks)

லூக்கா 22 : 26

உங்களுக்குள்ளே அப்படியிருக்கக்கூடாது; உங்களில் பெரியவன் சிறியவனைப்போலவும், தலைவன் பணிவிடைக்காரனைப் போலவும் இருக்கக்கடவன்.

**II** *பொருத்துக :* (1 Mark)

| | | | | |
|---|---|---|---|---|
| **1.** | யோவேல் | - | சாமுவேலின் மூத்த குமாரன் | (1 சாமு 8 : 2) |
| **2.** | அபியா | - | சாமுவேலின் இளைய குமாரன் | (1 சாமு 8 : 2) |
| **3.** | கீஸ் | - | பென்யமீன் கோத்திரத்தான் | (1 சாமு 9 : 1) |
| **4.** | கீஸ் | - | மகாபராக்கிரமசாலி | (1 சாமு 9 : 1) |
| **5.** | சவுல் | - | கீஸின் குமாரன் | (1 சாமு 9 : 3) |
| **6.** | சவுல் | - | பென்யமீன் கோத்திரத்தான் | (1 சாமு 9 : 1) |
| **7.** | சவுல் | - | சவுந்தரியமான வாலிபன் | (1 சாமு 9 : 2) |
| **8.** | சவுல் | - | இஸ்ரவேலின் அதிபதி | (1 சாமு 9 :16) |
| **9.** | சாமுவேல் | - | தேவனுடைய மனுஷன் | (1 சாமு 9 : 6) |
| **10.** | சாமுவேல் | - | பெரியவர் | (1 சாமு 9 : 6) |
| **11.** | சாமுவேல் | - | ஞான திருஷ்டிக்காரன் | (1 சாமு 9 : 19) |

**III** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark )

1. சாமுவேலின் குமாரர் ________________ க்குச் சாய்ந்து பரிதானம் வாங்கி நியாயத்தைப் புரட்டினார்கள்.
2. ________________ராமாவிலிருந்த சாமுவேலினிடத்தில் வந்து தங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்த வேண்டும் என்று கேட்டார்கள்.
3. ________________ தங்களை நியாயம் விசாரிக்க ஒரு ராஜாவை ஏற்படுத்தும் என்று சொன்ன வார்த்தை ________________தகாததாய் காணப்பட்டது.
4. இஸ்ரவேல் புத்திரரில் ________________ப் பார்க்கிலும் சவுந்தரியவான் இல்லை.
5. ________________எல்லா ஜனங்களும் தன் தோளுக்குக் கீழாயிருக்கத்தக்க உயரமுள்ளவனாயிருந்தான்.
6. சவுலின் வேலைக்காரன் தன்னிடமிருந்த ________________வெள்ளியை தேவனுடைய மனுஷனாகிய சாமுவேலுக்கு கொடுப்பேன் என்றான்.
7. இந்நாளில் தீர்க்கதரிசி எனப்படுகிறவன் முற்காலத்தில் ________________எனப்படுவான்.

**விடைகள்**

1. பொருளாசை ( 1 சாமு 8 : 3)
2. இஸ்ரவேலின் மூப்பர் ( 1 சாமு 8 : 4,5)
3. இஸ்ரவேலின் மூப்பர், சாமுவேலுக்கு ( 1 சாமு 8 : 6)
4. சவுலை ( 1 சாமு 9 : 2)
5. சவுல் ( 1 சாமு 9 : 2)
6. கால் சேக்கல் ( 1 சாமு 9 : 8)
7. ஞான திருஷ்டிக்காரன ( 1 சாமு 9 : 9)

**IV** *ஒரே வார்த்தையில் விடை எழுது :* (2 Mark)

**1.** சாமுவேலின் குமாரர்கள் எங்கு நியாயாதிபதிகளாகயிருந்தார்கள்?
பெயர்செபா (1 சாமு 8 : 2)

**2.** தங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என்று இஸ்ரவேலின் மூப்பர் கேட்டபோது சாமுவேல் என்ன செய்தான்?
கர்த்தரிடத்தில் விண்ணப்பம் பண்ணினான் (1 சாமு 8 : 6)

3. இஸ்ரவேலின் ஜனங்கள் தங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்தவேண்டும் என்று கேட்டபோது யாரைத் தள்ளினார்கள்?
கர்த்தரை (1சாமு 8 : 7)

4. இஸ்ரவேலின்மேல் அதிபதியாக அபிஷேகம் பண்ணப்படும்படி கர்த்தர் யாரை சாமுவேலிடம் அனுப்பினார்?
சவுலை (1 சாமு 9 : 16)

5. சகல இஸ்ரவேலின் அபேட்சையும் யாரை நாடினது?
சவுலையும் அவன் வீட்டாரையும் (1 சாமு 9 : 20)

6. சாமுவேல் எதை எடுத்து, சவுலின் தலையின் மேல் வார்த்து அவனை அபிஷேகம் பண்ணினான்?
தைலக்குப்பி (1 சாமு. 10 : 1)

V *யார் யாரிடம் கூறியது :* (3 Marks)

1. "உம்முடைய குமாரர் உம்முடைய வழிகளில் நடக்கிறதில்லை". (1 சாமு 8 : 5)
யார் : இஸ்ரவேலின் மூப்பர்
யாரிடம் : சாமுவேலிடம்

2. a. "அவர்கள் உன்னைத் தள்ளவில்லை".
b. "நான் அவர்களை ஆளாதபடிக்கு என்னைத் தான் தள்ளினார்கள".
c. "இப்போதும் அவர்கள் சொல்லைக் கேள்". (1 சாமு 8 : 7, 9)
யார் : கர்த்தர்
யாரிடம் : சாமுவேலிடம்

3. a. "அப்படியல்ல எங்களுக்கு ஒரு ராஜா இருக்கத்தான் வேண்டும".
b. "சகல ஜாதிகளையும் போல நாங்களும் இருப்போம ". (1 சாமு 8 : 19, 20)
யார் : இஸ்ரவேலின் மூப்பர்
யாரிடம் : சாமுவேலிடம்

4. a. "அவர் பெரியவர் அவர் சொல்லுகிறதெல்லாம் தப்பாமல் நடக்கும்".
b. "ஒருவேளை அவர் நாம் போக வேண்டிய நம்முடைய வழியை நமக்குத் தெரிவிப்பா". (1 சாமு 9 : 6)
யார் : சவுலின் வேலைக்காரன்
யாரிடம் : சவுலிடம்

5. a. "இதோ நான் உனக்குச் சொல்லியிருந்த மனுஷன் இவனே".
b. "இவன்தான் என் ஜனத்தை ஆளுவான". (1 சாமு 9 : 17)
யார் : கர்த்தர்
யாரிடம் : சாமுவேலிடம்

6. "நாளைக்காலமே நான் உன் இருதயத்தில் உள்ளது எல்லாவற்றையும் உனக்கு அறிவித்து உன்னை அனுப்பிவிடுவேன". (1 சாமு 9 : 19)
யார் : சாமுவேல்
யாரிடம் : சவுலிடம்

7. a. "இதல்லாமல் சகல இஸ்ரவேலின் அபேட்சையும் யாரை நாடுகிறது? "
b. "உன்னையும் உன் வீட்டார் அனைவரையுமே அல்லவா". (1 சாமு 9 : 20)
யார் : சாமுவேல்
யாரிடம் : சவுலிடம்

8. "நான் இஸ்ரவேல் கோத்திரங்களிலே சிறிதான பென்யமீன் கோத்திரத்தான் அல்லவா? " (1 சாமு 9 : 21)
யார் : சவுல்
யாரிடம : சாமுவேலிடம்

9. "கர்த்தர் உன்னைத் தம்முடைய சுதந்திரத்தின் மேல் தலைவனாக அபிஷேகம் பண்ணினார் அல்லவா? " (1 சாமு 10 : 1)
யார் : சாமுவேல்
யாரிடம் : சவுலிடம்

VI <u>ஓரிரு வாக்கிய□களில் விடையளி :</u>

1. சாமுவேலின் குமாரர்கள் யார்?
யோவேல், அபியா ( 1 சாமு 8 : 2)

2. சாமுவேலின் குமாரர் எப்படிப்பட்டவர்களாயிருந்தார்கள்?
சாமுவேலின் குமாரர் சாமுவேலின் வழிகளில் நடவாமல், பொருளாசைக்குச் சாய்ந்து, பரிதானம் வாங்கி நியாயத்தைப் புரட்டினார்கள். (1 சாமு 8 : 3)

3. இஸ்ரவேலின் மூப்பர்கள் சாமுவேலிடம் வந்து தங்களுக்கு ஒரு ராஜா வேண்டுமென்று கேட்டபோது சாமுவேல் என்ன செய்தான்?
இஸ்ரவேலின் மூப்பர்கள் தங்களுக்கு ஒரு ராஜா வேண்டும் என்று சொன்ன வார்த்தை சாமுவேலுக்குத் தகாததாய்க் காணப்பட்டது. ஆகையால் சாமுவேல் கர்த்தரை நோக்கி விண்ணப்பம் பண்ணினான். (1 சாமு 8 : 6)

4. தங்களுக்கு ஒரு இராஜாவை ஏற்படுத்துவதில் ஜனங்கள் பிடிவாதமாயிருக்கிறார்கள் என்று சாமுவேல் கர்த்தரிடம் கூறியபோது கர்த்தர் கூறிய மறுமொழி என்ன?
கர்த்தர் சாமுவேலை நோக்கி, “நீ அவர்கள் சொல்லைக் கேட்டு, அவர்களை ஆள ஒரு ராஜாவை ஏற்படுத்து” என்றார். (1 சாமு 8 : 22)

5. சவுல் யார்?
சவுல் பென்யமீன் கோத்திரத்தானாகிய கீஸின் மகன். (1 சாமு 9 : 1,2)

6. சவுலின் தோற்றத்தைப் பற்றி எழுது?
சவுல் சௌந்தரியமுள்ள வாலிபனாயிருந்தான். இஸ்ரவேல் புத்திரரில் அவனைப் பார்க்கிலும் சௌந்தரியவான் இல்லை. எல்லா ஜனங்களும் அவன் தோளுக்கு கீழாயிருக்கத்தக்க உயரமுள்ளவனாயிருந்தான். (1 சாமு 9 : 2)

7. இஸ்ரவேலின் முதல் இராஜா யார்? அவனுடைய தகப்பன் யார்?
இஸ்ரவேலின் முதல் ராஜா சவுல். அவனுடைய தகப்பன் கீஸ். (1சாமு 9 : 3; 10 : 1)

8. யாருடைய கழுதைகள் காணாமல் போனது? அவன் என்ன செய்தான்?
கீஸின் கழுதைகள் காணாமல் போனது. அவன் தன் குமாரனாகிய சவுலை நோக்கி, நீ வேலைக்காரரில் ஒருவனை கூட்டிக் கொண்டு கழுதைகளை தேட புறப்பட்டு போ” என்றான். (1 சாமு 9 : 3)

9. சவுலின் வேலைக்காரன் சாமுவேலைக் குறித்து கூறியது என்ன?
சவுலின் வேலைக்காரன், “தேவனுடைய மனுஷன் ஒருவர் இருக்கிறார். அவர் பெரியவர். அவர் சொல்லுகிறதெல்லாம் தப்பாமல் நடக்கும். நாம் போக வேண்டிய நம்முடைய வழியை நமக்குத் தெரிவிப்பார்” என்றான். (1 சாமு 9 : 6)

10. தேவனுடைய மனுஷனாகிய சாமுவேலுக்கு கொடுக்க காணிக்கை இல்லையே என்று அங் கலாய்த்த சவுலிடம் அவன் வேலைக்காரன் கூறியது என்ன?
என் கையில் கால்சேக்கல் வெள்ளியிருக்கிறது. தேவனுடைய மனுஷன் நமக்கு நம்முடைய வழியை அறிவிக்கும்படிக்கு அதை அவருக்குக் கொடுப்பேன் என்றான். (1 சாமு 9 : 8)

11. சவுல் அபிஷேகம் பண்ணப்பட்டதின் நோக்கம் என்ன?
இஸ்ரவேலரை பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிக்கும்படியாய் சவுல் அபிஷேகம் பண்ணப்பட்டார். (1 சாமு 9 : 16)

12. சாமுவேல் சவுலைக் கண்டபோது கர்த்தர் சாமுவேலிடம் கூறியது என்ன?
கர்த்தர், “இதோ நான் உனக்குச் சொல்லியிருந்த மனுஷன் இவனே. இவன் தான் என் ஜனத்தை ஆளுவான்” என்றார். (1 சாமு 9 : 17)

13. சகல இஸ்ரவேலரின் அபேட்சையும் உன்னை நாடுகிறது என்று சாமுவேல் சவுலிடம் கூறியபோது அவன் கூறிய மறுமொழி யாது?
சவுல் சாமுவேலிடம், “நான் இஸ்ரவேல் கோத்திரங்களிலே சிறிதான பென்யமீன் கோத்திரத்தான் அல்லவா? பென்யமீன் கோத்திரத்திரத்துக் குடும்பங்கலெல்லாம் என் குடும்பம் அற்பமானது அல்லவா? நீர் இப்படிப்பட்ட வார்த்தையை என்னிடத்தில் சொல்வானேன்” என்றான். (1 சாமு 9 : 21)

14. சாமுவேல் சவுலை எவ்வாறு அபிஷேகம் பண்ணினான்?
சாமுவேல் தைலக்குப்பியை எடுத்து, அவன் தலையின்மேல் வார்த்து, அவனை முத்தஞ் செய்து, “கர்த்தர் உன்னைத் தம்முடைய சுதந்தரத்தின் மேல் தலைவனாக அபிஷேகம் பண்ணினார் அல்லவா” என்றான். (1 சாமு 10 : 1)

**VII** ***சுருக்கமான விடையளி*** : (5 Marks )

1. இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்கு ஒரு ராஜா வேண்டுமென்று ஏன் சாமுவேலிடம் கேட்டார்கள்?

   சாமுவேல் முதிர்வயதுள்ளவனானான். இஸ்ரவேலின் மேல் நியாயதிபதிகளாக இருந்த சாமுவேலின் குமாரர் அவனுடைய வழிகளில் நடவாமல், பொருளாசைக்குச் சாய்ந்து, பரிதானம் வாங்கி நியாயத்தைப் புரட்டினார்கள். ஆகையால் இஸ்ரவேல் புத்திரர் தங்களுக்கு ஒரு ராஜா வேண்டுமென்று சாமுவேலிடம் கேட்டார்கள். (1 சாமு 8 : 3,5)

2. இஸ்ரவேலின் மூப்பர் தங்களுக்கு ஒரு ராஜாவை ஏற்படுத்த வேண்டும் என்று சேட்டது சாமுவேலுக்கு தகாததாய் சாணப்பட்ட சமயத்தில் அவன் கர்த்தரிடம் ஜெபித்தபோது கர்த்தர் அவனுக்கு கொடுத்த மறுமொழி என்ன?

   கர்த்தர் சாமுவேலை நோக்கி, ''ஜனங்கள் உன்னிடத்தில் சொல்வதெல்லாவற்றிலும் அவர்கள் சொல்லைக் கேள். அவர்கள் உன்னைத் தள்ளவில்லை . நான் அவர்களை ஆளாதபடிக்கு என்னைத்தான் தள்ளினார்கள்.

   நான் அவர்களை எகிப்திலிருந்து புறப்படப்பண்ணின நாள்முதல் இந்நாள்மட்டும் அவர்கள் என்னை விட்டு வேறே தேவர்களைச் சேவித்துவந்த தங்கள் எல்லாச் செய்கைகளின்படியும் செய்ததுபோல அவர்கள் உனக்குச் செய்கிறார்கள்.

   இப்போதும் அவர்கள் சொல்லைக் கேள். ஆனாலும் உன் அபிப்பிராயத்தைக் காட்டும்படி அவர்களை ஆளும் ராஜாவின் காரியம் இன்னது என்று அவர்களுக்குத் திடசாட்சியாய்த் தெரியப்படுத்து'' என்றார். (1 சாமு 8 : 7 - 9 )

3. இஸ்ரவேலின் ராஜாவின் காரியங்களை குறித்து கர்த்தருடைய வார்த்தையை சாமுவேல் கூறியபோது ஜனங்கள் சாமுவேலிடம் கூறியது என்ன?

   ஜனங்கள் சாமுவேலின் சொல்லைக் கேட்க மனதில்லாமல், ''அப்படியல்ல, எங்களுக்கு ஒரு ராஜா இருக்கத்தான் வேண்டும். சகல ஜாதிகளையும் போல நாங்களும் இருப்போம். எங்கள் ராஜா எங்களை நியாயம் விசாரித்து எங்களுக்கு முன்பாகப் புறப்பட்டு எங்கள் யுத்தங்களை நடத்த வேண்டும்'' என்றார்கள். (1 சாமு 8 : 19, 20)

4. கர்த்தர் சாமுவேலிடம் சவுல் வர ஒரு நாளுக்கு முன்னே அவனைக்குறித்து என்ன வெளிப்படுத்தியிருந்தார்?

   சவுல் வர ஒரு நாளைக்கு முன்னே கர்த்தர் சாமுவேலிடம், ''நாளை இந்நேரத்திற்கு பென்யமீன் நாட்டானாகிய ஒரு மனுஷனை உன்னிடத்தில் அனுப்புவேன். அவனை என் ஜனமாகிய இஸ்ரவேலின் மேல் அதிபதியாக அபிஷேகம் பண்ணக்கடவாய் . அவன் என் ஜனத்தை பெலிஸ்தரின் கைக்கு நீங்கலாக்கி ரட்சிப்பான். என் ஜனத்தின் முறையிடுதல் என்னிடத்தில் வந்து எட்டின படியினால் நான் அவர்களை கடாட்சித்தேன்'' என்று வெளிப்படுத்தியிருந்தார். (1 சாமு 9 : 15 - 16 )

5. ஞான திருஷ்டிக்காரன் வீடு எங்கே என்று, சவுல் சாமுவேலிடம் கேட்டபோது சாமுவேல் அவனிடம் கூறியது என்ன?

   சாமுவேல் சவுலுக்கு பிரதியுத்தரமாக, ''ஞான திருஷ்டிக்காரன் நான் தான். நீ எனக்கு முன்னே மேடையில் மேல் ஏறிப்போ. நீங்கள் இன்றைக்கு என்னோடே போஜனம் பண்ண வேண்டும் . நாளை காலமே நான் உன் இருதயத்தில் உள்ளது எல்லாவற்றையும் உனக்கு அறிவித்து உன்னை அனுப்பி விடுவேன். மூன்று நாளைக்கு முன்னே காணாமல் போன கழுதையை பற்றி கவலைப்படவேண்டாம். அவைகள் அகப்பட்டது. இதெல்லாமல் சகல இஸ்ரவேலின் அபேட்சையும் யாரை நாடுகிறது. உன்னையும் உன் வீட்டார் அனைவரையும் அல்லவா'' என்றான். ( 1 சாமு 9 : 19 , 20)

**VIII**<u>*போதனை*</u>: (2 ½ Marks)

தேவன் சவுலை உயர்த்தியபோது அவன் தன் தகுதியின்மையை உணர்ந்து, தன்னைத்தானே தாழ்த்தினான். அதுபோலவே, தேவன் நம்மை உயர்த்தும்போது, நாம் தாழ்மையாயிருக்கக் கற்றுக்கொள்ள வேண்டும்.

*******

# சவுல் ராஜ்யபாரத்தை இழந்தது

(1 சாமு 11 : 1 - 15, 15 : 1 - 23 ; 16 : 14)

**I** *மனப்பாட வசனம் :* (2 ½ Marks)

1 சாமுவேல் 15 : 22

அதற்குச் சாமுவேல்: கர்த்தருடைய சத்தத்திற்கு கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும் பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக் கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம்,

**II** *பொருத்துக :* (1 Mark)

| | | | |
|---|---|---|---|
| **1.** நாகாஸ் | - | அம்மோனியன் | (1 சாமு 11 : 1) |
| **2.** கிபியா | - | சவுலின் ஊர் | (1 சாமு 11 : 4) |
| **3.** சவுல் | - | இஸ்ரவேலின் ராஜா | (1 சாமு 15 : 1) |
| **4.** ஆகாக் | - | அமலேக்கின் ராஜா | (1 சாமு 15 : 8) |
| **5.** சாமுவேல் | - | கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர் | (1 சாமு 15 : 13) |
| **6.** சவுல் | - | கொள்ளையின் மேல் பறந்தவன் | (1 சாமு 15 : 19) |

**III** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

**1.** சவுலின் நாட்களில் ______________ என்னும் அம்மோனியன் கிலேயாத்திலிருக்கிற ______________ முற்றுக்கை போட்டான்.

**2.** யாபேசின் ஸ்தானாபதிகளின் செய்தியை கேட்ட பொழுது, தேவனுடைய ஆவி ______________மேல் இறங்கினார்.

**3.** கர்த்தரால் உண்டான______________ஜனத்தின் மேல் வந்ததினால், அவர்கள் ஒருமனப்பட்டு சவுலோடே கூட அம்மோனியருக்கு விரோதமாக யுத்தத்திற்கு போனார்கள்.

**4.** அம்மோனியரோடு யுத்தம் பண்ணும்படி சவுல் இஸ்ரவேல் ஜனங்களை ______________ வைத்து இலக்கம் பார்த்தான்.

**5.** சாமுவேலும், இஸ்ரவேல் ஜனங்களும் ______________ போய், கர்த்தருடைய சந்நிதியில் ______________ ராஜ்யபாரத்தை ஸ்திரப்படுத்தினார்கள்.

**6.** இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வந்தபோது ______________அவர்களுக்கு வழிமறித்தான்.

**7.** அமலேக்கை மடங்கடித்து அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சங்கரிக்கும்படி கர்த்தர் ______________கட்டளையிட்டார்.

**8.** இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வந்தபோது ______________அவர்களுக்கு தயவு செய்தார்கள்.

**9.** ______________அமலேக்கியரின் ராஜாவாகிய ஆகாகை உயிரோடே பிடித்தான்.

**10.** சவுல் கர்மேலுக்கு வந்து தனக்கு ஒரு ______________ நாட்டினான்.

**11.** இஸ்ரவேலின் ராஜாவாகிய ______________ கர்த்தருடைய சொல்லைக்கேளாமல் கொள்ளையின் மேல் பறந்து கர்த்தருடைய பார்வைக்கு பொல்லாப்பானதைச் செய்தான்.

**12.** கர்த்தரால் வரவிடப்பட்ட ______________ சவுலை கலங்கப்பண்ணிக் கொண்டிருந்தது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | விடைகள் | | | |
| 1. | நாகாஸ், யாபேசை | (1 சாமு 11 : 1) | 7. | சவுலுக்கு | (1 சாமு 15 : 3) |
| 2 | சவுலின் | (1 சாமு 11 : 6) | 8. | கேனியர் | (1 சாமு 15 : 6) |
| 3 | பயங்கரம் | (1 சாமு 11 : 7) | 9. | சவுல் | (1 சாமு 15 : 8) |
| 4. | பேசேக்கிலே | (1 சாமு 11 : 8) | 10. | ஜெயஸ்தம்பம் | (1 சாமு 15 : 12) |
| 5. | கில்காலுக்குப்,சவுலின் | (1 சாமு 11 : 25) | 11. | சவுல் | (1 சாமு 15 : 19) |
| 6. | அமலேக்கு | (1 சாமு 15 : 2) | 12. | பொல்லாத ஆவி | (1 சாமு 16 : 14) |

**IV** *ஒரே வார்த்தையில் விடை எழுது :* (2 Mark)

**1.** யாபேஸ் மனுஷரின் வலது கண்களை பிடுங்கி அவர்கள் மேல் நிந்தையை வரப் பண்ணும்படி வாஞ்சித்தது யார்?
நாகாஸ் (1 சாமு 11 : 2)

**2.** யாபேசின் மனுஷர் நாகாஸிடம் எத்தனை நாட்கள் தவணை கேட்டார்கள்?
ஏழு (1 சாமு 11 : 3)

**3.** யாபேசின் மனுஷருக்கு விரோதமாக வந்த அம்மோனியரை முறியடித்தது யார்?
சவுல் 1சாமு 11 : 11)

**4.** இஸ்ரவேல் ஜனங்கள் யாரை கர்த்தருடைய சந்நிதியில் வைத்து ராஜாவாக ஏற்படுத்தினார்கள்?
சவுலை (1 சாமு 11 : 15)

**5.** சவுல் அமலேக்கியரை அழிக்கச் சென்றபோது யாரை அவர்கள் நடுவிலிருந்து விலகிப்போகும்படி கட்டளையிட்டான்?
கேனியரை (1 சாமு 15 : 6)

**6.** சவுலை ராஜாவாக்கினதற்காக மனஸ்தாபப்பட்டது யார்?
கர்த்தர் (1 சாமு 15 : 11)

**7.** கர்த்தர் சவுலை ராஜாவாக்கினதற்காக மனஸ்தாபப்பட்டபோது, மனம் நொந்து இராமுழுதும் கர்த்தரை நோக்கி கூப்பிட்டது யார்?
சாமுவேல் (1 சாமு 15 : 11)

**8.** சவுலை இஸ்ரவேலின் மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணுவித்தவர் யார்?
கர்த்தர் 1 சாமு 15 : 17)

**9.** இரண்டகம் பண்ணுதல் எந்த பாவத்திற்கு சரியாய் இருக்கிறது?
பில்லி சூனியம் (1 சாமு 15 : 23)

**10.** பலிகளைப் பார்க்கிலும் உத்தமமானது எது?
கர்த்தருடைய சத்தத்திற்கு கீழ்படிதல் (1 சாமு 15 : 22)

**V** *யார் யாரிடம் கூறியது :* (3 Marks)

**1.** "எங்களோடே உடன்படிக்கை பண்ணும் அப்பொழுது உம்மைச் சேவிப்போம்."(1 சாமு 11: 1)
யார் : யாபேஸின் மனுஷர்
யாரிடம் : நாகாஸ் என்னும் அம்மோனியனிடம்

**2.** "எங்களை ரட்சிப்பார், இல்லாவிட்டால், அப்பொழுது உம்மிடத்தில் வருவோம்."(1 சாமு 11: 3)
யார் : யாபேஸின் மூப்பர்கள்
யாரிடம் : நாகாஸ் என்னும் அம்மோனியனிடம்

**3.** **a)** "இன்றைய தினம் ஒருவரும் கொல்லப்படலாகாது".
**b)** "இன்று கர்த்தர் இஸ்ரவேலுக்கு இரட்சிப்பை அருளினார்". (1 சாமு 11 : 13)
யார் : சவுல்
யாரிடம் : ஜனங்களிடம்

**4.** "நாம் கில்காலுக்கு போய், அங்கே ராஜ்யபாரத்தை ஸ்திரப்படுத்துவோம் வாருங்கள்".
(1 சாமு 11 : 14)
யார் : சாமுவேல்
யாரிடம் : ஜனங்சளிடம்

5. "இப்போதும் கர்த்தருடைய வார்த்தைகளின் சத்தத்தைக் கேளும்."(1 சாமு 15 : 1)
யார் : சாமுவேல்
யாரிடம் : சவுலிடம்

6. a) "நீங்கள் அவர்கள் நடுவிலிருந்து புறப்பட்டு விலகிப்போங்கள்".
b) "நீங்கள் அவர்கள் எல்லாருக்கும் தயவு செய்தீர்கள்" (1 சாமு 15 : 6)
யார் : சவுல்
யாரிடம் : கேனியரிடம்

7. a) " நான் சவுலை ராஜாவாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது".
b) "அவன் என்னை விட்டுத் திரும்பி , என் வார்த்தைகளை நிறைவேற்றாமற் போனான்."
(1 சாமு 15 : 11)
யார் : கர்த்தர்
யாரிடம் : சாமுவேலிடம்

8. a) "நீர் கர்த்தரால் ஆசீர்வதிக்கப்பட்டவர்"
b) "கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றினேன்" (1 சாமு 15 : 13)
யார் : சவுல்
யாரிடம் : சாமுவேலிடம்

9. a) "அந்தப் பேச்சை விடும்"
b) "கர்த்தர் இந்த இராத்திரியிலே எனக்குச் சொன்னதை உமக்கு அறிவிக்கிறேன்"
(1 சாமு 15 : 16)
c) "நீர் உம்முடைய பார்வைக்குச் சிறியவராயிருந்த போது அல்லவோ இஸ்ரவேல் கோத்திரங்களுக்குத் தலைவரானீர்."
d) " கர்த்தர் உம்மை இஸ்ரவேலின்மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணுவித்தாரே"
(1 சாமு: 15 :17)
e) "கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தது என்ன" (1 சாமு 15 : 19)
யார் : சாமுவேல்
யாரிடம் : சவுலிடம்

10. "நீர் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தபடியினாலே, அவர் உம்மை ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார்." (1 சாமு 15 : 23)
யார் : சாமுவேல்
யாரிடம் : சவுலிடம்

## VI <u>ஓரிரு வாக்கிய□களில் விடையளி :</u>

1. கிலேயாத்திலிருக்கிற யாபேசுக்கு விரோதமாய் வந்து அதை முற்றிக்கை போட்டது யார்? அவர்களிடம் யாபேசின் மனுஷர் கூறியது என்ன?

நாகாஸ் என்னும் அம்மோனியன் கிலேயாத்திலிருக்கிற யாபேசை முற்றிக்கை போட்டான்.

யாபேசின் மனுஷர், ''எங்களோடே உடன்படிக்கை பண்ணும்: அப்பொழுது உம்மைச் சேவிப்போம்'' என்றார்கள். (1 சாமு 11 : 1)

2. சவுல் இஸ்ரவேல் ஜனங்களை நாகாஸ் என்ற அம்மோனியருக்கு விரோதமான யுத்தத்திற்கு அழைத்த போது அவர்கள் ஏன் ஒருமனப்பட்டு புறப்பட்டு வந்தார்கள்?

கர்த்தரால் உண்டான பயங்கரம் ஜனத்தின் மேல் வந்ததினால் ஜனங்கள் ஒருமனப்பட்டு அம்மோனியருக்கு விரோதமாக யுத்தத்திற்கு பறப்பட்டு வந்தார்கள். (1 சாமு 11 : 7 )

3. கிலேயாத்தில் இருக்கிற யாபேசின் மனுஷருக்கு அவர்களுடைய ஸ்தானாதிபதிகள் மூலம் சவுல் கொடுத்தனுப்பிய மறுசெய்தி என்ன?

நாளைக்கு வெயில் ஏறுகிறதற்கு முன்னே உங்களுக்கு ரட்சிப்பு கிடைக்கும் என்று சொல்லி அனுப்பினான். (1 சாமு 11 : 9 )

4. சவுலின் ராஜ்யபாரத்தை யார் எவ்வாறு ஸ்திரப்படுத்தினார்கள்?

சாமுவேலும், இஸ்ரவேல் ஜனங்கள் எல்லாரும் கில்காலுக்குப்போய், அவ்விடத்திலே கர்த்தருடைய சந்நிதியில் சமாதானபலிகளைச் செலுத்தி, சவுலின் ராஜ்யபாரத்தை ஸ்திரப்படுத்தினார்கள். (1 சாமு 11 : 15)

5. **a**) சவுலின் ராஜ்யபாரம் கில்காலில் ஸ்திரப்பட்ட போது, மிகவும் சந்தோஷங் கொண்டாடினவர்கள் யார்?

**b**) சவுல் அமலேக்கியரை முற்றிலும் அழிக்காதபோது, அவனை ராஜாவாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது என்று கூறியது யார்?

a) சவுலும் இஸ்ரவேல் மனுஷர் யாவரும் மிகவும் சந்தோஷங் கொண்டாடினார்கள். (1 சாமு 11 : 15)

b) கர்த்தர், "நான் சவுலை ராஜாவாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது" என்று கூறினார். (1 சாமு 15 : 11)

6. அமலேக்கியரின் ராஜா யார்? அமலேக்கை மடங்கடித்து அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சங்கரிக்கும்படி கர்த்தர் யாருக்கு கட்டளையிட்டார்?

அமலேக்கியரின் ராஜா ஆகாக். அமலேக்கியரை முற்றிலும் அழிக்கும்படி கர்த்தர் சவுலுக்கு கட்டளையிட்டார். (1 சாமு 15 :2,13)

7. கர்த்தர் ஏன் அமலேக்கை சங்கரிக்கும்படி சவுலுக்கு கட்டளையிட்டார்?

இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வந்தபோது, அமலேக்கு அவர்களுக்கு வழிமறித்த செய்கையை கர்த்தர் மனதிலே வைத்திருந்தார். ஆகையால் கர்த்தர் அமலேக்கை சங்கரிக்கும்படி சவுலுக்கு கட்டளையிட்டார். (1 சாமு 15 : 2)

8. சவுல் யாரை அமலேக்கியரின் நடுவிலிருந்து புறப்பட்டு விலகிப்போகும்படி கட்டளையிட்டான்? ஏன் அவ்வாறு கட்டளையிட்டான்?

சவுல் கேனியரை அமலேக்கியரின் நடுவிலிருந்து புறப்பட்டு விலகிப் போகும்படி கட்டளையிட்டான். ஏனெனில் இஸ்ரவேல் எகிப்திலிருந்து வந்தபோது, கேனியர் அவர்கள் எல்லாருக்கும் தயவு செய்தார்கள். (1 சாமு 15 : 6)

9. சவுல் அமலேக்கியரோடு யுத்தம் பண்ணி, எவற்றை முற்றிலும் அழித்து போட்டான்?

அற்பமானவைகளும், உதவாதவைகளுமான சகல வஸ்துக்களையும் முற்றிலும் அழித்துப் போட்டான். (1 சாமு 15 : 9)

10. சவுல் அமலேக்கியரோடு யுத்தம் பண்ணி, அழித்துப் போட மனதில்லாமல் தப்பவிட்டவைகள் யாவை?

சவுல் ஆகாகையும், ஆடுமாடுகளில் முதல் தரமானவைகளையும், இரண்டாந்தரமானவைகளையும், ஆட்டுக்குட்டிகளையும், நலமான எல்லாவற்றையும் அழித்துப் போட மனமில்லாமல் தப்ப வைத்தான். (1 சாமு 15 : 9)

11. சவுல் அமலேக்கியரை முற்றிலும் அழிக்காததைக் கண்டபோது, கர்த்தர் சாமுவேலிடம் கூறியது என்ன? அப்பொழுது சாமுவேல் என்ன செய்தான்?

கர்த்தர் சாமுவேலிடம், "நான் சவுலை ராஜாவாக்கினது எனக்கு மனஸ்தாபமாயிருக்கிறது. அவன் என்னைவிட்டுத் திரும்பி, என் வார்த்தைகளை நிறைவேற்றாமற் போனான்" என்றார். அப்பொழுது சாமுவேல் மனம் நொந்து, இராமுழுவதும் கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டான். (1 சாமு 15 : 11)

12. கர்த்தர் ஏன் சவுலை இராஜாவாயிராதபடிக்கு புறக்கணித்து தள்ளினார்?

சவுல் கர்த்தருடைய வார்த்தையை புறக்கணித்தபடியினாலே, கர்த்தர் சவுலை ராஜாவாயிராதபடிக்கு புறக்கணித்து தள்ளினார். (1 சாமு 15 : 23)

13. கர்த்தர் சவுலை ராஜாவாயிராதபடிக்கு புறக்கணித்து தள்ளினபோது அவனுக்கு என்ன சம்பவித்தது?

கர்த்தருடைய ஆவி சவுலைவிட்டு நீங்கினார். ஒரு பொல்லாத ஆவி அவனை கலங்கப் பண்ணிக் கொண்டிருந்தது.(1 சாமு 16 : 14)

## VII <u>*சுருக்கமான விடையளி*</u> : (5 Marks)

1. சவுல் அம்மோனியரை எவ்வாறு முறியடித்தான்?

சவுல் ஜனங்களைப் பேசேக்கிலே இலக்கம் பார்த்தான். இஸ்ரவேல் புத்திரரில் மூன்று லட்சம் பேரும், யூதா மனுஷரில் முப்பதினாயிரம் பேரும் இருந்தார்கள். அவர்களை மூன்று படையாக வகுத்து, கிழக்கு வெளுத்து விடும் ஜாமத்திலே பாளயத்திற்குள் வந்து வெயில் ஏறும்வரைக்கும் அம்மோனியரை முறிய அடித்தான். தப்பினவர்களில் இரண்டு பேராகிலும் சேர்ந்து ஓடிப்போகாதபடி எல்லாரும் சிதறிப் போனார்கள். இவ்வாறு சவுல் அம்மோனியரை முறியடித்தான். (1 சாமு 11 : 11)

2. சவுல் அமலேக்கியரை எவ்வாறு மடங்கடித்தான்?

சவுல் அமலேக்குடைய பட்டணமட்டும் வந்து, பள்ளத்தாக்கிலே ஒரு பதிவிடையை வைத்தான். பின்பு சவுல் ஆவிலாதுவக்கி எகிப்திற்கு எதிரேயிருக்கிற சூருக்குப்போகும்

எல்லைமட்டும் இருந்த அமலேக்கியரை மடங்கடித்து, அமலேக்கியரின் ராஜாவாகிய ஆகாகை உயிரோடே பிடித்தான். ஜனங்கள் யாவரையும் பட்டயக் கருக்கினாலே சங்காரம் பண்ணினான். இவ்வாறாக சவுல் அமலேக்கியரை மடங்கடித்தான். (1சாமு15:5,7,8)

3. சவுல் எவ்வாறு கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றாமற் போனான்?

கர்த்தர் சவுலிடம் , "நீ போய், அமலேக்கை மடங்கடித்து, அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் கொன்று போடக் கடவாய்" என்றார். ஆனால் சவுல், ஆகாகையும் ஆடுமாடுகளில் முதல் தரமானவைகளையும், இரண்டாந்தரமானவைகளையும், ஆட்டுக்குட்டிகளையும், நலமான எல்லாவற்றையும் அழித்துப் போட மனதில்லாமல் தப்ப வைத்தான். இவ்வாறாக சவுல் கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றாமற் போனான். (1 சாமு 15 : 3, 9)

4. கர்த்தருடைய வார்த்தையை நிறைவேற்றினேன் என்று சவுல் பொய் சொன்னபோது, சாமுவேல் அவனிடம் கேட்டது என்ன? அதற்கு சவுல் கொடுத்த மறுமொழி என்ன?

சவுல் சாமுவேலிடம், "கர்த்தருடைய வார்த்தை நிறைவேற்றினேன்" என்றான். அதற்கு சாமுவேல்: "அப்படியானால் என் காதுகளில் விழுகிற ஆடுகளின் சத்தமும், எனக்கு கேட்கிற மாடுகளின் சத்தமும் என்ன" என்றான்.

அதற்குச் சவுல்: "அமலேக்கியரிடத்திலிருந்து அவைகளைக் கொண்டுவந்தார்கள்: ஜனங்கள் ஆடுமாடுகளில் நலமானவைகளை உம்முடைய தேவனாகிய கர்த்தருக்குப் பலியிடும்படிக்குத் தப்பவைத்தார்கள்: மற்றவைகளை முற்றிலும் அழித்துப் போட்டேன்" என்றான். (1 சாமு 15 : 14, 15)

## VIII *விரிவான விடையளி* :

1. அமலேக்கியரை குறித்து சாமுவேல் மூலமாய் கர்த்தர் சவுலுக்கு கொடுத்த கட்டளை என்ன?

சாமுவேல் சவுலிடம், "சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால், இஸ்ரவேலர் எகிப்திலிருந்து வந்தபோது, அமலேக்கு அவர்களுக்கு வழிமறித்த செய்கையை மனதிலே வைத்திருந்தார்.

இப்போதும் நீ போய், அமலேக்கை மடங்கடித்து, அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சங்கரித்து அவன்மேல் இரக்கம் வைக்காமல், புருஷரையும், ஸ்திரீகளையம், பிள்ளைகளையும், குழந்தைகளையும், மாடுகளையும், ஆடுகளையும், ஒட்டகங்களையும், கழுதைகளையும், கொன்றுபோடக் கடவாய் என்கிறார்" என்று சொன்னான். (1 சாமு 15 : 2, 3,)

2. சாமுவேல் சவுலிடம் அமலேக்கியரை முற்றிலும் அழிக்காமல் கர்த்தருடைய பார்வைக்குப் பொல்லாப்பானதைச் செய்தது என்ன என்று கேட்டபொழுது, சவுல் கூறிய மறுமொழி என்ன?

சவுல் சாமுவேலை நோக்கி,: நான் கர்த்தருடைய சொல்லைக் கேட்டு, கர்த்தர் என்னை அனுப்பின வழியாய்ப் போய், அமலேக்கின் ராஜாவாகிய ஆகாகைக் கொண்டு வந்து, அமலேக்கியரைச் சங்காரம் பண்ணினேன்.

ஜனங்களோ உம்முடைய தேவனாகிய கர்த்தருக்குக் கில்காலிலே பலியிடுகிறதற்காக, கொள்ளையிலே சாபத்தீடாகும் ஆடுமாடுகளிலே பிரதானமானவைகளைப் பிடித்துக் கொண்டு வந்தார்கள் என்றான். (1 சாமு 15 : 20, 21)

3. சவுல் கர்த்தருடைய வார்த்தைக்கு கீழ்படியாமற் போனபோது, சாமுவேல் அவனை எவ்வாறு கடிந்து கொண்டான்? (அல்லது) சவுல் இஸ்ரவேல் ஜனங்கள் கில்காலில் கர்த்தருக்குப் பலியிடும்படியாக அமலேக்கியரின் ஆடுமாடுகளில் நலமானவைகளை பிடித்துக் கொண்டு வந்தார்கள் என்று சாமுவேலிடம் சொன்னபோது, சாமுவேல் சவுலை எவ்வாறு கடிந்து கொண்டான்?

சாமுவேல் சவுலிடம், கர்த்தருடைய சத்தத்திற்குக் கீழ்ப்படிகிறதைப் பார்க்கிலும், சர்வாங்க தகனங்களும், பலிகளும் கர்த்தருக்குப் பிரியமாயிருக்குமோ? பலியைப்பார்க்கிலும் கீழ்ப்படிதலும், ஆட்டுக் கடாக்களின் நிணத்தைப் பார்க்கிலும் செவி கொடுத்தலும் உத்தமம்.

இரண்டகம் பண்ணுதல் பில்லிசூனிய பாவத்திற்கும், முரட்டாட்டம் பண்ணுதல் அவபக்திக்கும் விக்கிரகாராதனைக்கும் சரியாய் இருக்கிறது. நீர் கர்த்தருடைய வார்த்தையைப் புறக்கணித்தபடியினாலே, அவர் உம்மை ராஜாவாயிராதபடிக்குப் புறக்கணித்துத் தள்ளினார் என்றான்.(1 சாமு 15 : 22, 23)

## IX *போதனை*: (2 ½ Marks)

நாம் கர்த்தருடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படியாமற்போனால் அவருடைய ஆசீர்வாதங்களை இழந்து போவோம்.

**********

# சாமுவேல் தாவீதை ராஜாவாக அபிஷேகம் பண்ணினது

(1 சாமு 16 : 1 - 14 , 18)

**I** *மனப்பாட வசனம் :* (2 ½ Marks)

1 சாமுவேல் 16 : 7

கர்த்தர் சாமுவேலை நோக்கி ; நீ இவனுடைய முகத்தையும் , இவனுடைய சரீரவளர்ச்சியையும் பார்க்க வேண்டாம் ; நான் இவனைப் புறக்கணித்தேன்; மனுஷன் பார்க்கிறபடி நான் பாரேன்; மனுஷன் முகத்தைப் பார்ப்பான்; கர்த்தரோ இருதயத்தைப் பார்க்கிறார் என்றார்.

**II** *பொருத்துக :* (1 Mark)

| | | | |
|---|---|---|---|
| 1. சாமுவேல் | - | தீர்க்கதரிசி | (1 சாமு 3 : 20) |
| 2. சாமுவேல் | - | பலிவிருந்து | (1 சாமு 16 : 3) |
| 3. சவுல் | - | கீழ்படியாமை | (1 சாமு 15 : 9, 22) |
| 4. சவுல் | - | பொல்லாத ஆவி | (1 சாமு 16 : 14) |
| 5. தாவீது | - | கர்த்தருடைய ஆவி | (1 சாமு 16 : 13) |
| 6. தாவீது | - | ஈசாயின் குமாரன் | (1 சாமு 16 : 18) |
| 7. ஈசாய் | - | பெத்லெகேம் | (1 சாமு 16 : 1) |
| 8. ஈசாயின் குமாரர்கள் | - | எட்டு பேர் | (1 சாமு 16 : 10) |
| 9. எலியாப் | - | தாவீதின் சகோதரன் | (1 சாமு 16 : 6) |
| 10. ஆகாக் | - | அமலேக்கின் ராஜா | (1 சாமு 15 : 8) |

**III** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

1. கர்த்தர் சாமுவேலிடம் __________________ குமாரரில் ஒருவனை இராஜாவாக அபிஷேகம் பண்ணும் படி கூறினார்.
2. சாமுவேல் பெத்லகேமுக்குப் போய், ஈசாயையும், அவன் குமாரரையும் __________________ அழைத்தான்.
3. சாமுவேல் ஈசாயையும், அவன் குமாரரையும் __________________பண்ணி அவர்களை பலி விருந்துக்கு அழைத்தான்.
4. மனுஷன் __________________ பார்ப்பான், கர்த்தரோ_______________ பார்க்கிறார்..
5. _________________ சிவந்த மேனியும், அழகிய கண்களும், நல்ல ரூபமும் உள்ளவனாய் இருந்தான்.
6. __________________ அவன் சகோதரர் நடுவிலே அபிஷேகம் பண்ணப்பட்டான்.

**விடைகள்**

1. ஈசாயின் (1 சாமு 16 : 1)
2. பலிவிருந்துக்கு(1 சாமு 16 : 5)
3. பரிசுத்தம் (1 சாமு 16 : 5)
4. முகத்தைப், இருதயத்தைப் (1 சாமு 16 : 7)
5. தாவீது (1 சாமு 16 : 12)
6.. தாவீது (1 சாமு 16 : 13)

**IV** *ஒரே வார்த்தையில் விடை எழுது :* (2 Mark)

1. சாமுவேல் யாருக்காக துக்கித்தான்?
   சவுலுக்காக (1 சாமு 16 : 1)

2. கர்த்தர் யாரை இராஜாவாயிராதபடிக்கு புறக்கணித்து தள்ளினார்?
   சவுல் (1 சாமு 16 : 1)

3. சாமுவேல் யாரை பார்த்தவுடன் கர்த்தரால் அபிஷேகம் பண்ணப்படுபவன் இவன்தானாக்கும் என்றான்?
   எலியாப் (1சாமு 16 : 6)

4. ஈசாயின் குமாரர்கள் எத்தனை பேர்?
8 பேர் (1 சாமு 16 : 10)

5. கர்த்தர் சவுலுக்கு பதிலாக யாரை தன் ஜனத்தின் மேல் ராஜாவாக அபிஷேகம் பண்ணும்படி சாமுவேலிடம் கூறினார்?
தாவீது (1 சாமு 16 : 12)

6. தாவீதை இராஜாவாக அபிஷேகம் பண்ணிய பிறகு சாமுவேல் சென்ற இடம் எது?
ராமா (1 சாமு 16 : 13)

## V *யார் யாரிடம் கூறியது :* (3 Marks)

1. "நீ உன் கொம்பை தைலத்தால் நிரப்பி கொண்டு வா."(1 சாமு 16 : 1)
யார் : கர்த்தர்
யாரிடம் : சாமுவேலிடம்

2. "நீர் வருகிறது சமாதானமா."(1 சாமு 16: 4)
யார் : பெத்லகேமின் மூப்பர்
யாரிடம் : சாமுவேலிடம்

3. "நீ இவனுடைய முகத்தையும், சரீர வளர்ச்சியையும் பார்க்க வேண்டாம்". (1சாமு16 : 7)
யார் : கர்த்தர்
யாரிடம் : சாமுவேலிடம்

4. "நீ எழுந்து இவனை அபிஷேகம் பண்ணு". (1 சாமு 16 : 12)
யார் : கர்த்தர்
யாரிடம் : சாமுவேலிடம்

## VI *ஓரிரு வாக்கிய□ களில் விடையளி :*

1. சவுலை இஸ்ரவேலின் மேல் ராஜாவாக்கினதற்காக மனஸ்தாபப்பட்டது யார்? அவனுடைய ஸ்தானத்தில் ராஜாவாக அபிஷேகம் பணண்ப்பட்டது யார்?
   1) சவுலை இஸ்ரவேலின் மேல் ராஜாவாக்கினதற்காக கர்த்தர் மனஸ்தாபப்பட்டார். (1 சாமு 15 : 35)
   2) சவுலுடைய ஸ்தானத்தில் தாவீது ராஜாவாக அபிஷேகம் பண்ணப்பட்டான். (1 சாமு 16 : 13)

2. கர்த்தர் யாரை, யாருக்காக அபிஷேகம் பண்ணும்படி சாமுவேலிடம் கூறினார்?
கர்த்தர் தாவீதை தனக்காக அபிஷேகம் பண்ணும்படி சாமுவேலிடம் கூறினார். (1 சாமு 16 : 3)

3. சாமுவேல் பெத்லகேமுக்கு போய், யாரை பலிவிருந்துக்கு அழைத்தான்?
சாமுவேல் பெத்லெகேமுக்கு போய் பெத்லகேமின் மூப்பரையும், ஈசாயையும், அவன் குமாரரையும் பலிவிருந்துக்கு அழைத்தான் (1 சாமு 16 : 4, 5)

4. சாமுவேல் யார் தங்களைப் பரிசுத்தம் பண்ணிக் கொண்டு பலிவிருந்துக்கு வரும்படி அழைத்தான் ? யாரை பரிசுத்தம் பண்ணி பலிவிருந்துக்கு அழைத்தான்?
   1) சாமுவேல் பெத்லகேமின் மூப்பர்கள் தங்களைப் பரிசுத்தம் பண்ணிக் கொண்டு பலிவிருந்துக்கு வரும்படி அழைத்தான்.
   2) ஈசாயையும், அவன் குமாரரையும், பரிசுத்தம் பண்ணி பலிவிருந்துக்கு அழைத்தான் (1 சாமு 16 : 5)

5. சாமுவேலுக்கு முன்பாக ஈசாயின் குமாரரில் முதலாவதாக கடந்து போனவன் யார்?
ஈசாயின் மூத்த குமாரனாகிய எலியாப் முதலாவதாக கடந்து போனான்.(1சாமு.16 : 6)

6. சாமுவேலுக்கு முன்பாக ஈசாயின் குமாரரில் இரண்டாவதாக, மூன்றாவதாக கடந்து போனவர்கள் யார்?
அபினதாப் இரண்டாவதாக கடந்து போனான்.
சம்மா மூன்றாவதாக கடந்து போனான். (1 சாமு 16 : 8,9)

7. ஈசாயின் குமாரர்கள் எத்தனை பேர் ? ஈசாயின் இளைய குமாரன் யார்?
ஈசாயின் குமாரர்கள் எட்டுபேர்.
ஈசாயின் இளைய குமாரன் தாவீது (1 சாமு 16 : 10, 11)

8. கர்த்தருடைய ஆவியானவர் யார் மேல் வந்து இறங்கியிருந்தார்? யாரை விட்டு நீங்கினார்?
கர்த்தருடைய ஆவியானவர் தாவீதின் மேல் இறங்கியிருந்தார், (1 சாமு 16 : 13, 14)
கர்த்தருடைய ஆவியானவர் சவுலை விட்டு நீங்கினார். (1 சாமு 16 : 13, 14)

**VII** *சுருக்கமான விடையளி* : (5 Marks)

1. கர்த்தர் சவுலுக்காக துக்கித்துக் கொண்டிருந்த சாமுவேலை நோக்கிக் கூறியது யாது?
கர்த்தர் சாமுவேலை நோக்கி, "நான் புறக்கணித்து தள்ளின சவுலுக்காக நீ எந்தமட்டும் துக்கித்துக் கொண்டிருப்பாய்? நீ உன் கொம்பை தைலத்தால் நிரப்பிக் கொண்டு பெத்லெகேமியனாகிய ஈசாயினிடத்திற்குச் சென்று, அவனுடைய குமாரரில் ஒருவனை இராஜாவாக அபிஷேகம பண்ணுவாயாக" என்றார். (1 சாமு 16 : 1)

2. சவுல் தன்னைக் கொன்று போடுவானே என்று பயந்த சாமுவேலுக்கு கர்த்தர் கொடுத்த ஆலோசனை என்ன?
1) நீ ஒரு காளையை கையோடே கொண்டு போய் கர்த்தருக்கு பலியிட வந்தேன் என்று சொல்லி ஈசாயை பலிவிருந்துக்கு அழைப்பாயாக.
2) அப்பொழுது நீ செய்ய வேண்டியதை நான் உனக்கு அறிவிப்பேன். நான் உனக்குச் சொல்லுகிறவனை எனக்காக அபிஷேகம் பண்ணுவாயாக என்று ஆலோசனை கூறினார். (1 சாமு 16 : 2, 3)

3. தாவீதின் தோற்றத்தைப் பற்றி எழுது? அவன் எவ்வாறு அபிஷேகம் பண்ணப்பட்டான்?
தாவீது சிவந்த மேனியும், அழகிய கண்களும், நல்ல ருபமுள்ளவனுமாய் இருந்தான். ஈசாய் தாவீதை சாமுவேலுக்கு முன்பாக அழைத்து வந்த போது, கர்த்தர் தாவீதை அபிஷேகம் பண்ணும்படி சாமுவேலுக்கு கட்டளையிட்டார். சாமுவேல் தைலக் கொம்பை எடுத்து, தாவீதை அவன் சகோதரர் நடுவிலே அபிஷேகம் பண்ணினான். (1 சாமு 16 : 12, 13)

4. தாவீதின் திறமைகள் யாவை?
ஈசாயின் குமாரனான தாவீது வாசிப்பதில் தேறினவனாயிருந்தான். அவன் பராக்கிரமசாலி, யுத்தவீரன், காரிய சமர்த்தன், சவுந்தரியமுள்ளவன், கர்த்தர் அவனோடே கூட இருந்தார். (1 சாமு 16 : 18)

**VIII** *விரிவான விடையளி* :

1. தாவீதின் தோற்றத்தையும், அவனது திறமைகளையும் பற்றி எழுது.?
<u>தாவீதின் தோற்றம்:</u> தாவீது சிவந்த மேனியும், அழகிய கண்களும் நல்ல ருபமுள்ளவனுமாய் இருந்தான்.
<u>தாவீதின் திறமைகள்:</u> ஈசாயின் குமாரனான தாவீது வாசிப்பதில் தேறினவனாயிருந்தான். அவன் பராக்கிரமசாலி, யுத்தவீரன், காரிய சமர்த்தன், சவுந்தரியமுள்ளவன், கர்த்தர் அவனோடே கூட இருந்தார். (1 சாமு 16 : 12, 18)

**IX** *போதனை*: (2 ½ Marks)

தாவீது தன் குடும்பத்தில் எல்லாரிலும் இளையவனாகவும், ஆடுகளை மேய்க்கிறவனாகவும் இருந்தும், கர்த்தர் அவனை ராஜாவாகத் தெரிந்து கொண்டார். கர்த்தர் நம்முடைய புறம்பான தோற்றத்தைப் பார்ப்பதில்லை. அவர் நம்முடைய இருதயத்தின் நிலவரத்தைக் கண்டு நம்மை உயர்த்துகிறார்.

**********

வகுப்பு: 5

பாடம்-11

# ஆயக்காரனும் பரிசேயனும்

(லூக்கா 18 : 9 - 14)

## I *மனப்பாட வசனம் :* (2 ½ Marks)

ரோமர் 3 : 20

இப்படியிருக்க, பாவத்தை அறிகிற அறிவு நியாயப்பிரமாணத்தினால் வருகிறபடியால், எந்த மனுஷனும் நியாயப்பிரமாணத்தின் கிரியைகளினாலே தேவனுக்கு முன்பாக நீதிமானாக்கப்படுவதில்லை.

தீத்து 3 : 5

நாம் செய்த நீதியின் கிரியைகளினிமித்தம் அவர் நம்மை இரட்சியாமல் தமது இரக்கத்தின்படியே, மறு ஜென்ம முழுக்கினாலும் பரிசுத்த ஆவியினுடைய புதிதாக்குதலினாலும் நம்மை இரட்சித்தார்.

## II *பொருத்துக :* (1 Mark)

| | | | |
|---|---|---|---|
| 1. ஆயக்காரர் | - | வரி வசூலிக்கிறவர்கள் | (லூக்கா 3 : 12) |
| 2. ஆயக்காரர் | - | புறக்கணிக்கப்பட்டவர்கள் | (மத்தேயு 9 : 11) |
| 3. ஆயக்காரர் | - | துரோகிகள் | (பாடத்திட்டம்) |
| 4. ஆயக்காரர் | - | பாவிகள் | (பாடத்திட்டம்) |
| 5. பரிசேயர் | - | பக்தி வைராக்கியமுள்ளவர்கள் | (பாடத்திட்டம்) |
| 6. பரிசேயர் | - | மாயக்காரர் | (பாடத்திட்டம்) |
| 7. பரிசேயர் | - | பார்வைக்காக நீண்ட ஜெபம் | (பாடத்திட்டம்) |

## III *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

1. பரிசேயன் வாரத்தில் இரண்டு தரம் __________________ என்று ஜெபித்தான்.
2. __________________என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்தி வருகிறேன் என்று ஜெபித்தான்.
3. __________________பாவியாகிய என் மேல் கிருபையாயிரும் என்று ஜெபித்தான்.
4. பரிசேயர் நீதியையும், __________________ , விசுவாசத்தையும் விட்டு விட்டார்கள் என்று இயேசு கூறினார்.

**விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | உபவாசிக்கிறேன் | (லூக்கா 18 : 12) | 3. | ஆயக்காரன் | (லூக்கா 18 : 13) |
| 2 | பரிசேயன் | (லூக்கா 18 : 11,12) | 4. | இரக்கத்தையும் | (மத்தேயு 23 : 23) |

## IV *ஒரே வார்த்தையில் விடை எழுது :* (2 Mark)

1. தேவாலயத்துக்கு போய் தனக்குள்ளே ஜெபம் பண்ணியது யார்?
   பரிசேயன் (லூக்கா 18 : 11, 12)

2. தேவாலத்திற்குப் போய் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக் கொண்டு ஜெபம் பண்ணியது யார்?
   ஆயக்காரன் (லூக்கா 18 : 13)

3. தேவாலயத்துக்குப் போய் ஜெபம் பண்ணி நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பி போனவன் யார்?
   ஆயக்காரன் லூக்கா 18 : 13)

## V <u>ஓரிரு வாக்கிய□களில் விடையளி :</u>

1. இயேசு யாரைக் குறித்து கூறும்பொழுது ஆயக்காரனும் பரிசேயனும் என்ற உவமையை கூறினார்?
   இயேசு தங்களை நீதிமான்களென்று நம்பி, மற்றவர்களை அற்பமாயெண்ணின சிலரைக்குறித்து கூறும்பொழுது ஆயக்காரனும் பரிசேயனும் என்ற உவமையைக் கூறினார். (லூக்கா 18 : 9)

2. எத்தனை பேர் ஜெபம் பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள் ? அவர்கள் யார்?
   இரண்டு மனுஷர் ஜெபம் பண்ணும்படி தேவாலயத்துக்குப் போனார்கள். ஒருவன் பரிசேயன், மற்றவன் ஆயக்காரன் (லூக்கா 18 : 10)

3. ஆயக்காரன் தேவாலயத்திற்குப் போய் எவ்வாறு ஜெபம் பண்ணினான்?
   ஆயக்காரன் தூரத்திலே நின்று, தன் கண்களையும் வானத்துக்கு ஏறெடுக்கத் துணியாமல், தன் மார்பிலே அடித்துக்கொண்டு, தேவனே பாவியாகிய என்மேல் கிருபையாயிரும் என்று ஜெபம் பண்ணினான். (லூக்கா 18 : 13)

4. பரிசேயன் ஜெபித்த ஜெபம் எப்படிப்பட்டதாயிருந்தது?
   பரிசேயன் தன்னை நீதிமானென்று எண்ணி மற்றவர்களை அற்பமாக எண்ணி ஜெபம் பண்ணினான். (லூக்கா 18 : 11, 12)

5. ஆயக்காரன் எவ்வாறு நீதிமானாக்கப்பட்டவனாய் தன் வீட்டுக்குத் திரும்பிப் போனான்?
   ஆயக்காரன் தன்னைத்தான் தாழ்த்தி தேவனுடைய இரக்கத்தின் மீது நம்பிக்கை வைத்து, தான் பாவி என்று ஒத்துக் கொண்டு நருங்குண்ட இருதயத்துடன் ஜெபித்தான். ஆகையால், அவன் நீதிமானாக்கப்பட்டவனாய்த் தன் வீட்டுக்குத் திரும்பிப் போனான். (லூக்கா 18 : 13)

6. ஆயக்காரனும் பரிசேயனும் என்ற உவமையின் மூலம் இயேசு வெளிப்படுத்திய சத்தியம் என்ன?
   இயேசு தன்னை உயர்த்துகிறவன் தாழ்த்தப்படுவான் தன்னைத் தாழ்த்துகிறவன் உயர்த்தப்படுவான் என்ற சத்தியத்தை ஆயக்காரனும் பரிசேயனும் என்ற உவமையின் மூலம் வெளிப்படுத்தினார். (லூக்கா 18 : 14)

7. ஆயக்காரர்கள் ஏன் துரோகிகள் என எண்ணப்பட்டார்கள்?
   ஆயக்காரர் வரி வசூலிக்கிறவர்கள். அவர்கள் அதிகக் கொடுரமுள்ளவர்களாயிருந்து, வரி வசூலிக்கும்போது ஜனங்களை அதிகமாய் ஒடுக்குவார்கள். அவர்கள் நியமிக்கப்பட்ட வரியைக் காட்டிலும் அதிகமான பணத்தை வசூலித்து மற்றவர்களை அநியாயமாய்க் குற்றஞ் சாட்டி பணத்தை எடுத்துக் கொள்வார்கள். எனவே அவர்கள் துரோகிகள் என எண்ணப்பட்டார்கள். (மத்தேயு 9 : 11, லூக்கா3:12,13 ; லூக்கா 19 : 8 )

8. பரிசேயர் எதை அதிகமாக விரும்பினார்கள்?
   விருந்துகளில் முதன்மையான இடங்களையும் ஜெப ஆலயங்களில் முதன்மையான ஆசனங்களையும் சந்தைவெளிகளில் வந்தனங்களையும் விரும்பினார்கள்.(மத்தேயு 23 : 6,7)

9. பரிசேயர் எதில் தசமபாகம் செலுத்துவதில் கவனமாயிருந்தனர்? எதை விட்டுவிட்டார்கள்?
   பரிசேயர் ஒற்தலாம், வெந்தையம், சீரகம் இவற்றில் தசமபாகம் செலுத்துவதில் கவனமாயிருந்தனர்.
   நீதியையும், இரக்கத்தையும், விசுவாசத்தையும் விட்டு விட்டார்கள்.(மத்தேயு23 : 23)

10. பார்வைக்காக நீண்டநேரம் ஜெபம் செய்வது யாருடைய வழக்கமாயிருந்தது? அவர்களுடைய இருதயம் எவ்வாறிருந்தது?
    பார்வைக்காக நீண்ட ஜெபம் செய்வது பரிசேயருடைய வழக்கமாயிருந்தது, அவர்களுடைய இருதயம் கொள்ளையினாலும் அநீதத்தினாலும் நிறைந்திருந்தது. (மத்தேயு 23 : 14, 25)

**VI** *சுருக்கமான விடையளி* : (5 Marks)

1. பரிசேயன் எவ்வாறு ஜெபம் பண்ணினான்?

பரிசேயன் நின்று: தேவனே, நான் பறிகாரர், அநியாயக்காரர்: விபசாரக்காரர் ஆகிய மற்ற மனுஷரைப்போலவும், இந்த ஆயக்காரனைப் போலவும் இராததனால் உம்மை ஸ்தோத்திரிக்கிறேன்.

வாரத்தில் இரண்டுதரம் உபவாசிக்கிறேன்: என் சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்திவருகிறேன் என்று தனக்குள்ளே ஜெபம் பண்ணினான். (லூக்கா 18 : 11,12)

**VII** *விரிவான விடையளி* :

1. ஆயக்காரர் என்பவர்கள் யார்?

ஆயக்காரர் வரி வசூலிக்கிறவர்களாயிருந்தனர். அவர்கள் அதிகக் கொடுரமுள்ளளவர்களாயிருந்து, வரி வசூலிக்கும்போது ஜனங்களை அதிகமாய் ஒடுக்குவார்கள். அவர்கள் நியமிக்கப்பட்ட வரியைக் காட்டிலும் அதிகமான பணத்தை வசூலித்து (லூக்கா 3 : 12, 13) மற்றவர்களை அநியாயமாய் குற்றஞ்சாட்டி பணத்தை எடுத்துக் கொள்வார்கள் (லூக்கா 19 : 8) எனவே அவர்கள் துரோகிகள் என எண்ணப்பட்டனர். மற்றவர்கள் அவர்களை அற்பமாக எண்ணினர். அவர்கள் பாவிகள் எனவும், புறக்கணிக்கப்பட்டவர்கள் எனவும் எண்ணப்பட்டனர். (மத்தேயு 9 : 11)

2. பரிசேயர் என்பவர்கள் யார்? (அல்லது) பரிசேயர் ஏன் மாயக்காரர் என எண்ணப்பட்டார்கள்?

பரிசேயர், பக்திவைராக்கியமுள்ள ஒரு கூட்டம் யூதராவர், அவர்கள் மோசேயின் நியாயப்பிரமாணத்தோடு அநேக சடங்காச்சாரங்களைச் சேர்த்து, அவற்றைக் கண்டிப்பாய் பின்பற்றினர். அவர்கள் விருந்துகளில் முதன்மையான இடங்களையும் ஜெப ஆலயங்களில் ஆசனங்களையும் சந்தைவெளிகளில் வந்தனங்களையும் விரும்பினார்கள். (மத்தேயு 23 : 6, 7) அவர்கள் பார்வைக்காக நீண்ட ஜெபம் செய்வது வழக்கம் (மத்தேயு 23 : 14). அவர்கள் ஒற்தலாம், வெந்தையம், சீரகம் இவற்றில் தசமபாகம் செலுத்துவதில் கவனமாயிருந்தனர். ஆனால் நீதியையும், இரக்கத்தையும், விசுவாசத்தையும் விட்டு விட்டார்கள். (மத்தேயு 23 : 23) அவர்கள் போஜனபான பாத்திரங்களின் வெளிப்புறத்தைச் சுத்தமாக்கினர். உட்புறத்திலோ அவைகள் கொள்ளையினாலும் அநீதத்தினாலும் நிறைந்திருந்தது. (மத்தேயு 23 : 25) இவை, மற்றவர்கள் அவர்களை மாயக்காரர் என்று கருதுவதற்குக் காரணமாயிற்று.

**VIII** *போதனை*: (2 ½ Marks)

நாம் நம்முடைய குற்றங்களை உணர்ந்து, தேவனுடைய சமுகத்தில் நம்மைத் தாழ்த்தி, அவருடைய இரக்கத்தின் மேல் நம்பிக்கையாயிருக்க வேண்டும். அப்பொழுது கர்த்தர் நம்மை நீதிமான்களாக்குவார்.

**********

# விதைக்கிறவனை பற்றிய உவமை

(மத்தேயு 13 : 3 - 8, 19 - 23
வெளிப்படுத்தின விசேஷம் 21 : 1, 2)

**I** *மனப்பாட வசனம் :* (2 ½ Marks)

யாக்கோபு 1 : 22
அல்லாமலும், நீங்கள் உங்களை வஞ்சியாதபடிக்குத் திருவசனத்தைக் கேட்கிறவர்களாய் மாத்திரமல்ல, அதின்படி செய்கிறவர்களாயும் இருங்கள்.

**II** *பொருத்துக :* (1 Mark)

1. விதை - வசனம் (மத்தேயு 13 : 19)
2. வழியருகே - உணர்வில்லாத இருதயம் (மத்தேயு 13 : 19)
3. கற்பாறையான நிலம் - ஆழமான தீர்மானமில்லாத இருதயம் (மத்தேயு13 :20, 21)
4. முள்ளுள்ள இடம் - உலகக்கவலைகளினாலும் ஐசுவரியத்தின் மயக்கத்தினாலும் நெருக்கப்படும் இருதயம் (மத்தேயு 13 : 22)
5. நல்ல நிலம் - வசனத்தைக் கேட்டு உணர்ந்து பலன் கொடுக்கிற இருதயம் (மத்தேயு 13 : 23)

**III** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

1. வழியருகே விழுந்த விதைகளை ________________ வந்து பட்சித்துப் போட்டது.
2. மண்ணில்லாத கற்பாறை இடங்களில் விழுந்த விதை________________ஏறின போது தீய்ந்து போயிற்று.
3. மண்ணில்லாத கற்பாறை இடங்களில் விழுந்த விதை________________இல்லாமையால் உலர்ந்து போயிற்று.
4. முள்ளுள்ள இடங்களில் விழுந்த விதையை ________________ வளர்ந்து நெருக்கிப் போட்டது.

**விடைகள்**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1. | பறவைகள் | (மத்தேயு 13 : 4) | 3. | வேர் | (மத்தேயு 13 : 6) |
| 2 | வெயில் | (மத்தேயு 13 : 6) | 4. | முள் | (மத்தேயு 13 : 7) |

**IV** *ஒரே வார்த்தையில் விடை எழுது :* (2 Mark)

1. ஒருவன் ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கும் போது யார் வந்து அவன் இருதயத்தில் விதைக்கப்பட்டதை பறித்துக் கொள்ளுவான்?
   பொல்லாங்கன் (மத்தேயு 13 : 19)
2. யார் வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடன் இடறலடைவான்?
   கற்பாறை இடங்களில் விதைக்கப்பட்டவன் (மத்தேயு 13 : 20)
3. யார் வசனத்தை கேட்கிறவனாயிருந்தும் பலனற்றுப் போவான்?
   முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன் (மத்தேயு 13 : 22)
4. யார் வசனத்தை கேட்கிறவனாகவும், உணருகிறவனுமாயிருந்து நூறாகவும், அறுபதாகவும், முப்பதாகவும் பலன் தருவான்?

   நல்ல நிலத்தில் விதைக்கப்பட்டவன் (மத்தேயு 13 : 23)
5. நல்ல இருதயத்தை எத்தனை பிரிவுகளாக பிரிக்கலாம்?
   மூன்று (மத்தேயு 13 : 23)

**V** <u>ஓரிரு வாக்கிய□ களில் விடையளி :</u> (5 Marks)

**1.** விதைக்கிறவன் விதைக்கையில் விதைகள் எங்கே விழுந்தது?

விதைக்கிறவன் விதைக்கையில் விதைகள்

1. வழியருகேயும்
2. கற்பாறையான நிலத்திலும்
3. முள்ளுள்ள இடத்திலும்
4. நல்ல நிலத்திலும் விழுந்தது (மத்தேயு 13 : 4 - 8)

**2.** விதைகள் விதைக்கப்பட்ட நான்கு விதமான இடங்களும் எதைக் காட்டுகின்றன?

விதைகள் விதைக்கப்பட்ட நான்கு விதமான இடங்களும் நான்கு விதமான இருதயங்களைக் காட்டுகின்றன. (பாடத்திட்டம்)

**3.** வழியருகே விழுந்த விதைக்கு சம்பவித்தது என்ன? அது எப்படிப்பட்ட இருதயத்தை காட்டுகிறது?

வழியருகே விழுந்த விதைகளை பறவைகள் வந்து பட்சித்துப் போட்டது.

அது உணர்வில்லாத இருதயத்தைக் காட்டுகிறது. (மத்தேயு 13 : 4, 19)

**4.** பொல்லாங்கன் யாருடைய இருதயத்தில் விதைக்கப்பட்ட வசனத்தைப் பறித்துக் கொள்ளுவான்?

ராஜ்யத்தின் வசனத்தைக் கேட்டும் உணராதிருக்கிறவர்களின் இருதயத்தில் விதைக்கப்பட்ட வசனத்தைப் பறித்துக் கொள்ளுவான். (மத்தேயு 13 : 19)

**5.** எங்கு விழுந்த விதைகள் சீக்கிரமாய் முளைத்தும் உலர்ந்து போயிற்று?

அதிக மண்ணில்லாத கற்பாறை இடங்களில் விழுந்த விதைகள் மண் ஆழமாயிராததினால் சீக்கிரமாய் முளைத்தது. வெயில் ஏறின போது தீய்ந்து போய் வேரில்லாமையால் உலர்ந்து போயிற்று (மத்தேயு 13 : 5, 6)

**6.** மண்ணில்லாத கற்பாறையான இடங்களில் விதைக்கப்பட்ட விதை எவ்விதமான இருதயத்தைக் காட்டுகிறது?

மண்ணில்லாத கற்பாறையான இடங்களில் விதைக்கப்பட்ட விதை ஆழமான தீர்மானமில்லாத இருதயத்தைக் காட்டுகிறது. (பாடத்திட்டம்)

**7.** வசனத்தை கேட்டு உடனே சந்தோஷத்தோடே ஏற்றுக் கொள்ளுகிறவன் யார்? அவன் எப்போது இடறலடைவான்?

கற்பாறை இடங்களில் விதைக்கப்பட்டவன் வசனத்தை கேட்டு, உடனே அதைச் சந்தோஷத்தோடே ஏற்றுக் கொள்ளுவான்.

வசனத்தினிமித்தம் உபத்திரவமும் துன்பமும் உண்டானவுடனே இடறலடைவான். (மத்தேயு 13 : 20, 21)

**8.** வசனத்தை கேட்டவர்களில் யார் கொஞ்சக் காலமாத்திரம் நிலைத்திருப்பான்? ஏன் கொஞ்சக் கால மாத்திரம் நிலைத்திருப்பான்?

கற்பாறை இடங்களில் விதைக்கப்பட்டவன் கொஞ்சக் காலமாத்திரம் நிலைத்திருப்பான்.

அவனுக்குள்ளே வேரில்லாதபடியினால் கொஞ்சகால மாத்திரம் நிலைத்திருப்பான். (மத்தேயு 13 : 21)

**9.** முள்ளுள்ள இடங்களில் விழுந்த விதைகளுக்கு சம்பவித்தது என்ன? அது எவ்விதமான இருதயத்தைக் காட்டுகிறது?

முள்ளுள்ள இடங்களில் விழுந்த விதைகளை முள் வளர்ந்து நெருக்கிப் போட்டது. (மத்தேயு 13 : 7)

உலகக் கவலையினாலும் ஐசுவரியத்தின் மயக்கத்தினாலும் நெருக்கப்படும் இருதயத்தைக் காட்டுகிறது. (பாடத்திட்டம்)

**10.** வசனத்தைக் கேட்ட பின்பும் யார் இடறலடைவான்? யார் பலனற்றுப் போவான்?

கற்பாறை இடங்களில் விதைக்கப்பட்டவன் அதாவது ஆழமான தீர்மானமில்லாத இருதயத்தை உடையவன் வசனத்தை கேட்ட பின்பும் இடறலடைவான்.

முள்ளுள்ள இடங்களில் விதைக்கப்பட்டவன் அதாவது உலகக் கவலையினாலும் ஐசுவரியத்தின் மயக்கத்தினாலும் நெருக்கப்படும் இருதயத்தை உடையவன் வசனத்தை கேட்ட பின்பும் பலனற்றுப் போவான். (மத்தேயு 13 : 20 - 22)

**11.** நல்ல நிலத்தில் விழுந்த விதைக்கு சம்பவித்தது என்ன? அது எவ்விதமான இருதயத்தைக் காட்டுகிறது?

நல்ல நிலத்தில் விழுந்த விதைகளில் சிலது நூறாகவும், சிலது அறுபதாகவும், சிலது முப்பதாகவும் பலன் தந்தது.

நல்ல நிலம் வசனத்தைக் கேட்டு உணர்ந்து பலன் கொடுக்கிற இருதயத்தைக் காட்டுகிறது. (மத்தேயு 13 : 8, 23)

**12.** நல்ல நிலம் குறிக்கும் நல்ல இருதயத்தை எத்தனை வகையாக பிரிக்கலாம்? அவை யாவை?

நல்ல நிலம் குறிக்கும் நல்ல இருதயத்தை மூன்று வகையாகப் பிரிக்கலாம். அவையாவன :

1. நூறாய் பலன் கொடுக்கும் இருதயம்
2. அறுபதாய் பலன் கொடுக்கும் இருதயம்
3. முப்பதாய் பலன் கொடுக்கும் இருதயம் (மத்தேயு 13 : 23)

**13.** நல்ல நிலம் குறிக்கும் மூன்று விதமான இருதயம் நித்தியத்திலுள்ளவற்றில் எதைக் காட்டுகின்றன?

நல்ல நிலம் குறிக்கும் மூன்று விதமான இருதயம் நித்தியத்திலுள்ள மூன்று இடங்களாகிய புதிய எருசலேம், புதிய வானம், புதிய பூமி, ஆகியவற்றிற்கு மனிதனைக் கொண்டு செல்லும் ஆவிக்குரிய அனுபவங்களைக் காட்டுகின்றன. (வெளி 21 : 1, 2)

**14.** கீழ்கண்டவற்றின் ஆவிக்குரிய கருத்து என்ன?

1. விதை 2. பறவைகள் 3. வெயில் 4. முள் 5. நிலம்

| | | |
|---|---|---|
| விதை | - | தேவனுடைய ராஜ்யத்தின் வசனம் (மத்தேயு 13 : 19) |
| பறவைகள் | - | பொல்லாங்கன் (மத்தேயு 13 : 19) |
| வெயில் | - | உபத்திரவம், துன்பம் (மத்தேயு 13 : 21) |
| முள் | - | உலகக்கவலை, ஐசுவரியத்தின் மயக்கம் (மத்தேயு 13 : 22) |
| நிலம் | - | இருதயம் (பாடத்திட்டம்) |

## VI <u>*விரிவான விடையளி*</u> :

**1.** விதைகள் விழுந்த நான்குவிதமான இடங்களையும் அவைகள் காட்டும் நான்கு விதமான இருதயங்களையும் எழுது?

| இடம் | இருதயம் |
|---|---|
| வழியருகே | உணர்வில்லாத இருதயம் (மத்தேயு 13 : 19) |
| கற்பாறையான நிலம் | ஆழமான தீர்மானமில்லாத இருதயம்(மத்தேயு 13 : 20, 21) |
| முள்ளுள்ள இடம் | உலகக் கலலைகளினாலும் ஐசுவரியத்தின் மயக்கத்தினாலும் நெருக்கப்படும் இருதயம் (மத்தேயு 13 : 22) |
| நல்ல நிலம் | வசனத்தைக் கேட்டு உணர்ந்து பலன் கொடுக்கிற இருதயம் (மத்தேயு 13 : 23) |

## VII <u>*போதனை*</u> : (2 Marks)

நாம் தேவனுடைய வசனத்தைக் கேட்பது மாத்திரமல்ல, அதன்படியே ஜீவித்து பலன் கொடுக்க வேண்டும்.

**********

# கோதுமையையும் களைகளையும் பற்றிய உவமை

(மத்தேயு 13 : 24 - 30 , 36 - 43 : 1 பேதுரு 1 : 23)

## I மனப்பாட வசனம் : (2 ½ Marks)

வெளிப்படுத்தல் 22 : 11, 12

அநியாயஞ்செய்கிறவன் இன்னும் அநியாயஞ் செய்யட்டும்; அசுத்தமாயிருக்கிறவன் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும்; நீதியுள்ளவன் இன்னும் நீதி செய்யட்டும் ; பரிசுத்தமுள்ளவன் இன்னும் பரிசுத்தமாகட்டும்.

இதோ, சீக்கிரமாய் வருகிறேன்; அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்கு நான் அளிக்கும் பலன் என்னோடேகூட வருகிறது.

## II பொருத்துக : (1 Mark)

| | | | |
|---|---|---|---|
| *1.* மனுஷ குமாரன் | - | கர்த்தராகிய இயேசு கிறிஸ்து | (மத்தேயு 13 : 37) |
| *2.* நிலம் | - | உலகம் | (மத்தேயு 13 : 38) |
| *3.* நல்ல விதை | - | ராஜ்யத்தின் புத்திரர் | (மத்தேயு 13 : 38) |
| *4.* களைகள் | - | பொல்லாங்கனுடைய புத்திரர் | (மத்தேயு 13 : 38) |
| *5.* களைகளை விதைக்கிறவன் | - | பிசாசு | (மத்தேயு 13 : 39) |
| *6.* சத்துரு | - | பிசாசு | (மத்தேயு 13 : 39) |
| *7.* அறுப்புக்காலம் | - | உலகத்தின் முடிவு | (மத்தேயு 13 : 39) |
| *8.* அறுக்கிறவர்கள் | - | தேவ தூதர்கள் | (மத்தேயு 13 : 39) |
| *9.* அழிவில்லாத வித்து | - | தேவ வசனம் | (1 பேதுரு 1 : 23) |

## III கோடிட்ட இட□களை நிரப்புக : (1 Mark)

1. ________________ தன் நிலத்தில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது.
2. மனுஷர்________________பண்ணுகையில் அவனுடைய சத்துரு வந்து, களைகளை விதைத்து விட்டுப் போனான்.
3. ________________தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே உண்டாக்கப்படுகிறார்கள்..
4. தூதர்கள் சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து ________________ யிலே போடுவார்கள்.
5. ______________ தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப் போலப் பிரகாசிப்பார்கள்.

**விடைகள்**

1. பரலோக ராஜ்யம் (மத்தேயு 13 : 24)
2. நித்திரை (மத்தேயு 13 : 25)
3. இராஜ்யத்தின் புத்திரர் (1 பேதுரு 1 : 23)
4. அக்கினி சூளை (மத்தேயு 13 : 41,42)
5. நீதிமான்கள் (மத்தேயு 13 : 43)

## IV ஒரே வார்த்தையில் விடை எழுது : (2 Mark)

1. மனுஷர் நித்திரை பண்ணுகையில் கோதுமைக்குள் களைகளை விதைத்தது யார்?
   சத்துரு (மத்தேயு 13 : 25)

2. நல்ல விதையை விதைக்கிறவர் யார்?

எஜமான் (மத்தேயு 13 : 37)

3. யார் சூரியனைப் போல பிரகாசிப்பார்கள்?
நீதிமான்கள் (மத்தேயு 13 : 43)

**V** *யார் யாரிடம் கூறியது :* (3 Marks)

1. a)"நீர் உமது நிலத்தில் நல்ல விதையை விதைத்தீர் அல்லவா."(மத்தேயு 13 : 27)
b)"பின்னை அதில் களைகள் எப்படி உண்டானது".
யார் : வீட்டெஜமானுடைய வேலைக்காரர்
யாரிடம் : வீட்டெஜமானிடம்

2. "சத்துரு அதைச் செய்தான்." (மத்தேயு 13 : 28)
யார் : வீட்டெஜமான்
யாரிடம் : வேலைக்காரரிடம்

3. "நாங்கள் போய் அவைகளைப் பிடுங்கிப் போட உமக்குச் சித்தமா?".(மத்தேயு 13 : 28)
யார் : வேலைக்காரர்
யாரிடம் : வீட்டெஜமானிடம்

4. "இரண்டையும் அறுப்பு மட்டும் வளர விடுங்கள்.".( மத்தேயு 13 : 29)
யார் : வீட்டெஜமான்
யாரிடம் : வேலைக்காரரிடம்

**VI** *ஓரிரு வாக்கிய களில் விடையளி :*

1. நல்ல விதை யாரைக் காட்டுகிறது? அதை விதைத்தவர் யார்?
நல்ல விதை ராஜ்யத்தின் புத்திரரைக் காட்டுகிறது. நல்ல விதையை விதைத்தவர் மனுஷகுமாரன். அதாவது கர்த்தராகிய இயேசு கிறிஸ்து (மத்தேயு 13 : 37, 38)

2. இராஜ்யத்தின் புத்திரர் எதினால் உண்டாக்கப்படுகிறார்கள்?
இராஜ்யத்தின் புத்திரர் தேவ வசனமாகிய அழிவில்லாத வித்தினாலே உண்டாக்கப்படுகிறார்கள். (1பேதுரு 1 : 23)

3. களைகள் எதைக் குறிக்கிறது ? அதை விதைக்கிறவன் யார்?
களைகள் பொல்லாங்கனுடைய புத்திரரைக் குறிக்கிறது. அதை விதைக்கிறவன் சத்துருவாகிய பிசாசு. (மத்தேயு 13 : 38, 39)

4. அறுப்புக் காலம் எதைக் குறிக்கிறது? அறுக்கிறவர்கள் யார்?
அறுப்புக்காலம் உலகத்தின் முடிவைக் குறிக்கிறது. அறுக்கிறவர்கள் தேவதூதர்கள் (மத்தேயு 13 : 39)

5. உலகத்தின் முடிவில் மனுஷகுமாரன் யாரை இந்த உலகத்திற்கு அனுப்புவார்? அவர்கள் என்ன செய்வார்கள்?
மனுஷகுமாரன் தம்முடைய தூதர்களை அனுப்புவார். அவர்கள் அவருடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து அக்கினிச் சூளையிலே போடுவார்கள். அங்கே அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும். (மத்தேயு 13 : 41, 42)

6. தேவ தூதர்கள் அக்கினிச் சூளையிலே யாரைப் போடுவார்கள்?
தேவனுடைய ராஜ்யத்தில் இருக்கிற சகல இடறல்களையும் அக்கிரமஞ் செய்கிறவர்களையும் சேர்த்து அக்கினிச் சூளையிலே போடுவார்கள். (மத்தேயு 13 : 41,42)

7. சூரியனைப் போல யார் பிரகாசிப்பார்கள் ? எங்கே பிரகாசிப்பார்கள்?
நீதிமான்கள் தங்கள் பிதாவின் ராஜ்யத்திலே சூரியனைப் போலப் பிரகாசிப்பார்கள். (மத்தேயு 13 : 43)

8. களைகளை அறுப்புக்காலம் மட்டும் வளரவிடுங்கள் என்று ஏன் வீட்டெஜமான தன் வேலைக்காரருக்குக் கட்டளையிட்டான்?

களைகளைப் பிடுங்கும் போது கோதுமையையுங் கூட வேரோடே பிடுங்காதபடிக்கு இரண்டையும் அறுப்புமட்டும் வளர விடுங்கள் என்று வீட்டெஜமான் தன் வேலைக்காரருக்கு கட்டளையிட்டான். (மத்தேயு 13 : 29)

**VII** *சுருக்கமான விடையளி* : (5 Marks)

**1.** கோதுமைகளுடன் களைகளை வளர்கிறதை கண்டதும் வீட்டு எஜமானுக்கும், அவனுடைய வேலைக்காரருக்கும் இடையில் நடந்த சம்பாஷனை என்ன?

வீட்டெஜமானுடைய வேலைக்காரர் கோதுமைகளுடன் களைகள் வளர்கிறதைக் கண்டபோது , தங்கள் எஜமானிடத்தில் வந்து, “ஆண்டவனே, நீர் உமது நிலத்தில் நல்ல விதையை விதைத்தீர் அல்லவா? பின்னை அதில் களைகள் எப்படி உண்டானது” என்றார்கள்.

அதற்கு அவன் : “சத்துரு அதைச் செய்தான்”என்றான். அப்பொழுது வேலைக்காரர்: “நாங்கள் போய் அவைகளைப் பிடுங்கிப்போட உமக்குச் சித்தமா?” என்று கேட்டார்கள்.

அதற்கு அவன் : “வேண்டாம், களைகளைப் பிடுங்கும்போது நீங்கள் கோதுமையையுங் கூட வேரோடே பிடுங்காதபடிக்கு , இரண்டையும் அறுப்பு மட்டும் வளர விடுங்கள் அறுப்புக்காலத்தில் நான் அறுக்கிறவர்களை நோக்கி : முதலாவது, களைகளைப் பிடுங்கி, அவைகளைச் சுட்டெரிக்கிறதற்குக் கட்டுகளாகக் கட்டுங்கள் , கோதுமையையோ என்

களஞ்சியத்தில சேர்த்து வையுங்கள் என்பேன் ” என்று சொன்னான் .
(மத்தேயு 13 : 27 - 30)

**2.** கோதுமையும் களைகளும் நிலத்தில் சேர்ந்து வளர்கிறதை கண்ட வீட்டெஜமான் சொன்னவைகளின் ஆவிக்குரிய கருத்து என்ன?

வீட்டெஜமான் சொன்னது போல உலகத்தின் முடிவரையும் இராஜ்யத்தின் புத்திரரும் , பொல்லாங்கனுடைய புத்திரரும் ஒன்றாய் வளருவார்கள். கடைசியில் கோதுமையாகிய இராஜ்யத்தின் புத்திரர் பிதாவின் இராஜ்யத்தில் சூரியனைப் போலப் பிரகாசிப்பார்கள். களைகளாகிய பொல்லாங்கனுடைய புத்திரர் அழுகையும் பற்கடிப்புமுள்ள அக்கினிச் சூளையில் போடப்படுவார்கள். (மத்தேயு 13 : 40 - 43)

**3.** பின்வருவனவற்றின் ஆவிக்குரிய அர்த்தமென்ன:

மனுஷ குமாரன், நிலம், நல்ல விதை, களைகள், களைகளை விதைக்கிறவன், சத்துரு, அறுப்புக்காலம், அறுக்கிறவர்கள் , அழிவில்லாத வித்து.

| | | | |
|---|---|---|---|
| *1.* மனுஷ குமாரன் | - | கர்த்தராகிய இயேசு கிறிஸ்து | (மத்தேயு 13 : 37) |
| *2.* நிலம் | - | உலகம் | (மத்தேயு 13 : 38) |
| *3.* நல்ல விதை | - | ராஜ்யத்தின் புத்திரர் | (மத்தேயு 13 : 38) |
| *4.* களைகள் | - | பொல்லாங்கனுடைய புத்திரர் | (மத்தேயு 13 : 38) |
| *5.* களைகளை விதைக்கிறவன் | - | பிசாசு | (மத்தேயு 13 : 39) |
| *6.* சத்துரு | - | பிசாசு | (மத்தேயு 13 : 39) |
| *7.* அறுப்புக்காலம் | - | உலகத்தின் முடிவு | (மத்தேயு 13 : 39) |
| *8.* அறுக்கிறவர்கள் | - | தேவ தூதர்கள் | (மத்தேயு 13 : 39) |
| *9.* அழிவில்லாத வித்து | - | தேவ வசனம் | (1 பேதுரு 1 : 23) |

**VIII** *போதனை*: (2 ½ Marks)

தேவன் நமக்குத் தந்திருக்கும் ஆசீர்வாதங்களைப் பிசாசு அழித்துப் போடாதபடிக்கு நாம் கவனமாயிருக்க வேண்டும்.

**********

# நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷம்

(மத்தேயு 13 : 44)

**I** *மனப்பாட வசனம் :* (2 ½ Marks)

பிலிப்பியர் 3 : 7, 8

ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன்.

அதுமாத்திரமல்ல, என் கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவை அறிகிற அறிவின் மேன்மைக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன்.

**II** *பொருத்துக :* (1 Mark)

| | | | |
|---|---|---|---|
| *1.* மறைவான பொக்கிஷம் | - | பரலோக ராஜ்யம் | (மத்தேயு 13 : 44) |
| *2.* மறைவான பொக்கிஷம் | - | இயேசு | (மத்தேயு 13 : 44) |
| *3.* பொக்கிஷம் | - | விலையேறப்பெற்றது | (மத்தேயு 13 : 44) |
| *4.* விலையேறப்பெற்றவர் | - | இயேசு | (பாடத்திட்டம்) |

**III** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

**1.** ____________________ நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்துக்கு ஒப்பாயிருக்கிறது.

**2.** இவ்வுலகத்தின்____________________நாம் வெறுத்தால் இயேசுவையும் பரலோக இராஜ்யத்தையும் சுதந்தரித்துக் கொள்ளலாம்.

விடைகள்

1. பரலோக ராஜ்யம் (மத்தேயு 13 : 44)    2 பொருட்களை (போதனை)

**IV** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :* (2 Marks)

**1.** மறைவான பொக்கிஷம் எதைக் குறிக்கிறது?

மறைவான பொக்கிஷம் பரலோக ராஜ்யத்தையும் , இயேசுவையும் குறிக்கிறது. (பாடத்திட்டம்)

**2.** பொக்கிஷம் விலையேறப்பெற்றது, மறைந்திருக்கிறது - இது எதைக் காட்டுகிறது?

பொக்கிஷம் விலையேறப்பெற்றது, மறைந்திருக்கிறது. அது போலவே இயேசு விலையேறப் பெற்றவராகவும் உலகத்திற்கு மறைக்கப்பட்டவராகவும் (அறியப்படாதவராகவும்) இருக்கிறார் என்பதைக் காட்டுகிறது. (பாடத்திட்டம்)

3. நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்தைக் கண்ட மனுஷன் என்ன செய்தான்?
நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்தைக் கண்ட மனுஷன், அதை மறைத்து, அதைப் பற்றிய சந்தோஷத்தினாலே போய், தனக்கு உண்டான எல்லாவற்யையும் விற்று, அதை வாங்கினான். (மத்தேயு 13 : 44)

4. நாம் இவ்வுலகத்தின பொருட்களை வெறுத்து ஜீவிக்கும் போது எவற்றைச் சுதந்தரித்துக் கொள்ளலாம்?
நாம் இவ்வுலகத்தின் பொருட்களை வெறுத்து ஜீவித்தால் இயேசுவையும் பரலோக இராஜ்யத்தையும் சுதந்தரித்துக் கொள்ளலாம். (போதனை)

## V *சுருக்கமான விடையளி* : (5 Marks)

1. இயேசுவை நமக்கு சொந்தமாக்கிக் கொள்ளும்படியாக நாம் என்ன செய்ய வேண்டும்?
நிலத்தில் புதைத்திருக்கிற பொக்கிஷத்தை கண்ட மனுஷன், அதன் மூலம் தனக்குக் கிடைக்கும் மேன்மைகளையும் உயர்வையும் உணரும் போது, மற்றவர்கள் அக்காரியத்தைக் அறியாதபடி மறைத்தவனாய், போய், தனக்கு உண்டான எல்லாவற்றையும் விற்று, அந்நிலத்தை வாங்குகிறான். அதுபோல நாமும் மறைவான பரலோக பொக்கிஷமாகிய நம் ஆண்டவர் இயேசுவின் மூலமாக, நாம் அடைந்துக்கொள்ளப் போகிற சகலவிதமான நித்திய ஆவிக்குரிய ஆசீர்வாதங்களை குறித்து அறியும்போது, எப்படியாவது - நமக்குரிய எல்லாவற்றையும் கொடுத்தாவது - அவரை நம் சொந்தமாக்கிக் கொள்ளும்படியாக ஆயத்தமாயிருக்க வேண்டும்.

## VI *போதனை*: (2 ½ Marks)

இவ்வுலகத்தின் பொருட்களை நாம் வெறுத்தால், நாம் கர்த்தராகிய இயேசுவையும், பரலோக ராஜ்யத்தையும சுதந்தரித்துக் கொள்ளலாம்.

**********

வகுப்பு: 5 | பாடம்-15



# திராட்சத் தோட்டத்தின் வேலையாட்கள்

(மத்தேயு 20 : 1 - 16)

## I *மனப்பாட வசனம் :* (2 ½ Marks)

எபேசியர் 6 : 6 - 8

மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், கிறிஸ்துவின் ஊழியக்காரராக, மனப்பூர்வமாய் தேவனுடைய சித்தத்தின்படி செய்யுங்கள்.

அடிமையானவனானாலும், சுயாதீனமுள்ளவனானாலும், அவனவன் செய்கிற நன்மையின்படியே கர்த்தரிடத்தில் பலனை அடைவானென்று அறிந்து,

மனுஷருக்கென்று ஊழியஞ்செய்யாமல், கர்த்தருக்கென்றே நல்மனதோடே ஊழியஞ் செய்யுங்கள்.

## II *பொருத்துக :* (1 Mark)

1. திராட்சத் தோட்டம் - சபை (போதனை)
2. தயாளன் - இயேசு (மத்தேயு 20 : 15)

## III *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

1. ________________ தன் திராட்சத் தோட்டத்துக்கு வேலையாட்களை அமர்த்த அதிகாலையிலே புறப்பட்ட வீட்டெஜமானாகிய ஒரு மனுஷனுக்கு ஒப்பாயிருக்கிறது.
2. திராட்சத் தோட்டத்துக்கு எஜமான் தன் காரியகாரனை நோக்கி, நீ வேலையாட்களை அழைத்து________________தொடங்கி________________ வரைக்கும் அவர்களுக்குக் கூலி கொடு என்றான்.
3. ________________தங்களுக்கு அதிக கூலி கிடைக்கும் என்று எண்ணினார்கள்.

| விடைகள் | |
|---|---|
| 1. பரலோக ராஜ்யம் (மத்தேயு 20 : 1) | 3.முந்தி அமர்த்தப்பட்டவர்கள் (மத். 20 : 10) |
| 2 பிந்தி வந்தவர்கள், முந்தி வந்தவர்கள் (மத்தேயு 20 : 8) | |

## IV *ஒரே வார்த்தையில் விடை எழுது :* (2 Mark)

1. வீட்டெஜமான் திராட்சத்தோட்டத்துக்கு வேலையாட்களை அமர்த்த எப்போது புறப்பட்டார்?
   அதிகாலையில் (மத்தேயு 20 : 1)

2. வீட்டெஜமான் தான் முதலாவதாக அமர்த்தின திராட்சத்தோட்டத்தின் வேலையாட்களுக்கு எவ்வளவு கூலி தருவதாகக் கூறினார்?
   ஒரு பணம் (மத்தேயு 20 : 2)

3. திராட்சத் தோட்டத்தின் எஜமான் பகல் முழுவதும் சும்மா நின்றவர்களை எந்த மணி வேளையில் வேலைக்கு அமர்த்தினார்?
   பதினோராம் (மத்தேயு 20 : 6)
4. பகலின் கஷ்டத்தையும் வெயிலின் உஷ்ணத்தையும் சகித்தோம் என்று திராட்சத் தோட்டத்தின் எஜமானிடம் கூறியது யார்?

   முந்தி அமர்த்தப்பட்டவர்கள் . (மத்தேயு 20 : 12)

**V** ***யார் யாரிடம் கூறியது :*** (3 Marks)

1. "நீங்கள் பகல் முழுவதும் இங்கே சும்மா நிற்கிறதென்ன."(மத்தேயு 20 : 6)
யார் : திராட்சத் தோட்டத்துக்கு எஜமான்
யாரிடம் : பதினோராம் மணி வேளையில் சும்மா நின்றவர்களிடம்

2. "நீ வேலையாட்களை அழைத்து, பிந்தி வந்தவர்கள் தொடங்கி முந்தி வந்தவர்கள் வரைக்கும் அவர்களுக்குக் கூலி.கொடு." (மத்தேயு 20 : 8)
யார் : திராட்சத் தோட்டத்துக்கு எஜமான்
யாரிடம் : காரியக்காரனிடம்

3. "பகலின் கஷ்டத்தையும் வெயிலின் உஷ்ணத்தையும் சகித்த எங்களுக்கு இவர்களைச் சமமாக்கினீரே?".(மத்தேயு 20 : 12)
யார் : முந்தி அமர்த்தப்பட்டவர்கள்
யாரிடம் : திராட்சத் தோட்டத்துக்கு எஜமானிடம்

4. a) "சிநேகிதனே, நான் உனக்கு அநியாயஞ் செய்ய வில்லை"
b) "நீ என்னிடத்தில் ஒரு பணத்துக்குச் சம்மதிக்கவில்லையா? "
c) "உன்னுடையதை நீ வாங்கிக் கொண்டு போ"
d) "நான் தயாளனாயிருக்கிறபடியால், நீ வன் கண்ணனாயிருக்கலாமா.".
( மத்தேயு 20 : 13 - 15)
யார் : திராட்சத் தோட்டத்துக்கு எஜமான்
யாரிடம் : முந்தி அமர்த்தப்பட்டவர்களில் ஒருவனிடம்

**VI** ***ஓரிரு வாக்கிய□களில் விடையளி :*** (2 Marks)

1. மூன்றாம் மணி வேளையில் திராட்சத் தோட்டத்துக்கு எஜமான் என்ன செய்தான்?
திராட்சத் தோட்டத்துக்கு எஜமான் மூன்றாம் மணி வேளையில் புறப்பட்டுப் போய், கடைத் தெருவிலே சும்மா நிற்கிற சிலரைக் கண்டு 'திராட்சத்தோட்டத்துக்குப் போங்கள் , நியாயமானபடி உங்களுக்குக் கூலி கொடுப்பேன்' என்றான். (மத்தேயு 20 : 3, 4)

2. பதினோரம் மணி வேளையில் திராட்சத் தோட்டத்துக்கு எஜமான் என்ன செய்தான்?
பதினோராம் மணிவேளையிலும் அவன் போய், சும்மா நிற்கிற வேறு சிலரைக் கண்டு : "நீங்கள் பகல் முழுவதும் இங்கே சும்மா நிற்கிறதென்ன" என்று கேட்டான்.
அதற்கு அவர்கள் : "ஒருவரும் எங்களுக்கு வேலையிடவில்லை" என்றார்கள். அவன் அவர்களை நோக்கி : "நீங்களும் திராட்சத்தோட்டத்துக்குப் போங்கள், நியாயமானபடி கூலி பெற்றுக் கொள்வீர்கள்" என்றான். (மத்தேயு 20 : 6, 7)

3. திராட்சத் தோட்டத்திற்கு எஜமான் எப்பொழுதெல்லாம் தன் தோட்டத்திற்கு வேலை ஆட்களை அனுப்பினான்?
திராட்சத் தோட்டத்துக்கு எஜமான் அதிகாலையிலும், மூன்றாம், ஆறாம், ஒன்பதாம், பதினோராம் மணி வேளையிலும் தன் தோட்டத்திற்கு வேலை ஆட்களை அனுப்பினான். (மத்தேயு 20 : 1 - 7)

4. சாயங்காலத்தில் திராட்சத் தோட்டத்துக்கு எஜமான் தன் காரியக்காரனிடம் கூறியது என்ன?
சாயங்காலத்தில், திராட்சத் தோட்டத்துக்கு எஜமான் தன் காரியக்காரனை நோக்கி, "நீ வேலையாட்களை அழைத்து, பிந்திவந்தவர்கள் தொடங்கி முந்தி வந்தவர்கள் வரைக்கும் அவர்களுக்குக் கூலி கொடு" என்றான். (மத்தேயு 20 : 8)

5. திராட்சத் தோட்டத்திற்கு வேலைக்கு அமர்த்தப்பட்டவர்களில் முதலாவது கூலியை வாங்கினவர்கள் யார் ? அவர்கள் எவ்வளவு கூலி வாங்கினார்கள்?
பதினோராம் மணி வேளையில் வேலையமர்த்தப்பட்டவர்கள் வந்து ஆளுக்கு ஒவ்வொரு பணம் கூலி வாங்கினார்கள் (மத்தேயு 20 : 9)

6. பதினோராம் மணிவேளையில் வேலையமர்த்தப்பட்டவர்கள் ஆளுக்கு ஒவ்வொரு பணம் கூலியாகப் வாங்கினதைக் கண்ட போது, முந்தி அமர்த்தப்பட்டவர்கள் என்ன எண்ணினார்கள்? அவர்கள் எவ்வளவு கூலி வாங்கினார்கள்?

1. முந்தி அமர்த்தப்பட்டவர்கள் வந்து, தங்களுக்கு அதிக கூலி கிடைக்கும் என்று எண்ணினார்கள்.

2. ஆளுக்கு ஒவ்வொரு பணம் வாங்கினார்கள். (மத்தேயு 20 : 10)

**7.** திராட்சத் தோட்டத்தின் வேலைக்கு முந்தி அமர்த்தப்பட்டவர்கள் எவ்வாறு முறுமுறுத்தார்கள்?

திராட்சத் தோட்டத்தின் வேலைக்கு முந்தி அமர்த்தப்பட்டவர்கள் தங்கள் எஜமானை நோக்கி, ''பிந்திவந்தவர்களாகிய இவர்கள் ஒரு மணி நேர மாத்திரம் வேலை செய்தார்கள்: பகலின் கஷ்டத்தையும் வெயிலின் உஷ்ணத்தையும் சகித்த எங்களுக்கு இவர்களைச் சமமாக்கினீரே'' என்று முறுமுறுத்தார்கள். (மத்தேயு 20 : 12)

**8.** 'திராட்சத் தோட்டத்தின் வேலையாட்கள்' என்ற உவமையின் மூலம் இயேசு வெளிப்படுத்திய சத்தியம் என்ன?

இயேசு 'திராட்சத்தோட்டத்தின் வேலையாட்கள்' என்ற உவமையின் மூலம், ''பிந்தினோர் முந்தினோராயும், முந்தினோர் பிந்தினோராயும் இருப்பார்கள். அழைக்கப்பட்டவர்கள், அநேகர் தெரிந்து கொள்ளப்பட்டவர்களோ சிலர்'' என்ற சத்தியத்தை வெளிப்படுத்தினார். (மத்தேயு 20 : 16)

## VII *<u>சுருக்கமான விடையளி</u>* : (5 Marks)

**1.** திராட்சத் தோட்டத்தின் வேலைக்கு முந்தி அமர்த்தப்பட்டவர்கள் முறு முறுத்தபோது அவர்களுடைய எஜமான் அவர்களுக்கு கொடுத்த பதில் என்ன?

திராட்சத் தோட்டத்தின் எஜமான் அவர்களில் ஒருவனுக்கு பிரதியுத்தரமாக, ''சிநேகிதனே, நான் உனக்கு அநியாஞ் செய்ய வில்லை: நீ என்னிடத்தில் ஒரு பணத்துக்குச் சம்மதிக்க வில்லையா? உன்னுடையதை நீ வாங்கிக் கொண்டு போ, உனக்குக் கொடுத்தது போலப் பிந்திவந்தவனாகிய இவனுக்கும் கொடுப்பது என்னுடைய இஷ்டம். என்னுடையதை என் இஷ்டப்படி செய்ய எனக்கு அதிகாரமில்லையா? நான் தயாளனாயிருக்கிறபடியால், நீ வன்கண்ணனாயிருக்கலாமா'' என்றான். (மத்தேயு20:13 – 15).

## VIII *<u>போதனை</u>*: (2 ½ Marks)

திராட்சத் தோட்டம் சபையைக் காட்டுகிறது. நாம் உத்தமத்துடனும் முழு இருதயத்துடனும் கர்த்தருக்குச் செய்யும் சேவைக்காக அவர் நமக்குப் பிரதிபலன் அருளுகிறார்.

**********

வகுப்பு: 5

பாடம்-16

# சகேயு

(லூக்கா 19 : 1 - 10)

**I** *மனப்பாட வசனம் :* (2 ½ Marks)

மத்தேயு 7 : 7, 8.

கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள் ; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும் ;

ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான்; தேடுகிறவன் கண்டடைகிறான், தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும்,

**II** *பொருத்துக :* (1 Mark)

| | | | |
|---|---|---|---|
| **1.** இயேசு | - | மனுஷகுமாரன் | (லூக் 19 : 10) |
| **2.** இயேசு | - | இழந்து போனதைத் தேடுகிறவர் | (லூக் 19 : 10) |
| **3.** சகேயு | - | ஐசுவரியவான் | (லூக். 19 : 2) |
| **4.** சகேயு | - | ஆயக்காரரின் தலைவன் | (லூக். 19 : 2) |
| **5.** சகேயு | - | பாவியான மனுஷன் | (லூக். 19 : 7) |
| **6.** சகேயு | - | ஆபிரகாமின் குமாரன் | (லூக். 19 : 9) |

**III** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

1. __________ குள்ளனானபடியால் இயேசுவைக் காணமுடியவில்லை.
2. இயேசுவைப் பார்க்கும்படி சகேயு __________ மரத்தில் ஏறினான்.
3. __________ இயேசுவை சந்தோஷத்தோடே தன் வீட்டுக்கு அழைத்துக்கொண்டு போனான்.
4. சகேயு தன் ஆஸ்தியில் பாதியை __________ கொடுக்கிறேன் என்றான்.
5. மனுஷகுமாரன் __________ தேடவும் இரட்சிக்கவும் வந்தார்.

விடைகள்

1. சகேயு (லூக். 19 : 3)
2 காட்டத்தி (லூக். 19 : 4)
3. சகேயு (லூக். 19 : 6)
4. ஏழைகளுக்கு (லூக். 19 : 8)
5. இழந்துபோனதை (லூக். 19 : 10)

**IV** *ஓரே வார்த்தையில் விடை எழுது :* (2 Mark)

**1.** சகேயு எந்தப் பட்டணத்தில் வசித்து வந்தான்?
எரிகோ *(லூக், 19 : 1)*

**2.** இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகைதேடினவன் யார்?
சகேயு *(லூக். 19 : 3)*

**3.** இழந்துபோனதைத் தேடவும் இரடசிக்கவும் வந்தவர் யார்?
இயேசு *(லூக். 19 : 10)*

**V** *யார், யாரிடம் கூறியது :* (3 Marks)

**1. a.** “நீ சீக்கிரமாய் இறங்கி வா ”
**b.** “இன்றைக்கு நான் உன் வீட்டில் தங்கவேண்டும்” (லூக். 19 : 5)
யார் : இயேசு
யாரிடம் : சகேயுவிடம்

**2. a.** “ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன்”
**b.** “நான் ஒருவனிடத்தில் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன்” (லூக். 19 : 8)
யார் : சகேயு
யாரிடம் : இயேசுவிடம்

3. “இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது” (லூக். 19 : 9)
யார் : இயேசு
யாரிடம் : சகேயுவிடம்

**VI** ***ஓரிரு வாக்கிய□களில் விடையளி :***

1. சகேயு என்பவன் யார்? அவன் யாரைப் பார்க்க விரும்பினான்?
சகேயு என்பவன் ஆயக்காரனுக்குத் தலைவனும் ஐசுவரியவானுமாயிருந்தான். அவன் இயேசுவைப் பார்க்க விரும்பினான் (லூக். 19 : 2, 3).

2. சகேயுவால் ஏன் இயேசுவைக் காணமுடியவில்லை? அவரைப் பார்க்கும்படி அவன் என்ன செய்தான்?
சகேயு குள்ளனானபடியால், ஜனக்கூட்டத்தில் இயேசுவைக் காணமுடியவில்லை.
அவரைப் பார்க்கும்படி, அவர் போகும்வழியில் முன்னாக ஓடி, ஒரு காட்டத்தி மரத்தில் ஏறினான் (லூக். 19 : 3, 4).

3. இயேசு சகேயு ஏறியிருந்த காட்டத்தி மரத்தினிடத்தில் வந்தபோது என்ன செய்தார்?
இயேசு சகேயு ஏறியிருந்த காட்டத்தி மரத்தினிடத்தில் வந்தபோது, அண்ணாந்துபார்த்து, அவனைக்கண்டு, சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கி வா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும் என்றார் (லூக். 19 : 5).

4. இயேசு சகேயுவின் வீட்டில் தங்கவேண்டும் என்று சொன்னபோது சகேயு என்ன செய்தான்?
சகேயு சீக்கிரமாய் இறங்கி சந்தோஷத்தோடே இயேசுவை அழைத்துப் போனான் (லூக்19:6).

5. இயேசு சகேயுவின் வீட்டிற்குச் செல்வதைக்கண்ட யாவரும் என்ன செய்தார்கள்?
இயேசு சகேயுவின் வீட்டிற்குச் செல்வதைக்கண்ட யாவரும், இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படி போனார் என்று முறுமுறுத்தார்கள் (லூக். 19 : 7).

6. சகேயுவின் இருதயத்தில் ஏற்பட்ட மாற்றத்தையும் தீர்மானத்தையும் இயேசு கண்டபோது அவனிடம் என்ன சொன்னார்?
இயேசு சகேயுவை நோக்கி, “இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே. இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்” என்றார் (லூக். 19 : 9, 10).

7. மனுஷகுமாரனாகிய இயேசு உலகத்திற்கு வந்ததின் நோக்கம் என்ன?
இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரனாகிய இயேசு உலகத்திற்கு வந்தார் (லூக். 19 : 10).

8. சகேயுவும், அவன் வீட்டாரும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ள காரணமாக இருந்தது எது?
தடைகளின் மத்தயிலும், எப்படியாகிலும் இயேசுவைக் காணவேண்டுமென்ற சகேயுவின் வாஞ்சையே, அவனும் அவன் வீட்டாரும் ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொள்ளக் காரணமாக இருந்தது (பாடத்திட்டம்).

**VII** ***சுருக்கமான விடையளி*** : (5 Marks)

1. இயேசுவை தன் வீட்டிற்கு சந்தோ மாய் அழைத்துக்கொண்டுப்போன சகேயுவின் இருதயத்தில் ஏற்பட்ட மாற்றமும் அதனாலுண்டான தீர்மானமும் என்ன?
“இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும்” என்று இயேசு சகேயுவினிடத்தில் சொன்னபோது அவன் சந்தோஷமாய் அவரை அழைத்துக்கொண்டுப்போனான்.அதைக் கண்ட மனுஷர் யாவரும், “இவர் பாவியான மனுஷனாகிய சகேயுவினிடத்தில் தங்கும்படி போனார்” என்று முறுமுறுத்தார்கள். இதைக் கேட்ட சகேயு நின்று, கர்த்தரை நோக்கி, “ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன்” என்றான் (லூக். 19 :5-8).
இப்படியாக சகேயுவின் இருதயத்தில் ஏற்பட்ட மாற்றம் நல்ல தீர்மானமாக வெளிப்பட்டது.

**VIII** ***போதனை***: (2 ½ Marks)

நாம் கர்த்தராகிய இயேசுவைத் தேடி, அவரைக்காண ஆவலாயிருக்கும்போது, கர்த்தராகிய இயேசு நம்மைத் தேடி வந்து நம் சகல தேவைகளையும் நிறைவேற்றுகிறார்.

**********

வகுப்பு: 5

பாடம்-17

ஞாயிறு பள்ளி

# தாலந்துகளைப் பற்றிய உவமை

(மத்தேயு 25 : 14 - 30)

**I** *மனப்பாட வசனம் :* (2 Marks)

மத்தேயு 25 : 21.

" அவனுடைய எஜமான் அவனை நோக்கி: நல்லது, உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான்"

**II** *பொருத்துக :* (1 Mark)

1. தாலந்தை உபபோகித்தவன் - உண்மையுள்ள ஊழியக்காரன் (மத். 25 : 21)
2. தாலந்தை உபபோகித்தவன் - உத்தமமான ஊழியக்காரன் (மத். 25 : 21)
3. தாலந்தை புதைத்தவன் - பொல்லாத ஊழியக்காரன் (மத். 25 : 26)
4. தாலந்தை புதைத்தவன் - சோம்பலான ஊழியக்காரன் (மத். 25 : 26)
5. தாலந்தை புதைத்தவன் - பிரயோஜனமற்ற ஊழியக்காரன் (மத். 25 : 30)

**III** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

1. __________ தன் ஊழியக்காரருடைய திறமைக்குத்தக்கதாக தாலந்துகளைக் கொடுத்தான்.
2. __________ தாலந்தை வாங்கினவன் நிலத்தைத்தோண்டி தன் எஜமானுடைய பணத்தைப் புதைத்து வைத்தான்.
3. கொஞ்சத்தில் உண்மையாயிருந்தாய். __________ உன்னை அதிகாரியாக வைப்பேன் என்று எஜமான் சொன்னான்.
4. உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும். __________ அடைவான். இல்லாதவனிடத்திலிருந்து உள்ளதும் __________ .
5. புறம்பான இருளிலே __________யும், __________ ம் உண்டாயிருக்கும்.

விடைகள்

1. எஜமான் (மத்தேயு 25 : 15)
2 ஒரு (மத்தேயு 25 : 18)
3. அநேகத்தின்மேல் (மத்தேயு 25 : 21)
4. பரிபூரணம், எடுத்துக்கொள்ளப்படும் (மத்தேயு 25 : 29)
5. அழுகை, பற்கடிப்பு(மத்தேயு 25 : 30)

**IV** *ஒரே வார்த்தையில் விடை எழுது :* (2 Mark)

1. எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசிக்கும் சிலாக்கியத்தைப் பெற்றவன் யார்?
   உண்மையான ஊழியக்காரன் *(மத்தேயு 25 : 21)*

2. பயந்துபோய் தன்னுடைய தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தவன் யார்?
   ஒரு தாலந்தை வாங்கினவன் *(மத்தேயு 25 : 25)*

3. நிலத்தில் புதைத்துப்போட்டவனிடத்திலிருந்த தாலந்தை வாங்கி எஜமான் யாரிடம் கொடுத்தார்?
   பத்து தாலந்துள்ளவனிடத்தில் *(மத்தேயு 25 : 28)*

4. அழுகையும் பற்கடிப்பும் உள்ள இடத்தில் பங்கடைந்தவன் யார்?
   ஒரு தாலந்தை வாங்கினவன் *(மத்தேயு 25 : 30)*

5. பிரயோஜனமற்ற ஊழியக்காரனை எங்கே தள்ளிப்போட்டார்கள்?
   புறம்பான இருள் *(மத்தேயு 25 : 30)*

**V** *யார், யாரிடம் கூறியது :* (3 Marks)

1. **a.**"ஆண்டவரே, நீர் விதைக்காத இடத்தில் அறுக்கிறவரும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவருமான கடினமுள்ள மனுஷன் " (மத்தேயு 25 : 24)
   **b.** "நான் பயந்து, போய், உமது தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தேன்"(மத் 25:25)
   **c.** "இதோ, உம்முடையதை வாங்கிக்கொள்ளும்" (மத்தேயு 25 : 25)

யார் : ஒரு தாலந்தை வாங்கினவன்
யாரிடம் : தன் எஜமானிடம்

2. "நான் வந்து என்னுடையதை வட்டியோடே வாங்கிக்கொள்வேனே" (மத்தேயு 25 : 27)
யார் : எஜமான்
யாரிடம் : ஒரு தாலந்தை வாங்கினவனிடம்

## VI *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :*

1. தாலந்துகளைப் பற்றிய உவமையில் பரலோகராஜ்யம் எதற்கு ஒப்பிடப்பட்டுள்ளது?
தாலந்துகளைப் பற்றிய உவமையில் பரலோகராஜ்யம் புறத்தேசத்துக்குப் பிரயாணமாய்ப்போகிற ஒரு மனுஷன், தன் ஊழியக்காரரை அழைத்து, தன் ஆஸ்திகளை அவர்கள் வசமாய் ஒப்புக்கொடுத்ததுபோல் இருக்கிறது (மத். 25 : 14).

2. ஐந்து தாலந்தை வாங்கின ஊழியக்காரன் என்ன செய்தான்?
ஐந்து தாலந்தை வாங்கினவன்போய், அவைகளைக்கொண்டு வியாபாரம்பண்ணி, வேறு ஐந்து தாலந்தைச் சம்பாதித்தான் (மத் 25 : 16).

3. இரண்டு தாலந்தை வாங்கின ஊழியக்காரன் என்ன செய்தான்?
இரண்டு தாலந்தை வாங்கினவன் போய், அவைகளைக்கொண்டு வியாபாரம்பண்ணி வேறு இரண்டு தாலந்தைச் சம்பாதித்தான் (மத். 25 : 17).

4. ஒரு தாலந்தை வாங்கின ஊழியக்காரன் என்ன செய்தான்?
ஒரு தாலந்தை வாங்கினவன் போய், நிலத்தைத்தோண்டி, தன் எஜமானுடைய பணத்தைப் புதைத்துவைத்தான் (மத். 25 : 18).

5. புறதேசத்தற்குப் பிரயாணமாய்ப் போயிருந்த எஜமான் எப்போது திரும்பி வந்தான்? வந்து என்ன செய்தான்?
புறதேசத்திற்குப் பிரயாணமாய் போயிருந்த எஜமான் வெகுகாலமானபின்பு திரும்பிவந்து தன் ஊழியக்காரரிடம் கணக்குக்கேட்டான் (மத். 25 : 19).

6. ஐந்து தாலந்து வாங்கின ஊழியக்காரன் தன் எஜமானிடத்தில் என்ன சொன்னான்?
ஐந்து தாலந்து வாங்கின ஊழியக்காரன் தன் எஜமானிடத்தில் வந்து, "ஆண்டவனே, ஐந்து தாலந்தை என்னிடத்தில் ஒப்புவித்தீரே; அவைகளைக்கொண்டு, இதோ வேறு ஐந்து தாலந்தைச் சம்பாதித்தேன்" என்றான் (மத். 25 : 20).

7. ஐந்து தாலந்தை வாங்கின ஊழியக்காரன் வேறு ஐந்து தாலந்தை சம்பாதித்தேன் என்று தன் எஜமானிடம் கூறியபோது, எஜமான் அவனுக்குக் கொடுத்த பிரதிபலன் என்ன?
எஜமான் அவனை நோக்கி: "நல்லது, உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான் (மத். 25 : 21).

8. இரண்டு தாலந்தை வாங்கின ஊழியக்காரன் தன் எஜமானிடத்தில் கூறியது என்ன?
இரண்டு தாலந்து வாங்கின ஊழியக்காரன் தன் எஜமானிடத்தில் வந்து, "ஆண்டவனே, இரண்டு தாலந்தை என்னிடத்தில் ஒப்புவித்தீரே; அவைகளைக்கொண்டு, இதோ, வேறு இரண்டு தாலந்தைச் சம்பாதித்தேன்" என்றான் (மத். 25 : 22).

9. இரண்டு தாலந்து வாங்கின ஊழியக்காரன் வேறு இரண்டு தாலந்தை சம்பாதித்தேன் என்று தன் எஜமானிடம் கூறியபோது, எஜமான் அவனுக்குக் கொடுத்த பிரதிபலன் என்ன?
எஜமான் அவனை நோக்கி: "நல்லது, உத்தமும் உண்மையுமுள்ள ஊழியக்காரனே, கொஞ்சத்திலே உண்மையாயிருந்தாய், அநேகத்தின்மேல் உன்னை அதிகாரியாக வைப்பேன், உன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசி என்றான் (மத். 25 : 23).

10. தான் பெற்ற தாலந்தை பிரயோஜனப்படுத்தாத ஊழிக்காரன் பெற்ற தண்டனை என்ன?
அவனுடைய எஜமான் வந்து,
(i) அவன் பெற்றிருந்த தாலந்தை எடுத்து பத்து தாலந்துள்ளவனுக்குக் கொடுத்துவிட்டார். (மத். 25 : 20).
(ii) அழுகையும் பற்கடிப்பும் உள்ள புறம்பான இருளில் அவனை தள்ளிவிட்டார் (மத். 25 : 30).

11. உள்ளவனுக்கு என்ன செய்யப்படும்? இல்லாதவனுக்கு என்ன செய்யப்படும்?
உள்ளவனெவனோ அவனுக்குக் கொடுக்கப்படும், பரிபூரணமும் அடைவான்; இல்லாதவனிடத்திலிருந்து உள்ளதும் எடுத்துக்கொள்ளப்படும் (மத். 25 : 29).

**VII** ***சுருக்கமான விடையளி*** : (5 Marks)

**1.** புறத்தேசத்திற்குப் பிரயாணமாய்ப் போகிற மனுஷன், தான் போகும்முன்பு, தன் ஊழியக்காரரை அழைத்து என்ன செய்தான்?

புறத்தேசத்துக்குப் பிரயாணமாய்ப் போகிற மனுஷன், தன் ஊழியக்காரரை அழைத்து அவனவனுடைய திறமைக்குத்தக்கதாக, ஒருவனிடத்தில் ஐந்து தாலந்தும், ஒருவனிடத்தில் இரண்டு தாலந்தும், ஒருவனிடத்தில் ஒரு தாலந்துமாகக் கொடுத்து, உடனே பிரயாணப்பட்டுப் போனான் (மத். 25 : 15).

**2.** எஜமான் தந்த ஒரு தாலந்தை அந்த ஊழியக்காரன் ஏன் நிலத்திலே புதைத்து வைத்தான்?

*(a)* அவன் தன் எஜமானைக்குறித்து பயம் நிறைந்தவனாக இருந்தான்(மத்.25 : 25) ஏனென்றால், தன்னுடைய எஜமான் விதைக்காத இடத்தில் அறுக்கிறவரும்,தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவருமான கடினமுள்ள மனுஷன் என்கிற தவறான எண்ணமும் அறிவும் உடையவனாக அவன் இருந்தான். (மத். 25 : 24).

*(b)* அவன் பொல்லாதவனாயிருந்தான் (மத். 25 : 26)

*(c)* அவன் சோம்பல் நிறைந்தவனாயிருந்தான் (மத். 25 : 26)

*(d)* அவன் பிரயோஜனமற்ற ஊழியக்காரனாக இருந்தான் (மத். 25 : 30)

*(e)* எஜமான் திரும்பவந்து அவனவனுடைய கிரியைகளின்படி அவனவனுக்குப் பிரதிபலன் அளிக்கிறவர் என்ற அறிவில்லாதவனாயிருந்தான் (மத். 25 : 26,27).

ஏனவே தான், அவன் தன் எஜமான் தனக்குக் கொடுத்த அந்த ஒரு தாலந்தை நிலத்தில் புதைத்து வைத்தான்.

**3.** ஒரு தாலந்தை வாங்கினவன் அதைக்கொண்டு வியாபாரம் செய்யவில்லை என்று சொன்னபோது, அவனுடைய எஜமான் அவனுக்குக்கொடுத்த பிரதியுத்தரம் என்ன?

எஜமான் பிரதியுத்தரமாக, “பொல்லாதவனும், சோம்பலுமான ஊழியக்காரனே, நான் விதைக்காத இடத்தில் அறுக்கிறவனென்றும், தெளிக்காத இடத்தில் சேர்க்கிறவனென்றும் அறிந்திருந்தாயே, அப்படியானால், நீ என் பணத்தைக் காசுக்காரர் வசத்தில் போட்டுவைக்க வேண்டியதாயிருந்தது; அப்பொழுது நான் வந்து என்னுடையதை வட்டியோடு வாங்கிக்கொள்வேனே” என்றான் (மத். 25 : 26, 27).

**5.** தான் பெற்ற ஒரு தாலந்தை பிரயோஜனப்படுத்தி, சம்பாதிக்காது புதைத்துவைத்த ஊழியக்காரனுக்கு, அவனுடைய எஜமான் கொடுத்த தண்டனைகள் யாது?

**(i)** அவனிடத்திலிருந்த ஒரு தாலந்தை எடுத்து தற்போது பத்து தாலந்துகளுள்ள ஊழியக்காரனுக்கு (எஜமானிடத்திலிருந்து பெற்ற ஐந்து தாலந்துகளைக் கொண்டு வேறு ஐந்து தாலந்துகளைச் சம்பாதித்து பத்து தாலந்துகளாக்கிக் கொண்ட ஊழியக்காரனுக்கு) கொடுக்கும்படியாகக் கட்டளையிட்டான்.(மத் 25:28)

**ii)** அவனை பொல்லாத ஊழியக்காரன் என்றும், சோம்பனுமான ஊழியக்காரன் என்றும், பிரயோஜனமற்ற ஊழியக்காரன் எனவும் அழைத்தது மாத்திரமல்ல, அழுகையும் பற்கடிப்பும் உண்டாயிருக்கும் புறம்பான இருளிலேயும் தள்ளிப்போடும்படியாக தண்டனை கொடுத்தான். (மத். 25 : 30).

**VIII** ***போதனை***: (2 ½ Marks)

தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் வரங்களையும் கிருபைகளையும் நாம் பிரயோஜனப்படுத்த வேண்டும். கர்த்தராகிய இயேசு மறுபடியும் வரும்போது, அவனவனுடைய கிரியைகளுக்குத்தக்கதாக அவனவனுக்குப் பலன் அளிப்பார்.

*********

வகுப்பு: 5

பாடம்-18

# எருசலேமுக்குள் கர்த்தராகிய இயேசுவின் வெற்றியுள்ள பிரவேசனம்

(மத்தேயு 21 : 1 - 16; சகரியா 9 : 9)

**I** *மனப்பாட வசனம் :* (2 ½ Marks)

பிலிப்பியர் 2 : 5 - 8.

கிறிஸ்து இயேசுவிலிருந்த சிந்தையே உங்களிலும் இருக்கக்கடவது.

அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல்,

தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார்,

அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்.

**II** *பொருத்துக :* (1 Mark)

| | | | |
|---|---|---|---|
| **1.** இயேசு | - | நீதியுள்ளவர் | (சகரியா 9 : 9) |
| **2.** இயேசு | - | இரட்சிக்கிறவர் | (சகரியா 9 : 9) |
| **3.** இயேசு | - | தாழ்மையுள்ளவர் | (சகரியா 9 : 9) |
| **4.** இயேசு | - | ஆண்டவர் | (மத்தேயு 21 : 3) |
| **5.** இயேசு | - | சாந்த குணமுள்ளவர் | (மத்தேயு 21 : 4) |
| **6.** இயேசு | - | ராஜா | (மத்தேயு 21 : 4) |
| **7.** இயேசு | - | தாவீதின் குமாரன் | (மத்தேயு 21 : 9) |
| **8.** இயேசு | - | கர்த்தரின் நாமத்தில் வருகிறவர் | (மத்தேயு 21 : 9) |
| **9.** இயேசு | - | தீர்க்கதரிசி | (மத்தேயு 21 : 11) |

**III** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

1. எருசலேமுக்குப் போகும் வழியில் கர்த்தராகிய இயேசுவும் அவருடைய சீஷர்களும் ஒலிவ மலைக்கு அருகான __________ க்கு வந்தார்கள்.
2. __________ கழுதையையும், குட்டியையும் கொண்டு வந்து அவைகள் மேல் தங்கள் வஸ்திரங்களைப் போட்டு இயேசுவை ஏற்றினார்கள்.
3. ஜனங்கள் இயேசுவை கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்த __________ என்றார்கள்.
4. __________ தேவாலயத்தில் பிரவேசத்து, காசுக்காரருடைய பலகைகளையும், புறா விற்கிறவர்களின் ஆசனங்களையும் கவிழ்த்துப் போட்டார்.
5. 'தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா' என்று தேவாலயத்திலே ஆர்ப்பரிக்கிற பிள்ளைகளை கண்டு __________ , __________ கோபமடைந்தார்கள்.

**விடைகள்**

1. பெத்பகேயு (மத்தேயு 21 : 1)
2 சீஷர்கள் (மத்தேயு 21 : 7)
3. தீர்க்கதரிசி (மத்தேயு 21 : 11)
4. இயேசு (மத்தேயு 21 : 12)
5. பிரதான ஆசாரியரும், வேதபாரகரும் (மத்தேயு 21 : 15)

**IV** *ஒரே வார்த்தையில் விடை எழுது ::* (2 Mark)

1. கர்த்தராகிய இயேசு கழுதையின் மேல் ஏறி வருகிறதைக் குறித்து தீர்க்தரிசனம் உரைத்த தீர்க்கதரிசி யார்?
   சகரியா *(சகரியா 9 : 9)*

2. கழுதையையும், அதன் குட்டியையும் அவிழ்த்து வரும்படி கர்த்தராகிய இயேசு எத்தனை சீஷர்களை அனுப்பினார்?
   இரண்டு *(மத்தேயு 21 :1, 2)*

3. கர்த்தராகிய இயேசு எருசலேமுக்கு பவனியாகச் செல்லும்போது தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தது யார்?
   ஜனங்கள் *(மத்தேயு 21 : 8)*

4. கர்த்தராகிய இயேசு எந்த நகரத்தில் பிரவேசிக்கையில் ஜனங்கள் ஆச்சரியப்பட்டார்கள்?
எருசலேம் *(மத்தேயு 21 : 10)*

**V** *யார், யாரிடம் கூறியது :* (3 Marks)

**1.** **a.** "உங்களுக்கு எதிரே இருக்கிற கிராமத்துக்குப் போங்கள் "
**b.** "அவைகளை அவிழ்த்து என்னிடத்தில் கொண்டு வாருங்கள் "
**c.** "இவைகள் ஆண்டவருக்கு வேண்டுமென்று சொல்லுங்கள் " (மத்தேயு 21 : 2)
யார் : இயேசு
யாரிடம் : இரண்டு சீஷர்களிடம்

**2.** "இவர் யார்? " (மத்தேயு 21 : 10, 11)
யார் : எருசலேம் நகரத்தார்
யாரிடம் : ஜனங்களிடம்

**3.** **a.** "என்னுடைய வீடு ஜெப வீடு"
**b.** "நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள் " (மத்தேயு 21 : 13)
யார் : இயேசு
யாரிடம் : ஆலயத்தில் விற்கிறவர்களையும் கொள்ளுகிறவர்களையும் பார்த்து கூறியது

**4.** "இவர்கள் சொல்லுகிறதைக் கேட்கிறீரோ" (மத்தேயு 21 : 16)
யார் : பிரதான ஆசாரியரும், வேதபாரகரும்
யாரிடம் : இயேசுவிடம்

**5.** "குழந்தைகளுடைய வாயினாலும் பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர் " (மத்தேயு 21 : 16)
யார் : இயேசு
யாரிடம் : பிரதான ஆசாரியரிடமும், வேதபாரகரிடமும்

**V1** *ஓரிரு வாக்கிய□களில் விடையளி :*

1. கர்த்தராகிய இயேசு தம்முடைய சீஷர்களில் இரண்டு பேரை பெத்பகேயுக்கு எதிரேயிருந்த கிராமத்துக்கு ஏன் அனுப்பினார்?
ஒரு கழுதையையும், அதன் குட்டியையும் கொண்டு வரும்படி அனுப்பினார் (மத்21: 2).

2. கர்த்தராகிய இயேசுவின் கட்டளையின்படி கழுதையையும், குட்டியையும் கொண்டு வந்தபின்பு, சீஷர்கள் என்ன செய்தார்கள்?
சீஷர்கள் கழுதையையும் குட்டியையும் கொண்டுவந்து அவைகள்மேல் தங்கள் வஸ்திரங்களைப் போட்டு, கர்த்தராகிய இயேசுவை அதின்மேல் ஏற்றினார்கள் (மத். 21 : 7).

3. கர்த்தராகிய இயேசு எருசலேமுக்கு பவனியாக சென்றபோது திரளான ஜனங்கள் என்ன செய்தார்கள்?
திரளான ஜனங்கள் தங்கள் வஸ்திரங்களை வழியிலே விரித்தார்கள், வேறு சிலர் மரக்கிளைகளைத் தறித்து வழியிலே பரப்பினார்கள் (மத். 21 : 8)

4. கர்த்தராகிய இயேசு எருசலேமுக்குப பவனியாகச் சென்றபோது முன்நடப்பாரும், பின் நடப்பாருமாகிய திரளான ஜனங்கள் என்ன சொல்லி ஆர்ப்பரித்தார்கள்?
முன்நடப்பாரும், பின் நடப்பாருமான ஜனங்கள் தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா! கர்த்தரின் நாமத்தினாலே வருகிறவர் ஸ்தோத்தரிக்கப்படத்தக்கவர், உன்னதத்திலே ஓசன்னா என்று சொல்லி ஆர்ப்பரித்தார்கள் (மத். 21 : 9)

5. கர்த்தராகிய இயேசு எருசலேமுக்குள் பிரவேசிக்கையில் நகரத்தார் என்ன செய்தார்கள்?
நகரத்தார் யாவரும் ஆச்சரியப்பட்டு, இவர் யார்? என்று விசாரித்தார்கள் (மத்21:10).

6. எருசலேம் நகரத்தார் இயேசுவைக் குறித்து ஆச்சரியப்பட்டு விசாரித்தபோது, ஜனங்கள் இயேசுவை 'யார்' என்று அறிக்கையிட்டார்கள்?
இவர் கலிலேயாவிலுள்ள நாசரேத்திலிருந்து வந்த தீர்க்கதரிசியாகிய இயேசு என்று ஜனங்கள் அறிக்கையிட்டார்கள் (மத். 21 : 11).

7. கர்த்தராகிய இயேசு தேவாலயத்திலிருந்து யாரைத் துரத்தினார்? யாருடைய ஆசனங்களைக் கவிழ்த்துப் போட்டார்?

(a) ஆலயத்திலே விற்கிறவர்களையும், கொள்ளுகிறவர்களையும் வெளியே துரத்தினார்.

(b) காசுக்காரருடைய பலகைகளையும், புறா விற்கிறவர்களின் ஆசனங்களையும் கவிழ்த்துப் போட்டார் (மத்தேயு 21 : 12).

8. கர்த்தராகிய இயேசு தேவாலயத்திலே யாரை சொஸ்தமாக்கினார்?
தேவாலயத்திலே அவரிடத்தில் வந்த குருடரையும், சப்பாணிகளையும் சொஸ்தமாக்கினார் (மத்தேயு 21 : 14)

9. கர்த்தராகிய இயேசு தேவாலயத்திலே பிரவேசித்தபோது பிள்ளைகள் என்ன செய்தார்கள்?
தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா என்று ஆர்ப்பரித்தார்கள் (மத்தேயு 21 : 15)

10. கர்த்தராகிய இயேசு தேவாலயத்திலே பிரவேசித்தபோது பிரதான ஆசாரியரும், வேதபாரகரும் ஏன் கோபமடைந்தார்கள்?
கர்த்தராகிய இயேசு செய்த அதிசயங்களையும் தாவீதின் குமாரனுக்கு ஓசன்னா என்று தேவாலயத்திலே ஆர்ப்பரிக்கிற பிள்ளைகளையும் கண்டு கோபமடைந்தார்கள் (மத்21:15)

11. தேவாலயத்தில் ஆர்ப்பரிக்கிற பிள்ளைகளை கண்டு கோபமடைந்த பிரதான ஆசாரியரும், வேதபாரகரும் இயேசுவிடம் என்ன சொன்னார்கள்? இயேசு அவர்களுக்குக் கொடுத்த பதில் என்ன?
கோபமடைந்த பிரதான ஆசாரியரும், வேதபாரகரும், ''பிள்ளைகள் ஆர்ப்பரிக்கிறதைக் கேட்கிறீரோ'' என்றார்கள். அதற்கு இயேசு, ''ஆம், கேட்கிறேன். குழந்தைகளுடைய வாயினாலும், பாலகருடைய வாயினாலும் துதி உண்டாகும்படி செய்தீர் என்பதை நீங்கள் ஒருக்காலும் வாசிக்கவில்லையா'' என்றார் ( மத். 21: 16).

**VII** *<u>சுருக்கமான விடையளி</u>* : (5 Marks)

**1.** கர்த்தராகிய இயேசு கழுதையின் மேல் பவனி வருகிறதைக் குறித்து சகரியா தீர்க்கதரிசி உரைத்த தீர்க்கதரிசனம் என்ன?
சீயோன் குமாரத்தியே, மிகவும் களிகூறு; எருசலேம் குமாரத்தியே கெம்பீரி; இதோ, உன் ராஜா உன்னிடத்தில் வருகிறார் ; அவர் நீதியுள்ளவரும், இரட்சிக்கிறவரும், தாழ்மையுள்ளவரும், கழுதையின் மேலும், கழுதைக் குட்டியாகிய மறியின் மேலும் ஏறி வருகிறவருமாயிருக்கிறார் (சகரியா 9 :9).

**2.** கர்த்தராகிய இயேசு ஒலிவமலைக்கு அருகான பெத்பகேயுக்கு வந்தபோது சீஷரில் இரண்டு பேரை அழைத்து அவர்களுக்கு கொடுத்த கட்டளை என்ன?
இயேசுவானவர் சீஷரில் இரண்டுபேரை நோக்கி, உங்களுக்கு எதிரே இருக்கிற கிராமத்துக்குப் போங்கள். போனவுடனே அங்கே ஒரு கழுதையையும், அதனருகே ஒரு குட்டியையும் கட்டியிருக்கக் காண்பீர்கள். அவைகளை அவிழ்த்து என்னிடத்தில் கொண்டு வாருங்கள். ஒருவன் உங்களுக்கு ஏதாகிலும் சொன்னால், இவைகள்; ஆண்டவருக்கு வேண்டுமென்று சொல்லுங்கள். உடனே அவைகளை அனுப்பிவிடுவான் என்று சொல்லி அவர்களுக்குக் கட்டளையிட்டு அனுப்பினார் (மத். 21 : 2, 3).

**3.** கர்த்தராகிய இயேசு தேவாலயத்தை எவ்வாறு சுத்திகரித்தார்?
இயேசு தேவாலயத்தில் பிரவேசித்து, ஆலயத்திலே விற்கிறவர்களும், கொள்ளுகிறவர்களுமாகிய யாவரையும் வெளியே துரத்தி, காசுக்காரருடைய பலகைகளையும், புறா விற்கிறவர்களுடைய ஆசனங்களையும் கவிழ்த்து, ''என்னுடைய வீடு ஜெபவீடு என்னப்படும் என்று எழுதியிருக்கிறது; நீங்களோ அதைக் கள்ளர் குகையாக்கினீர்கள்'' என்று சொல்லி தேவாலயத்தை சுத்திகரித்தார் (மத். 21 : 12, 13).

**VIII** *<u>போதனை</u>*: (2 ½ Marks)

கர்த்தராகிய இயேசு ராஜாதி ராஜாவாயிருப்பினும் சாந்தகுணமுள்ளவராய் ஒரு கழுதையின் மேல் ஏறிச் சென்றார். தம்முடைய பிள்ளைகளும் தம்மைப் போலத் தாழ்மையுள்ளவர்ளாகவும், சாந்தகுணமுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும் என அவர் எதிர்பார்க்கிறார்.

*********

# கர்த்தராகிய இயேசு தம் சீஷர்களின் கால்களைக் கழுவியது

(யோவான் 13 : 1 - 17)

**I** *மனப்பாட வசனம் :* (2 ½ Marks)

மத்தேயு 20:28

அப்படியே, மனுஷகுமாரனும் ஊழியங்கொள்ளும்படி வராமல், ஊழியஞ்செய்யவும், அநேகரை மீட்கும்பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் என்றார்.

**II** *பொருத்துக :* (1 Mark)

1. இயேசு - தேவனிடத்திலிருந்து வந்தவர் (யோவான் 13 : 3)
2. இயேசு - தேவனிடத்திற்குப் போகிறவர் (யோவான் 13 : 3)
3. இயேசு - போதகர் (யோவான் 13 : 13)
4. யூதாஸ்காரியோத்து - பிசாசினால் தூண்டப்பட்டவன் (யோவான் 13 : 2)
5. யூதாஸ்காரியோத்து - காட்டிக்கொடுத்தவன் (யோவான் 13 : 2, 11)

**III** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

1. நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் __________ .
2. என் கால்களை மாத்திரமல்ல, என் __________ என் __________ கூடக் கழுவவேண்டும்.
3. நீங்கள் என்னைப் __________ என்றும் __________ என்றும் சொல்லுகிறீர்கள் என்று இயேசு சொன்னார்.
4. இயேசு, நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு __________ காண்பித்தேன்.
5. __________ தன் எஜமானிலும் பெரியவனல்ல __________ தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல.
6. இயேசு தம் சீஷர்களின் கால்களைக் கழுவியது, அவருடைய மிகுந்த __________ காட்டுகிறது.

**விடைகள்**

1. பங்கில்லை (யோவான் 13 : 8)
2. கைகளையும், தலையையும் (யோவான் 13 : 9)
3. போதகர், ஆண்டவர் (யோவான் 13 : 13)
4. மாதிரியைக் (யோவான் 13 : 15)
5. ஊழியக்காரன், அனுப்பப்பட்டவன்(யோவான் 13:16)
6. தாழ்மையைக் (பாடத்திட்டம்)

**IV** *ஒரே வார்த்தையில் விடை எழுது :* (2 Mark)

1. இயேசுவைக் காட்டிக்கொடுக்கும்படி யூதாஸின் இருதயத்தைத் தூண்டியது யார்?
   பிசாசு யோவான் 13 : 2)
2. 'ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவலாமா' என்றது யார்?
   பேதுரு (யோவான் 13 : 6)
3. தன்னுடைய கால்களைக் கழுவ வந்த இயேசுவை தடை செய்த சீஷன் யார்?
   பேதுரு (யோவான் 13 : 6)
4. இயேசு சீஷர்களின் கால்களை கழுவியது எதைக் காட்டுகிறது?
   தாழ்மை . (பாடத்திட்டம்)

## V யார், யாரிடம் கூறியது : (3 Marks)

1. a. "ஆண்டவரே, நீர் என் கால்களைக் கழுவலாமா? " (யோவான் 13 : 6)
   b. "நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவப்படாது " (யோவான் 13 : 8)
   யார் : பேதுரு
   யாரிடம் : இயேசுவிடம்

2. "நான் உன்னை கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை " (யோவான் 13 : 8)
   யார் : இயேசு
   யாரிடம் : பேதுருவிடம்

3. "ஆண்டவரே, என் கால்களை மாத்திரமல்ல, என் கைகளையும் என் தலையையும் கூடக் கழுவ வேண்டும்" (யோவான் 13 : 9)
   யார் : பேதுரு
   யாரிடம் : இயேசுவிடம்

4. a. "முழுகினவன் தன் கால்களைமாத்திரம் கழுவவேண்டியதாயிருக்கும்" (யோவான் 13 : 10)
   b. "நீங்களெல்லாரும் சுத்தமுள்ளவர்களல்ல" (யோவான் 13 : 11)
   யார் : இயேசு
   யாரிடம் : பேதுருவிடம்

5. "நீங்கள் என்னைப் போதகரென்றும், ஆண்டவரென்றும் சொல்லுகிறீர்கள், நீங்கள் சொல்லுகிறது சரியே" (யோவான் 13 : 13)
   யார் : இயேசு
   யாரிடம் : சீஷர்களிடம்

6. "நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள்" (யோவான் 13 : 14)
   யார் : இயேசு
   யாரிடம் : சீஷர்களிடம்

## V1 ஓரிரு வாக்கிய□களில் விடையளி :

1. பஸ்கா பண்டிகைக்கு முன்னே, இயேசு இவ்வுலகத்தை விட்டுப் பிதாவினிடத்திற்குப் போகும்படியான தம்முடைய வேளை வந்ததென்று அறிந்து, என்ன செய்தார்?
   இயேசு, தாம் இவ்வுலகத்திலிருக்கிற தம்முடையவர்களிடத்தில் அன்பு வைத்தபடியே, முடிவுபரியந்தமும் அவர்களிடத்தில் அன்பு வைத்தார் (யோவான் 13 : 1).

2. இயேசு எவைகளை அறிந்தபடியினால் சீஷர்களின் கால்களை கழுவத் தொடங்கினார்?
   இயேசு, தம்முடைய கையில் பிதா எல்லாவற்றையும் ஒப்புக்கொடுத்தாரென்பதையும், தாம் தேவனிடத்திலிருந்து வந்ததையும், தேவனிடத்திற்குப் போகிறதையும் இயேசு அறிந்தபடியினால் சீஷர்களின் கால்களை கழுவத் தொடங்கினார் (யோவான் 13 : 13).

3. இயேசு சீமோன் பேதுருவின் கால்களைக் கழுவ வந்தபோது பேதுரு கூறியது என்ன?
   பேதுரு இயேசுவிடம், ''ஆண்டவரே நீர் என் கால்களைக் கழுவலாமா'' என்று கூறினான் (யோவான் 13 : 6).

4. 'ஆண்டவரே நீர் ஒருக்காலும் என் கால்களைக் கழுவப்படாது' என்று பேதுரு இயேசுவிடம் கூறியபோது, அவருடைய மறுமொழி என்ன?
   'நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை' என்று இயேசு கூறினார் (யோவான் 13 : 8).

5. நான் உன்னைக் கழுவாவிட்டால் என்னிடத்தில் உனக்குப் பங்கில்லை என்று கூறிய இயேசுவுக்கு பேதுரு கூறியது என்ன?
   பேதுரு இயேசுவிடம், ''ஆண்டவரே என் கால்களை மாத்திரமல்ல, என் கைகளையும், என் தலையையும்கூடக் கழுவ வேண்டும்'' என்றான் (யோவான் 13: 9).

6. என் கால்களை மாத்திரமல்ல, என் கைகளையும் என் தலையையும்கூட கழுவ வேண்டுமென்று கூறிய பேதுருவுக்கு இயேசு கூறியது என்ன?
   இயேசு பேதுருவை நோக்கி, முழுகினவன் தன் கால்களை மாத்தரம் கழுவ வேண்டியதாயிருக்கும். மற்றப்படி அவன் முழுவதும் சுத்தமாயிருக்கிறான். நீங்களும் சுத்தமாயிருக்கிறீர்கள். ஆகிலும் எல்லாரும் அல்ல என்றார் (யோவான் 13 : 10).

7. நீங்களெல்லாரும் சுத்தமுள்ளவர்கள் அல்ல என்று இயேசு சீஷர்களிடம் கூறியதற்குக் காரணம் என்ன?

தம்மைக் காட்டிக்கொடுக்கிறவனை இயேசு அறிந்திருந்தபடியினால் நீங்களெல்லாரும் சுததமுள்ளவர்கள் அல்ல என்று சீஷர்களிடம் கூறினார் (யோவான்13: 11).

**VII** *சுருக்கமான விடையளி* : (5 Marks)

**1.** பஸ்கா பண்டிகைக்கு முன்னே, போஜனம் பண்ணிக் கொண்டிருக்கையில், தாம் தேவனிடத்திற்குப் போகிறதை அறிந்து இயேசு என்ன செய்யத் தொடங்கினார்?

இயேசு, போஜனத்தை விட்டெழுந்து, வஸ்திரங்களைக் கழற்றிவைத்து, ஒரு சீலையை எடுத்து, அரையிலே கட்டிக்கொண்டு, பாத்திரத்தில் தண்ணீர் வாரத்து, சீஷர்களுடைய கால்களைக் கழுவவும், தாம் கட்டிக்கொண்டிருந்த சீலையினால் துடைக்கவும் தொடங்கினார் (யோவான் 13 : 5).

**2.** சீஷர்களின் கால்களைக் கழுவின இயேசு அதன் மூலம் அவர்களுக்குக் கற்பித்த பாடம் என்ன?

இயேசு, ஆண்டவரும், போதகருமாகிய நானே உங்கள் கால்களைக் கழுவினதுண்டானால், நீங்களும் ஒருவருடைய கால்களை ஒருவர் கழுவக்கடவீர்கள். நான் உங்களுக்குச் செய்ததுபோல நீங்களும் செய்யும்படி உங்களுக்கு மாதிரியைக் காண்பித்தேன். மெய்யாகவே, மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன், ஊழியக்காரன் தன் எஜமானிலும் பெரியவனல்ல. அனுப்பப்பட்டவன் தன்னை அனுப்பினவரிலும் பெரியவனல்ல. நீங்கள் இவைகளை அறிந்திருக்கிறபடியினால் இவைகளைச் செய்வீர்களானால் பாக்கிவான்களாயிருப்பீர்கள் என்றார் (யோவான் 13:14-17).

**VIII** *போதனை*: (2 ½ Marks)

ஆண்டவரும் போதகருமாகிய இயேசு, சீஷர்களுடைய கால்களைக் கழுவும் அளவுக்குத் தம்மைத் தாழ்த்தியது போல, நாமும் நம்மைத் தாழ்த்தி பிறருக்கு ஊழியஞ் செய்ய வேண்டும்..

**********

# கெத்சமனேயில் கர்த்தராகிய இயேசு

(மத்தேயு 26 : 39,42,44; மாற்கு 14:32-42; லூக்கா 22:39-46)

**I** *மனப்பாட வசனம் :* (2 ½ Marks)

மத்தேயு 26 : 41.

நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது என்றார்

ரோமர் 8 : 26.

அந்தப்படியே ஆவியானவரும் நமது பலவீனங்களில் நமக்கு உதவி செய்கிறார். நாம் ஏற்றபடி வேண்டிக்கொள்ள வேண்டியதின்னதென்று அறியாமலிருக்கிறபடியால், ஆவியானவர்தாமே வாக்குக்கடங்காத பெருமூச்சுகளோடு நமக்காக வேண்டுதல்செய்கிறார்

**II** *பொருத்துக :* (1 Mark)

| | | | | |
|---|---|---|---|---|
| **1.** | இயேசு | - | கெத்சமனே | (மாற்கு 14 : 32) |
| **2.** | இயேசு | - | மூன்றுமுறை ஜெபம் | (மத்தேயு 26 : 44) |
| **3.** | தூதன் | - | பெலப்படுத்துதல் | (லூக்கா 22 : 43) |
| **4.** | சீஷர்கள் | - | நித்திரை | (லூக்கா 22 : 45, 46) |
| **5.** | ஆவி | - | உற்சாகமுள்ளது | (மாற்கு 14 : 38) |
| **6.** | ஜெபம் | - | கல்லெறி தூரம் | (லூக்கா 22 : 41) |
| **7.** | வேர்வை | - | இரத்தத்தின் பெருந்துளி | (லூக்கா 22 : 44) |
| **8.** | மாம்சம் | - | பலவீனமுள்ளது | (மாற்கு 14 : 38) |
| **9.** | துக்கம் | - | நித்திரை | (லூக்கா 22 : 45) |

**III** *கோடிட்ட இட□களை நிரப்புக :* (1 Mark)

**1.** இயேசுவும் அவருடைய சீஷர்களும் ஜெபம்பண்ணும்படி __________ என்னப்பட்ட இடத்திற்கு வந்தார்கள்.

**2.** வானத்திலிருந்து __________ தோன்றி இயேசுவை பலப்படுத்தினான்.

**3.** இயேசு ஜெபம்பண்ணினபோது அவருடைய __________ இரத்தத்தின் பெருந்துளிகளாய் தரையில் விழுந்தது.

**4.** இயேசு கெத்சமனேயில் சீஷர்களைவிட்டு __________ தூரம் போய் முழங்காற்படியிட்டு ஜெபம் பண்ணினார்.

**5.** சீஷர்களுடைய கண்கள் மிகுந்த __________ அடைந்திருந்தபடியால், தாங்கள் மறுமொழியாக இயேசுவிடம் சொல்வது இன்னதென்று அறியாதிருந்தார்கள்.

விடைகள்

1. கெத்சமனே (மாற்கு 14 : 32)
2. ஒரு தூதன் (லூக்கா 22 : 43)
3. வேர்வை (லூக்கா 22 : 44)
4. கல்லெறி (லூக்கா 22 : 41)
5. நித்திரைமயக்கம் (மாற்கு 14 : 40)

**IV** *ஒரே வார்த்தையில் விடை எழுது :* (2 Mark)

**1.** தாம் காட்டிக கொடுக்கப்பட்ட ராத்திரியில் ஜெபிக்கச் சென்ற இடம் எது?

கெத்சமனே தோட்டம் மாற்கு 14 : 32)

**2.** இயேசு கெத்சமனேயில் ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தபோது அவரை பலப்படுத்தியது யார்?

தேவதூதன் (லூக்கா 22 : 43)

**3.** இயேசு கெத்சமனேயில் எத்தனை முறை ஜெபித்தார்?

3 முறை (மத்தேயு 26 : 44)

4. ‘ஒரு மணி நேரமாவது விழித்திருக்கக்கூடாதா’ என்று இயேசு யாரிடம் கேட்டார்?
பேதுரு . (மாற்கு 14 : 37)

5. இயேசு பேதுருவையும், யோவானையும், யாக்கோபையும் கெத்சமனேக்குக் கூட்டிக்கொண்டு போய் ஜெபிக்கும்போது என்ன செய்யத் தொடங்கினார்?

திகிலடையவும் வியாகுலப்படவும் (மாற்கு 14 : 33)

6. இயேசு தமது வழக்கத்தின்படியே சீஷர்களுடன் ஜெபம்பண்ணும்படி எந்த மலைக்குப் போனார்?
ஒலிவ மலை (லூக்கா 22 : 39, 40)

V *யார், யாரிடம் கூறியது :* (2 ½ Marks)

1. “இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும்; ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது? ” (மத்தேயு 26 : 39)
யார் : இயேசு
யாரிடம் : பிதாவிடம்

2. “என் பிதாவே, இந்தப் பாத்திரத்தில் நான் பானம்பண்ணினாலொழிய இது என்னைவிட்டு நீங்கக்கூடாதாகில், உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது ” (மத்தேயு 26 : 42)
யார் : இயேசு
யாரிடம் : பிதாவிடம்

3. “நான் ஜெபம் பண்ணுமளவும் இங்கே உட்கார்ந்திருங்கள்” (மாற்கு 14 : 32)
யார் : இயேசு
யாரிடம் : சீஷர்களிடம்

4. “என் ஆத்துமா மரணத்துக்கேதுவான துக்கங்கொண்டிருக்கிறது. நீங்கள் இங்கே தங்கி, விழித்திருங்கள்” (மாற்கு 14 : 34)
யார் : இயேசு
யாரிடம் : பேதுரு, யாக்கோபு, யோவானிடம்

5. “இந்தப் பாத்திரத்தை என்னிடத்திலிருந்து எடுத்துப்போடும். ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது” (மாற்கு 14 : 36)
யார் : இயேசு
யாரிடம் : பிதாவிடம்

6. “நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு ஜெபம் பண்ணுங்கள்” (லூக்கா 22 : 40)
யார் : இயேசு
யாரிடம் : பேதுரு, யாக்கோபு, யோவானிடம்

7. “நீங்கள் நித்திரை பண்ணுகிறதென்ன? சோதனைக்குட்படாதபடிக்கு எழுந்திருந்து ஜெபம்பண்ணுங்கள்” (லூக்கா 22 : 46)
யார் : இயேசு
யாரிடம் : பேதுரு, யாக்கோபு, யோவானிடம்

8. a. “சீமோனே, நித்திரை பண்ணுகிறாயா?” (மாற்கு 14 : 37)
b. “ஒரு மணிநேரம் நீ விழித்திருக்கக்கூடாதா?” (மாற்கு 14 : 37)
c. “ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது” (மாற்கு 14 : 38)
யார் : இயேசு
யாரிடம் : பேதுருவிடம்

9. a. “இனி நித்திரை பண்ணி இளைப்பாறுங்கள்;” (மாற்கு 14 : 41)
b. “போதும், வேளை வந்தது “ (மாற்கு 14 : 41)
c. “இதோ, மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிறார்” ( மாற்கு 14 : 41)
d. “என்னைக் காட்டிக்கொடுக்கிறவன், இதோ, வந்துவிட்டான், எழுந்திருங்கள், போவோம்” (மாற்கு 14 : 42)
யார் : இயேசு
யாரிடம் : பேதுரு, யாக்கோபு, யோவானிடம்

**V1** <u>ஓரிரு வாக்கிய□களில் விடையளி :</u>

1. 'நான் ஜெபம்பண்ணுமளவும் இங்கே உட்கார்ந்திருங்கள்' என்று இயேசு எங்கே யாரிடம் சொன்னார்?

   இயேசு கெத்சமனே என்னப்பட்ட இடத்திற்கு வந்தபோது தம்முடைய சீஷர்களிடம் சொன்னார் (மாற்கு 14 : 32).

2. இயேசு கெத்சமனேயில் ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தபோது இவரை பலப்படுத்தியது யார்?

   வானத்திலிருந்து ஒரு தூதன் தோன்றி, அவரைப் பலப்படுத்தினான் (லூக் 22:43).

3. இயேசு யார் யாரை தம்மோடு கெத்சமனேக்கு கூட்டிக்கொண்டு போய் திகிலடையவும், வியாகுலப்படவும் தொடங்கினார்?

   பேதுருவையும், யாக்கோபையும், யோவானையும் கூட்டிக்கொண்டுபோய் திகிலடையவும், வியாகுலப்படவும் தொடங்கினார் (மாற்கு 14 : 33).

4. இயேசு கெத்நமனேயில் மிகவும் வியாகுலப்பட்டு அதிக ஊக்கத்தோடே ஜெபம்பண்ணினபோது என்ன சம்பவித்தது?

   இயேசுவின் வேர்வை இரத்தத்தின் பெருந்துளிகளாய்த் தரையிலே விழுந்தது (லூக்கா 22 : 44).

5. இயேசு கெத்சமனேயில் இரண்டாம் முறை ஜெபம் பண்ணிவிட்டு திரும்பி வந்தபோது பேதுரு, யாக்கோபு, யோவான் என்ன செய்து கொண்டிருந்தார்கள்?

   இவர்கள் மூவரும் நித்திரை பண்ணிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் கண்கள் மிகவும் நித்திரைமயக்கம் அடைந்திருந்தபடியால், தாங்கள் மறுமொழியாக அவருக்குச் சொல்வது இன்னதென்று அறியாதிருந்தார்கள் (மாற்கு 14 : 40).

**VI1** <u>சுருக்கமான விடையளி</u> : (5 Marks)

**1.** இயேசு கெத்சமனேயில் எத்தனை முறை ஜெபித்தார்? அவர் என்ன சொல்லி ஜெபித்தார்?

   இயேசு கெத்சமனேயில் மூன்று முறை ஜெபித்தார்.

   i. இயேசு முகங்குப்புற விழுந்து, என் பிதாவே, இந்த பாத்திரம் என்னைவிட்டு நீங்கக்கூடுமானால் நீங்கும்படி செய்யும். ஆகிலும் என் சித்தத்தின்படியல்ல உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று முதலாந்தரம் ஜெபம்பண்ணினார் (மததேயு 26 : 39).

   ii. இரண்டாந்தரம் போய் என் பிதாவே, இந்தப் பாத்திரத்தில் நான் பானம்பண்ணினாலொழிய இது என்னைவிட்டு நீங்கக்கூதாகில் உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது என்று ஜெபித்தார் (மத்தேயு 26 : 42).

   iii. அவர் மறுபடியும் அவர்களை விட்டுப்போய் மூன்றாந்தரமும் அந்த வார்த்தைகளையே சொல்லி ஜெபித்தார் (மத்தேயு 26 : 44).

**2.** இயேசு மூன்றாந்தரம் ஜெபம்பண்ணி முடித்தபின்பு நித்தரை மயக்கமாயிருந்த சீஷர்களிடம் என்ன சொன்னார்?

   இயேசு நித்திரை மயக்கமாயிருந்த சீஷர்களிடம், "இனி நித்திரைபண்ணி இளைப்பாறுங்கள் ; போதும், வேளை வந்தது, இதோ, மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிறார்.

   என்னைக் காட்டிக்கொடுக்கிறவன், இதோ, வந்துவிட்டான், எழுந்திருங்கள் போவோம்" என்றார் (மாற்கு 14 : 41, 42).

**VII1** <u>போதனை</u>: (2 ½ Marks)

நாம் அக்கினி சோதனைகளில் ஜெயமெடுக்க வேண்டுமாயின், கர்த்தராகிய இயேசு ஜெபித்தது போல் நாமும் ஜெபிக்க வேண்டும்.

*********